Christian Historical Society
Focus Series - 06

# தென்னிந்திய திருச்சபை வரலாறு

சபை ஒருமைப்பாடும் - பின்னணியும்

அலெக்ஸ்சாண்டர்



கிறிஸ்தவ வரலாற்று சங்கம்
திருநெல்வேலி

# தென்னிந்திய திருச்சபை வரலாறு

---

## சபை ஒருமைப்பாடும் - பின்னணியும்

ஆக்கியோன்

அலெக்ஸ்சாண்டர்

மின்னூலாக்கம் : சுஜித். செ

Christian Historical Society
Focus Series - 06

**Contact us**

Tinnevelly Christian Historical Society
2-2-3(4), North Street,
Bungalow Surandai — 627859
Tenkasi District
Email : christianhistorical@gmail.com
Call : 04633 290401
+91 9176780001
+91 7538812218

**christianhistoricalsociety.in**
**tchsportal.co.in**

## நூல் அறிமுகம்

**தென்னிந்திய திருச்சபை** - பாரம்பரியமும், சீர்திருத்தமும் இரண்டற கலந்த, பரமனின் நோக்கத்தை தனதாக்கி கொண்ட, உலகமெங்கும் இருக்கும் அனைத்து சபைகளுக்கும் ஒரு எடுத்துகாட்டாய் விளங்கும் ஒருமைபாட்டின் திருச்சபையாகும். எத்தனை புத்தகங்கள் தென்னிந்திய திருச்சபை வரலாற்றை வெளிக்கொணர முயற்சிகள் எடுத்துகொண்டாலும், தென்னிந்திய திருச்சபை வரலாறு தனக்கென்ற ஒரு தனித்துவத்தை காட்டிக்கொண்டே இருக்கும். வரலாற்று பேராசிரியர் அலெக்ஸ்சாண்டர் எழுதிய இப்புத்தகம் தென்னிந்திய திருச்சபையின் ஆதி உருவாக்கத்தை பற்றிய ஒரு விளக்கத்தையும், பல்வேறு சபை பிரிவுகள் எப்படி ஒன்றுபட்டன மற்றும் அவற்றின் வரலாறுகள் போன்றவற்றை நமக்கு அளிக்கிறது. கிறிஸ்துவானவர் எப்படி தன் அவயங்களை ஒன்றிணைத்து தனது செயல்பாட்டினை இந்த உலகுக்கு வெளிபடுத்தினார் என்பதற்கு தென்னிந்திய திருச்சபையின் இந்த அரிய வரலாறு ஒரு சாட்சியே. இப்புத்தகத்தை வாசிப்போர் தென்னிந்திய திருச்சபையின் ஐக்கிய காலகட்டத்திற்கே சென்று திரும்புவர் என்பதற்கு ஐயமில்லை. ஆசிரியர் அலெக்ஸ்சாண்டர் ஒரு சிறந்த வரலாற்று ஆசிரியர் என்பதை தாண்டி தமிழில் தனது கருத்துக்களை சிறந்த முறையில் பாமரனுக்கும் வெளிபடுத்த வல்லவர் என்பதை இப்புத்தகத்தின் ஓட்டத்தில் உணரலாம். தென்னிந்திய திருச்சபைக்கு பிரச்சனைகள் புதிதல்ல என்பதை உணர்த்துவதோடு, வெறும் சபை என்ற நிலையை தாண்டி அன்பு, ஒருமைப்பாடு, பக்தி என்பதில் தென்னிந்திய திருச்சபை நிலைத்து நின்றது என்பதை விவரிக்கும் ஒரு அற்புதமான நூல் இந்நூல். இந்த புத்தகத்தை வாசிக்கும் அனைவரிடமும் தூய ஆவியானவர் இடைபடுவாராக.

**பரமனின் பாதையில்**

**செ. சுஜித்**

**திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம்**

## இந்த புத்தகத்தில் அடங்கியவைகள்


நூன்முகம் ... *9*

ஒருமைப்பாட்டின் முன்னணி ... *11*

இணைந்த சபைகளின் பாரம்பரியமும் கொள்கைகளும் ... *30*

    ஆங்கிலேய சபை ... *30*

    தென் இந்திய ஐக்கிய சபை ... *38*

    மெதடிஸ்து சபை ... *42*

ஒருமைப்பாடு தென் இந்தியாவில் ஏற்பட்ட வரலாறு ... *45*

முதல் இருபத்தைந்து ஆண்டுகள் ... *82*

தென் இந்திய திருச்சபையின் எதிர்நோக்கு ... *112*

    தென் இந்திய திருச்சபையின் திருமண்டிலங்கள் ... *125*

அனுபந்தம் ... *125*

# நூன்முகம்

தென் இந்திய திருச்சபையின் வரலாறு மிகவும் கவர்ச்சிகரமான ஒன்று. ஒன்றோடொன்று சேரக்கூடாத சபைகள் ஒன்றுபட்டதை இந்த ஒருமைப்பாட்டில் காண்கிறோம் மேலும், எவர்கள் இத்தகைய ஒருமைப்பாட்டுக்கு எதிராயிருந்தனரோ அவர்களில் பெரும்பான்மையோர் ஒருமைப்பாட்டுக்காகப் போராட முற்பட்டனரென்பதை அறியும் பொழுது இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாமே ஆவியானவரைக் கொண்டு இவ்வாறு நடப்பித்துள்ளாரென்பதைத் தெளிவுறக் காண்கிறோம். பேராயர் ஆளுகை முறையுள்ள சபைகளும் பேராயர் ஆளுகை முறை இல்லாத சபைகளும் ஒருமைப்பட்ட அற்புத செயலைத்தான் தென் இந்திய திருச்சபை ஒருமைப்பாடு நிரூபித்துக் காட்டுகிறது. தென் இந்திய திருச்சபையின் முதல் இருபத்தைந்து ஆண்டு காலம் ஒருமைப்பாட்டின் மூலம் எத்தகைய அரிய செயல்கள் சாதிக்க முடியுமென்பதை எடுத்துக்காட்டி விட்டது. இத்தகைய சிறப்பு வரலாற்றை எழுதுவதற்கு என்னை அழைத்து வழி நடத்திய ஆண்டவரை நான் துதிக்கிறேன். எனக்கு இந்த வாய்ப்பைத் தந்துதவிய மறைத்திரு தானியேல் ஆபிரகாம் ஐயரவர்களுக்கும் என் உள்ளத்திலிருந்து நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

**ஜே. பா. அலெக்சாந்தர்**
**அரசரடி**

# ஒருமைப்பாட்டின் முன்னணி

முதல் நூற்றாண்டில் ஒரே சமூகமாக திருச்சபை வளர்ந்தது. இப்புதிய சமூகத்திலுள்ளவர்கள் ஏனையோரால் '**கிறிஸ்தவர்கள்**' என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். இயேசுவே கிறிஸ்து என்னும் ஒரே விசுவாசத்தால் அவர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். கிறிஸ்தவர்கள் உரோமை அரசாங்கத்தில் மூன்றாம் இனமாக எண்ணப்பட்டார்கள்.

உரோமர் முதலாம் இனம்.

யூதர்கள் இரண்டாம் இனம்,

கிறிஸ்தவர்கள் மூன்றாம் இனம்.

கிறிஸ்தவர்கள் ஒரு இனமாக வாழ்ந்தார்கள் என்பதற்கையமில்லை. கிறிஸ்தவர்கள் ஒன்றாய் வாழ்ந்ததற்கு ஒரே விசுவாசம் மட்டுமல்ல, அன்பின் கூட்டுறவும் காரணமாகும். திருச்சபையின் தலையாகிய கிறிஸ்து தமது சீடர்களிடம் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பு கூர்ந்தால், நீங்கள் என் சீஷரென்று எல்லாரும் அதனால் அறிந்து கொள்வார்கள்" (யோ. 13: 35) என்று கூறினதற்கிசைய கிறிஸ்தவர்கள் வாழ்ந்தனர். கிறிஸ்தவர்களில் பல குறைவுகள் இருந்தாலும் சகோதர அன்பு மற்றவர்கள் காணத்தக்க ஒரு பண்பாயிருந்தது.

1 தெச. 4: 9, 10 –இல் பவுல் இதைக் குறித்து எழுதியுள்ளார்.

"சகோதர சிநேகத்தைப்பற்றி நான் உங்களுக்கு எழுதுவது அவசியமில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்று கடவுளே உங்களுக்குப் போதித்திருக்கிறார். மக்கெதோனியா முழுவதிலுமுள்ள சகோதரரெல்லாருக்கும் நீங்கள் அப்படியே அன்பு பாராட்டுகிறீர்கள்." இத்தகைய அன்பிலே யூதனென்றோ, கிரேக்கனென்றோ, அடிமையென்றோ, எஜமானனென்றோ வேறுபாட்டுக்கு இடமில்லாதிருந்தது.

ஆதிச்சபையில் தங்கள் ஆஸ்திகளை விற்று பொதுவாய் அனுபவித்ததில் இது விளங்கினது. புறஜாதி கிறிஸ்தவர்கள் எருசலேமிலுள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்காக தர்ம பணம் சேகரித்து அனுப்பினதிலும் இது காணப்பட்டதும் அவர்கள் ஒருவரையொருவர் எவ்வளவாய் நேசிக்கிறவர்கள் என்று கிறிஸ்தவர்களல்லாதவர்கள் சாட்சி பகருவதற்கும் எதுவாயிருந்தது. தொழுகையிலும் ஆதி கிறிஸ்தவர்களுக்குள் ஒருமைப்பாடு காணப்பட்டது.

அவர்கள் ஏகமனதாய்த் தேவாலயத்தில் அனுதினமும் தரித்திருந்து, வீடுகளில் அப்பம் பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, கடவுளைத் துதித்து வந்தார்கள் (அப். 2: 46). மேலும், அவர்கள் அப்போஸ்தலர் உபதேசத்திலும் அன்னியோன்னியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபங்களிலும் தரித்திருந்தார்கள் (அப். 2: 42) என்று லூக்கா அவர்களுக்குள்ளிருந்த ஒருமைப்பாட்டை வர்ணிக்கிறார். திருமுழுக்கும் நற்கருணையுமாகிய இரு சாக்கிரமந்துகள் அவர்களை சபைக்குள் இணைத்தன.

திருமுழுக்கு வெளிப்படையானதாகவும் விசுவாசம் உள்ளானதாகவும் எண்ணப்பட்டது. திருமுழுக்கைப்பற்றிய பிரச்சினைகள் புதிய ஏற்பாட்டின் காலத்தில் எழுப்பப்படவில்லை. நற்கருணையும் ஆண்டவர் வருமளவும் அவருடைய மரணத்தைப்

பிரஸ்தாபம் பண்ணும் (1 கொ. 11: 26) ஒன்றாய் அனுசரிக்கப்பட்டது. அது ஒருமைப்பாட்டின் சாக்கிரமந்தாகவும் இருந்தது.

நாம் எல்லாரும் ஒரே அப்பத்தில் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம், ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம் (1 கொ. 10: 17) என்று பவுல் கூறியுள்ளார். சபை அமைப்பிலும் ஒருமைப்பாடு காட்சியளித்தது. உரோமை அரசாங்கத்தில் எங்கும் சபைகள் தோன்றின. ஓரளவில் அவை தனிச்சபைகளாய் விளங்கின. உரோமைச் சபை என்றும், அந்தியோகியா சபை என்றும் எருசலேம் சபை என்றும் தனித்தனியாக அவை அழைக்கப்பட்டன. எனினும் தூரம் அவைகளைப் பிரிக்கவில்லை.

எல்லாச் சபைகளிலும் பவுல் அதிகாரம் செலுத்தக் கூடியவராயிருந்தார். நிருபங்கள் மூலமாகவும், நேரடியாகவும் சபைகளைப் போதிக்கவும், எச்சரிக்கவும், மூப்பர்களை ஏற்படுத்தவும், பிரதிநிதிகளை அனுப்பவும் அவர் உரிமையுள்ளவராயிருந்தார். எல்லா சபைகளையும் பற்றி கவலையும் அவரை நாள்தோறும் பெருக்கினதாகவும் அவர் கூறியுள்ளார் (1 கொ. 11: 28). கி. பி. 70இல் எருசலேம் வீழ்ச்சி அடைவதற்கு முன் சிறப்பாக கி. பி. 30 முதல் 44 வரை எருசலேம் சபை முக்கியத்வம் வகித்து முழுச்சபையையும் இணைக்கும் ஒரு வல்ல கருவியாய் அமைந்திருந்தது.

பவுல் பல இடங்களில் சென்று நற்செய்தி அறிவித்து சபைகளை ஏற்படுத்தினாலும் எருசலேமுக்குத் திரும்பி வந்து தன் வழியத்தைப் பற்றிய அறிக்கையைக் , கூறினார். எருசலேம் தாய்ச் சபையாக விளங்கினது. புதிய ஏற்பாட்டு இறையியல் எண்ணத்திலும் திருச்சபையைப் பற்றிய ஒருமைப்பாட்டு விளக்கத்தைக் காணலாம். சபை என்னும் சொல் ஒரு தனிச் சபையையும் முழுச் சபையையும் குறிக்கிறதாக பயன்படுத்தப்பட்டது. அப். 9: 31இல் முழுச்சபையைக் குறிக்க ’சபை’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ‘யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபை சமாதானமுற்று பெருகி வந்தது’.

புதிய ஏற்பாட்டு நுலாசிரியர்கள் சபையைப் புதிய இஸ்ரவேலாக நம்பி பழைய ஏற்பாட்டுப் பழைய இஸ்ரவேலின் தொடர்ச்சியாக எண்ணினார்கள். சபையானது ஒரே மீட்கப்பட்ட, கூட்டமாகப் பல தனித்தனிச் சபைகளாக இயங்கினது.

திருச்சபையின் ஒருமைப்பாட்டு இறையியல் எண்ணத்தைச் சிறப்புடன் எடுத்துக் காட்டிய பெருமை பவுல் அப்போஸ்தலனுக்கே உரியது. புதிய மனிதன், கட்டடம், சரீரம் என்னும் உருவகங்களைக் கொண்டு பவுல் திருச்சபையின் ஒருமைப்பாட்டை விளக்கியுள்ளார் (கலா. 3: 28, எபே. 2:19–22, 1 கொ. 12). சகலமும் கிறிஸ்துவுக்குள் கூட்டிச் சேர்க்கப்பட வேண்டுமென்பது கடவுளின் திட்டம் என்பதையும் பவுல் வலியுறுத்துகின்றார் (எபே. 1: 10).

திருச்சபையின் ஆரம்ப நூற்றாண்டுகளில் ஏற்பட்ட துன்ப காலத்தில் பேராயர் ஆளுகை முறையில் திருச்சபை ஒருமைப்பாட்டைக் கண்டது. முதலாம் நூற்றாண்டில் மூப்பர்களே பேராயர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். எபேசுவிலிருந்த மூப்பர்களைப் பார்த்து கடவுள் தமது சுய இரத்தத்தினால் சம்பாதித்துக் கொண்ட **தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களை அத்தியட்சர்களாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்** என்று பவுல் கூறியுள்ளார் (அப். 20: 28) தென் இந்தியாவில் தோமா அப்போஸ்தலன் ஏழு சபைகளை நிறுவியபின் அவற்றை மேற்பார்வையிட இரண்டு மூப்பர்களை ஏற்படுத்தினதாக பாரம்பரியத்தின்படி அறிகின்றோம். அவர்கள் பேராயர்களாகவும் எண்ணப்பட்டிருந்தனரா நாம் அறியோம். இரண்டாம் நூற்றாண்டில் சபைக்கு ஒரு பேராயர் இருந்தனரென்று அறிகிறோம். சான்றாக, இன்னாசியு அந்தியோகியாவின் பேராயராகவும், பாலிகார்ப்பு சிமிர்னாவின் பேராயராகவும் இருந்தனர். இவ்வாறு பேராயர் ஆளுகை முறை திருச்சபையில் வற்புறுத்தப்படலானது.

இன்னாசியுவின் நூல்களில் இத்தகைய அழுத்தத்தைக் காண்கிறோம். ‘‘**ஆண்டவர் பிதாவின் சித்தத்தின்படி அல்லாது ஒன்றும்**

**செய்யாதிருந்து. பிதாவோடு ஒன்றாயிருந்தது போல நீங்களும் பேராயர் மூப்பர் ஆகியோரின் சம்மதமில்லாமல் ஒன்றும் செய்யாதிருங்கள்**'' என்று மக்னீசியருக்கு எழுதின நிருபத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். "**பேராயர், மூப்பர், உதவிக்காரர் ஆகியோரில்லாமல் ஒரு சபை இயங்க முடியாது**'' என்று டிரால்லியருக்கு எழுதின நிருபத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். "**இயேசு கிறிஸ்து எங்கேயோ அங்கே கத்தோலிக்க சபை இருக்கிறது போல பேராயர் எங்கிருக்கிறாரோ அங்கே சபை கூடுவதாக**" என்று சிமிர்னா சபையினருக்கு எழுதின நிருபத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், ''**எவன் பேராயரை கனம் பண்ணுகிறானோ அவன் கடவுளை கனம் பண்ணுகிறான்**'' என்றும் அதே நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சபை பேராயரோடும் மூப்பரோடும், உதவிக்காரரோடும் இணைந்திருந்தால் ஒரு பாடகர் குழுவைப் போல் கடவுளுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலம் பாடலைப் பாடும் ஒரு பாட்டுக் கருவியாய் அமையும், என்று எபேசியருக்கு எழுதின நிருபத்தில் இன்னாசியு குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாம் நூற்றாண்டில் கார்த்தேஜ் பேராயராயிருந்த சிப்பிரியன் திருச்சபை ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டுமென்பதைப் பற்றி சிறப்பாய் எழுதியுள்ளார். திருச்சபை ஒரே சரீரமென்றும், பேராயரே அதன் விசுவாசத்தின் பாதுகாவலரென்றும், ஒருமைப்பாட்டைப்பற்றிய தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். சபைக்குப் புறம்பே மீட்பு இல்லையென்றும் அவர் கூறியிருக்கிறார். ஏனெனில் கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரை சபையிலேயே பொழிந்தருளினார். சபையைத் தாயாய்க் கொள்ளாதவன் கடவுளைத் தந்தையாகக் கொள்ளமுடியாதென்பதும் அவரது கூற்று. சபைகள் திருமண்டிலமாக அமைக்கப்பட்டு ஒரு திருமண்டிலப்பேராயரின்கீழ்இயங்கின. இவ்வாறு பல திருமண்டலங்கள் ஏற்பட்டன. தலைநகர்களிலுள்ள பேராயர்கள் தலைநகர் பேராயர்களாக **(Metrapolitans)** மாகாணங்களில் செயலாற்றினர். பின்னர், அந்தியோகியா, எருசலேம், அலெக்சாந்திரியா, கான்ஸ்தந்தினோபுரி,

உரோமை ஆகிய இடங்களிலுள்ள பேராயர்கள் பெரும் பேராயர்களாக **(Patriarchs)** ஏற்படுத்தப்பட்டனர்.

உரோமைப் பேராயர் பேதுருவின் பின்னடியாராக முதன்மையானவராக எண்ணப்பட்டார். உரோமை அரசாங்கத்தின் தலைநகரிலுள்ள பேராய ராயிருந்தமையாலும், பல வாத எதிர்வாதங்களினிடையால் உரோமை எப்பொழுதும் விசுவாசத்தின் தூய்மையை பாதுகாக்கிறதாய்க் காணப்பட்டபடியாலும் உரோமைப் பேராயர் உச்ச நிலையை அடைந்தார்.

இரண்டாம் நூற்றாண்டிலேயே விக்டர் பேராயர் உயிர்த்தெழுந்த திருநாள் ஞாயிற்றுக்கிழமையில்தான் ஆசரிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் வெற்றிபெற்று திருச்சபை முழுவதுக்கும் அதை ஒரு பிரமாணமாகக் கொண்டுவரக்காரணமானார். தம் எண்ணத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களைச் சபைக்குப் புறம்பாக்கவும் அவர் உரிமை பாராட்டினார்.

385–இல் சிரிசியஸ் போப்பானவர் டாரகோனா பேராயராகிய ஹிமாரியுவுக்கு எழுதின கடிதம் உரோமைப் பேராயரின் அதிகாரம் எவ்வளவு வளர்ச்சி அடைந்திருந்ததென்பதைக் காட்டுகிறது. ஆரம்பத்திலிருந்தே உரோமைச் சபையில் இருந்த போப்பாளுகையைத் தான் நாலாம் நூற்றாண்டு போப்புக்கள் உரிமையாக்கினார்களென்பது உரோமைச் சபையின் எண்ணம். பேதுரு, பவுல் ஆகிய அப்போஸ்தலர்களால் உரோமைச் சபை நிறுவப்பட்டதென்னும் நம்பிக்கையாலும் அது மேன்மை பெற்றது. கிழக்குச் சபைகள் உரோமையின் உச்சநிலையை ஏற்றுக்கொள்ளாமலிருந்தன.

திருச்சபையின் ஒருமைப்பாட்டை அறிந்த கான்ஸ்தரதீன் உரோமை அரசாங்கத்தையே இணைக்க அதொரு கருவியாய் இருக்குமென்று நம்பினார். ஆயினும், அவரது எதிர்பார்ப்புக்கு மாறாக டோனேற்று பிளவினாலும் ஆரியு திரிபுக் கொள்கையினாலும் சபையில்

பிரிவுகள் ஏற்பட்டுள்ளதைக் காண நேர்ந்தது. சீர்திருத்தத்திற்குப் பின்னர்தான் திருச்சபையில் பல பிரிவுகள் ஏற்பட்டன என்பது சாதாரண எண்ணம். ஆனால் நாலாம் நூற்றாண்டிலேயே பல பிரிவுகள் திருச்சபையில் ஏற்பட்டன. அவற்றில் சிலவை ஆரம்ப காலத்திலேயே வேர் கொண்டவை.

பல திரிபுக் கொள்கைகள் வெளி வந்தபொழுது, திருச்சபையின் ஒருமைப்பாட்டிலிருந்து பிரிந்து நின்றவர்கள் திருச்சபைக்கு வெளியே இருந்தார்களென்றும் கிருபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களென்றும் எண்ணப்பட்டது. திருச்சபைக்குள் பிரிவினைகள் தோன்றின பொழுது ஒருமைப்பாட்டிற்குள்ள முயற்சிகளும் எடுக்கப்பட்டன. தற்காலத்தில் திருச்சபை ஒருமைப்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும் முறைகள் அக்காலத்திலேயே எடுக்கப்பட்டன. ஒப்பந்தத்தை ஏவக்கூடிய இலக்கிய நூல்கள் வெளிவந்தன. எல்லாவற்றிற்கும் மேலாகப் பொது ஆலோசனை மன்றங்களின் மூலம் ஒப்புதலுக்கு வழி தேடப்பட்டது. இவ்வாறு 325–இல் **நிசேய ஆலோசனை மன்ற**மும், 381–இல் கா**ன்ஸ்தந்திநோபுரி ஆலோசனை மன்றமும்**, 431–இல் **எபேசு ஆலோசனை மன்ற**மும், 451–இல் **கால்சிதோன் ஆலோசனை மன்றமும்** நடைபெற்றன.

திருச்சபையின் ஆலோசனை மன்றங்களாக அவை இருந்தபோதிலும் பேரரசர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டனர். எனவே, இவை பேரரசர்கள் கூட்டின ஆலோசனை மன்றங்களாக இருந்தன. திருச்சபையின் வரலாற்றின் முதல் தடவையாக நிசேய ஆலோசனை மன்றத்தில் கிறிஸ்தவ உலகின் எல்லா பகுதிகளிலுமுள்ள பேராயர்கள் அனைத்துலக திருச்சபையின் பிரதிநிதிகளாக ஒன்று கூடினார்கள். இத்தகைய கிறிஸ்தவ ஒருமைப்பாட்டைக் கொண்டு வர அரசு காரணமாயிருந்தது. பிற்காலங்களில் கத்தோலிக்க உண்மை ஆலோசனை மன்றங்களாலேயே வெற்றி சிறந்தது.

திரிபுக் கொள்கையைப் பின்பற்றினவர்கள் வித்தியாசமாய்

வாழ்ந்து சபையை விட்டுப் பிரிந்திருந்தால் ஒருமைப் பாட்டைப் பற்றிய பிரச்சினை எழாது. ஆனால் அவர்கள் கிறிஸ்தவ நாமத்தைத் தரித்து, பேராயர் ஆளுகை முறையையும் பின்பற்றி அப்போஸ்தல வரிசையில் தாங்கள் உள்ளவர்களென்று கூறி, ஒரே திருமறையையும் பின்பற்றி தாங்கள் தான் உண்மையான சபையென்று ஒவ்வொரு பிரிவினரும் கூறும் காரணத்தால் தான் ஒருமைப்பாட்டைப் பற்றிய பிரச்சினை எழுந்தது. ஆகவே கிறிஸ்து சபை பிரிந்து காணப்பட்டது.

ஆரம்பத்தில் தோன்றின திரிபுக் கொள்கைகள் மறைந்தன. ஆனால் 5–ம் நூற்றாண்டில் தோன்றினவை தற்காலத்திலும் நீடித்திருந்து கிறிஸ்தவ உலகத்தில் பிளவுக்குக் காரணமாய் விளங்குகின்றன. இவ்வாறு கிழக்கிலுள்ள எகிப்திய, சீரிய, ஆர்மீனிய, அசீரிய சபைகள் மானோபிசித்த சபைகளாகவோ நெஸ்தோரிய சபைகளாகவோ காணப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள மலபார் சபையோடு தொடர்பு கொண்ட பொழுது மலபார் சபையும் இப்பிரிவுகளைச்சார ஏதுவாயிற்று. எனவே, இந்தியாவிலும் புனித தோமா கிறிஸ்தவர்களென்றும் மானோபிசித்த கிறிஸ்தவர்களென்றும் நெஸ்தோரிய கிறிஸ்தவர்களென்றும் பிரிந்திருந்தார்கள். உரோமைப் பேரரசர்கள் பலத்தை உபயோகித்து கிழக்கிலுள்ள பிரிவினரைத திருப்ப முயன்றது பிளவை அதிகரிக்கச் செய்தது. பேரரசர்கள் உபத்தரவிக்க முயன்றபோது கிழக்கிலுள்ளவர்கள் மேற்கிலிருந்து பிரியவே விரும்பினார்கள்.

**மேலும், சாதாரண மக்கள் கோட்பாட்டு வித்தியாசங்களைப் புரிந்து கொள்ளாமல் எந்தகட்சியிலும் சேர ஆயத்தமாயிருந்தனர்.** மொழி வேறுபாடும் பிரிவினைக்கு ஒரு காரணமாயிருந்தது. கிழக்கிலுள்ளவர்கள் கிரேக்க மொழி பேசினவர்கள், மேற்கிலுள்ளவர்கள் லத்தீன் மொழியை முக்கியமாய்க் கடைப்பிடித்தவர்கள். அதற்கேற்றபடி ஆராதனை முறைகளும் வித்தியாசமான முறைகளில் அமைந்தன. திருச்சபையில் கிரேக்கு பேசும் பகுதியினருக்கும் லத்தீன் பேசும்

பகுதியினருக்கும் வேறுபாடு விரைவில் வளர்ந்தது. பொது ஆலோசனை மன்றங்களுக்கு வந்த பேராயர்களில் பெரும்பான்மையோர் கிரேக்கராவர். எனினும் திருச்சபையின் விசுவாசப் பிரமாணத்தை வரையறுப்பதில் உரோமை சபையே வெற்றியடைந்தது. ஆனால் பயன்படுத்தப்பட்ட சொற்கள் சிலருக்கு இடறலாயிருந்தன. எனவே, இன்னும் விவாதங்கள் ஏற்பட்டன. விவாதங்களை வளர்க்கக்கூடிய பல நிகழ்ச்சிகள் நடந்தன. நிசேய விசுவாசப் பிரமாணத்தில் பரிசுத்த ஆவியானவர் பிதாவிலிருந்தும் குமாரனிலிருந்தும் புறப்படுகிறவர் என்ற வாசகத்தை மேற்கு சபை சேர்த்தது அவற்றில் ஒன்றாகும். புனித நற்கருணையில் புளிப்பில்லாத அப்பத்தையா அல்லது புளிப்புள்ள அப்பத்தையா அருந்துவது என்பதிலும் கருத்துவேறுபாறு ஏற்பட்டது. உபவாசத்தைப் பற்றிய சட்டங்களிலும், குருக்கள் திருமணம் செய்யலாமா செய்யலாகாதா என்பதிலும் வித்தியாசமான எண்ணங்கள் இருந்தன. இவற்றோடு ஆதீனத்திற்கும் ஆதினத்திற்குமுள்ள எல்கைத் தகராறுகளும் பிரிவு எண்ணத்தை வளர்த்தன.

அரசு சபை விஷயங்களில் தலையிட்டதும் பிரிவினையை வளர்ப்பதற்குக் காரணமாயிற்று. குறிப்பாக கி. பி. 800–இல் சார்லிமேன் மகுடாபிஷேகம் பெற்றதும் துாய உரோமை அரசாங்கம் உருவானதும் ஒரு சான்றாகும். 7–ஆம் நூற்றாண்டு ‘**தண்ணீர் – ஒருமைப்பாடு**’களின் காலமாயிருந்தது. ஒப்பந்த வாசகங்கள் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் வெளியிடப்பட்டன. அவற்றின் விளைவாக உரோமைக்கும் புது உரோமைக்குமிடையே பிளவுதான் ஏற்பட்டது. ஏறத்தாழ 716–இலிருந்து 845 வரை சொரூபங்களைப் பற்றிய வாத எதிர் வாதம் ஏற்பட்டது. இது சபைக்குள்ளேயே இரு கட்சிகளுக்கிடையே இருந்த விவாதமேயன்றி சபைக்குச் சபை விரோதமாயிருக்கும் அளவுக்கு இது காரணமாயிருக்கவில்லை.

இதற்குப்பின் 16– ஆம் நூற்றாண்டுவரை இரண்டு பெரும் திருப்புக் கட்டங்கள் மேற்குச் சபைகளுக்கும் கிழக்குச் சபைகளுக்குமுள்ள தொடர்பில் ஏற்பட்டன. ஒன்று 867–இல்

நடந்தது. மற்றது 1054–இல் நடந்தது. கான்ஸ்தந்தினோபுரி பெரும் பேராயராகிய போட்டியஸ் என்பவருக்கும் முதலாம் நிக்கலோஸ் ஆகிய போப்புவானவருக்கும் கடும் மனத்தாங்கல் இருந்தது. 867–இல் நடந்த ஆலோசனை மன்றத்தில் போட்டியஸ் ஏனைய கிழக்குப் பெரும் பேராயர்களோடு சேர்ந்து போப்புவானவரைச் சபைக்குப் புறம்பாக்கி, பதவி நீக்கம் செய்யும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இது கிழக்குச் சபை மேற்குச் சபையோடு செய்யும் ஒரு வலுச் சண்டையாக எண்ணப்பட்டது. அதினிமித்தம் போட்டியஸ் தள்ளப்பட்டார். எனிலும் 877–இல் 8–ஆம் யோவான் என்னும் போப்புவானவர் அவருக்கு மன்னிப்பளித்து மீண்டும் பதவியில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

1054–இல்தான் கிழக்குச் சபை மேற்குச் சபையிலிருந்து முற்றுமாகப் பிரிந்ததென்று நம்பப்படுகிறது. 1054 ஜுலை 17–ஆம் நாளன்று ஒன்பதாம் லேயோ போப்புவானவரின் மூன்று பிரதிநிதிகள் கான்ஸ்தந்தினோபுரி புனித சோபியா ஆலயபீடத்தின் மேல் கான்ஸ்தந்தினோபுரி பெரும் பேராயரைச் சபைக்குப் புறம்பாக்கும் போப்பாணை வைத்தார்கள். இது கான்ஸ்தந்தினோபுரி பெரும் பேராயர் மிகாவேலுக்கும் ஒன்பதாம் லேயோ போப்புவானவருக்குமிடையே இருந்த வழக்கின் விளைவாகும். சிலுவைப் போர்களில் மேற்குச் சபையும், கிழக்குச்சபையும் ஒரே பொதுவிராதிக்கு எதிராய் ஈடுபட்டிருந்தனர்.

மேற்குக்கும் கிழக்குக்கும் ஒருவித நல்லெண்ணம் உண்டானது. எனினும், கான்ஸ்தந்நினோபுரி முஸ்லிம்களின் வசமான பொழுது கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே கசப்பு உண்டானது அது போல மேற்குச் சபைக்கும் கிழக்குச் சபைக்கும் பிளவு உறுதியானது. இதுதான் சிலுவைப் போர்களினாலுண்டான விளைவு. 1204–இல் சிலுவைக்கு எதிரிகளோடு தொடுக்கப்பட்ட சிலுவைப் போரானது கான்ஸ்தந்தினோபுரியைக் கைப்பற்றுவதற்காகத் திருப்பப்பட்டது. கிழக்கத்திய பெரிய கிறிஸ்தவ நகரம் கிறிஸ்தவ பட்டாளத்திற்கே இரையானது. இதனால் பலவீனமடைந்த கிழக்கத்திய

அரசு முஸ்லிம்களின் ஆட்சிக்குட்பட வேண்டியதாயிற்று. இதனால் தான் மேற்கத்திய காரியங்களைப் பற்றியே கிழக்குக்கு வெறுப்புணர்ச்சி உண்டாயிற்று. இதனால் கிறிஸ்தவ உலகில் ஒருமைத் தன்மை அறவே தீர்ந்துவிட்டதென்று கூற இயலாது. உண்மையான ஒருமைப்பாட்டுக்கு வழி நடத்தக்கூடிய ஏதுக்கள் கிழக்கிலும் மேற்கிலும் இல்லாமலில்லை. இதுவே நம்பிக்கைக்குரியதாகும். இது பல ஒருமைப்பாட்டு முயற்சிகளுக்கு இடமளித்துள்ளது.

1274 மே 7 ஆம் நாள் லயோன்ஸ் என்னுமிடத்தில் நடந்த இரண்டாம் லயோன்ஸ் ஆலோசனை மன்றத்தில் முதலாம் ஒருமைப்பாட்டு முயற்சி எடுக்கப்பட்டது. ஜூலை 5–ஆம் நாள் இரு சபைகளுக்குமுள்ள ஒருமைப்பாடு அறிவிக்கப்பட்டது. ஆஞ்சூ நாட்டு அரசன் சார்ல்ஸ் கான்ஸ்தந்திநோபுரியை வெல்ல எண்ணினபொழுது பாதுகாவலுக்காகவே 8–ஆம் மிகாவேல் என்னும் கிழக்கத்திய பேரரசன் உரோமையோடு இந்த ஒப்பந்தத்திற்கு வந்தார். ஆனால், அவரது சொந்த உறவினரே இதற்கு எதிராயிருந்தனர்.

1280– இல் 4–ஆம் மார்ட்டின் போப்பானபோது மிகாவேல் பேரரசன் இந்த ஒருமைப்பாட்டு எண்ணத்தையே கை விட்டு விட்டார். அடுத்த ஒருமைப்பாட்டு முயற்சி 15–ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்டது. அதே அரசாங்க நோக்கத்துடனே பிளாரன்ஸ் ஆலோசனை மன்றத்தில் 1439 ஜூன் 6–ஆம் நாள் ஒருமைப்பாட்டைப்பற்றிய ஒரு முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், இதனால் கிழக்குச் சபை உண்மையான ஒருமைப்பாட்டிற்கு வரவில்லை. இவ்விரு முயற்சிகளுக்குப்பின் மேற்கும் கிழக்கும் ஒன்றுபட முன்வந்ததில்லை.

இவ்விரு முயற்சிகளால் சில பாடங்களை நாம் கற்றுக்கொள்ளுகிறோம்.

1. திருச்சபை ஒருமைப்பாடு அரசாங்க எண்ணங்களின் அடிப்படையில் அமுலுக்கு வராதென்பது வெளிப்படையாயிற்று.

2. பிரச்சினைகளுக்கு முடிவு காணாமல் உண்டாகும் சமரசம் உண்மையான ஒருமைப்பாட்டை உண்டு பண்ணாது.

3. இரு பக்கங்களும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன், அவசியமில்லாத காரியங்களை வற்புறுத்தாமலிருக்க ஒத்துக்கொள்ளாவிட்டால் நிலையான ஒருமைப்பாடு உண்டாக முடியாது.

4. பொதுச் சபையாரின் சம்மதமில்லாமல் சபையில் அதிகாரம் வகிப்பவர்கள் மட்டும் செய்யும் ஒருமைப்பாடு பயனற்றது.

அக்காலங்களில் ஒருமைப்பாட்டைப்பற்றிய மெய்யான உணர்ச்சி உண்டாகவில்லையென்று கூறலாம். மேற்குச் சபை கிழக்குச் சபையின் ஒருமைப்பாட்டை விரும்பியது, போப்புவானவரின் அதிகாரத்திற்குள் எல்லாச் சபைகளும் வரவேண்டுமென்ற நோக்கத்தினாலேயேயாகும். கிழக்குச் சபை மேற்குச் சபையோடு ஒருமைப்பட விரும்பியது கிழக்கு அரசாங்கம் அதனால் பலப்படும் என்ற காரணத்திற்காகும். திரிபுக் கொள்கைகள் திருச்சபையின் ஒருமைப்பாட்டிற்கு பலத்த இடையூறாயிருந்தன.

அவற்றை ஒடுக்குவதற்காக பட்டயமும் தீக்கிரையாக்குதலும் பயன்படுத்தப்பட்டன. 1320–இல் உரோமன் கத்தோலிக்க சபை திரிபுக்கொள்கைகளின் மேல் வெற்றியடைந்ததென்றும் உரோமைச் சபையில் ஒருமைப்பாடு உறுதிப்பட்டதென்றும் எண்ணப்பட்டது. மேற்கத்திய ஐரோப்பா ஒரே கிறிஸ்தவ ஆகாயத்தை உணர்ந்தது. லத்தீன் மொழி அவர்களை இணைப்பதற்கு ஒருமுகாந்தரமாயிருந்தது. ஒரே வழிபாட்டு முறைமையும் மேற்கத்திய சபைகளில் பின்பற்றப்பட்டது. இந்த ஒருமைப்பாடு பேதுருவின் பின்னடியாராகிய போப்புவானவரில் வெளிப்படையாய் மகுடமடைந்தது.

14– ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கத்திய சபையில் ஒரு புதுவிதமான பிளவு ஏற்பட்டது. உரோமிலிருந்த போப்புவானவரைத்

தவிர அவிக்னானிலும் ஒரு போப்புவானவர் ஆட்சி புரிந்தார். இருவரும் ஒருவரையொருவர் சபித்துக் கொண்டிருந்தனர். இருவரில் எவர் பேதுருவின் பின்னடியாரென்ற சந்தேகம் ஏற்படுவதற்கும் காரணமாயிற்று. இந்த பாபிலோனிய சிறையிருப்பு 1378 முதல் 1417 வரை நீடித்திருந்தது. இவ்வித பிளவு உண்டான போது திருச்சபையில் ஒரே தலைவர் இருப்பது நன்று என்ற எண்ணம் பொதுவாக காணப்பட்டது. எனவே, இருதரத்தாரையும் ஒப்பந்தப்படுத்த ஒரு இயக்கம் உருவானது. இதற்குச் '**சமரச இயக்கம்**' (**Conciliar Movement**) என்ற பெயர் வழங்கப்பட்டது. இவ்வியக்கத்தின் முயற்சியால் இப்பிளவு நீங்கிற்று, எனினும் இத்தகைய ஒருமைப்பாடு மெய்யானதல்ல என்பதைத் திருச்சபை வரலாறு நமக்குக் காட்டுகிறது. ஆகவே, மார்ட்டின் லுத்தர்தான் சபையின் ஒருமைப் பாட்டைச் சீரழித்தாரென்றும் அதற்கு முன்னே சபையில் பாக்கியமான ஒருமைப்பாடு இருந்ததென்பதும் தவறு.

கிழக்கத்திய சபையிலும் பல பிரிவினைகள் காணப்பட்டன. 1453–இல் கான்ஸ்தந்தினேபுரி இஸ்லாமியர் கையினால் வீழ்ச்சியடைந்த பொழுது மாஸ்கோ 1589–இல் ஒரு தனி பெரும் திருமண்டிலமானது. மாஸ்கோ இவ்வாறு மூன்றாம் உரோமையாயிற்று. பழைய உரோமை தவறிப் போய் புதிய உரோமையும் வீழ்ச்சியடைந்தபடியால் கடவுள் மாஸ்கோவாகிய மூன்றாம் உரோமையைக் கிறிஸ்தவர்களை இணைக்கும் இடமாகத் தெரிந்து கொண்டாரென்று ருஷிய சபை உறுதி கொண்டது.

திருச்சபையின் வரலாற்றில் முன் இல்லாத அளவில் 16–ம் நூற்றாண்டில் திருச்சபையின் ஒருமைப்பாடு சிதைவுண்டது. சீர்திருத்த தலைவர்களில் ஒருவரும் பிரிவுகளை உருவாக்கும் எண்ணமுடையவர்களாயிருக்கவில்லை. திருச்சபையில் உண்மையான சீர்திருத்தங்களைச் செய்யவே அவர்கள் விரும்பினர். இப்படிப்பட்ட இயக்கங்கள் அழிக்கப்பட்டுவிடுமென்றுதான் அநேகர் எண்ணினார்கள்.

திருச்சபையிலிருந்து தங்கள் சீர்திருத்தங்களைச் செய்ய முடியாதென்றும் தங்கள் இயக்கங்களை பலப்படுத்துவது மிக அவசியமானதென்றும் உணர்ந்தனர். ஆகவே பிரிவுகள் உண்டாகவேண்டியதாயிற்று. உலகின் பல நாடுகளில் பழைய பக்தி வழிகளில் கிறிஸ்தவர்கள் திருப்தியற்றவர்களாய் தங்கள் ஆவிக்குரிய தேவைகளுக்கு ஆழமான திருப்தியைத் தேடலானார்கள்.

சீர்திருத்தம் அதற்கிசைய ஆவிக்குரிய வழிகளை மக்களுக்கு வகுத்துக் கொடுத்தது. சிறப்பாக, திருமறையை மக்களுடைய மொழிகளில், அவர்கள் விளங்கக்கூடிய வகையில் சீர்திருத்த தலைவர்கள் வெளியிட்டுக் கொடுத்தனர். 1555–இல் சீர்திருத்தம் முழுச் சபையையும் கவரமுடியாதென்பது தெளிவாயிற்று. 1648–இல் உண்டான உயெஸ்ட்பேலியா சமாதான உடன்படிக்கை உரோமைச் சபைகளுக்கும் புராட்டஸ்தாந்து சபைகளுக்கும் எல்லைகளைக் குறிப்பிட்டது. இரு சார்பினரும் ஒரே தூய, பொதுவான அப்போஸ்தல சபையில் தங்கள் விசுவாசத்தை வெளியிட்ட போதிலும் வெளிப்படையான ஒருமைப்பாடு மிகமுக்கியமானதென்பதை உணரவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின்புதான் பிரிந்திருப்பது பெரும் பாவம் என்பதைச் சபைகள் உணரக்கூடியதாயிற்று.

சீர்திருத்த எண்ணங்கள் பல இயக்கங்களில் வெளிப்பட்டன. லுத்தரின் இயக்கத்தைத் தவிர, சுவிங்கிளி, கால்வின் முதலியோரின் இயக்கங்களும் பரவின. ஜெர்மனி, பிரான்ஸ், சுவித்சர்லாந்து,

ஸ்வீடன், டென்மார்க், நார்வே, இங்கிலாந்து, ஸ்காத்லாந்து முதலிய இடங்களிலும் இவை பரவின. அந்தந்த இடங்களிலுள்ள தலைவர்கள் தத்தம் முறைகளைச் சபைக்குள் புகுத்தினர். 1529–இல் புராட்டஸ்தாந்து பிரிவு ஏற்பட்டது.

ஸ்பேயர் ஆய்வு மன்றத்தில் லுத்தர் முதலியோர் உரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து பிரிய வேண்டியதாயிற்று. இவ்வாறு உரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து சீர்திருத்த சபைகள் பிரிந்தபொழுது புராட்டஸ்தாந்து சபைக்குள்ளேயே பல பிரிவுகள் தோன்றலாயின. 1525– இல் தோன்றின மறுமுழுக்கு இயக்கம் குழந்தை திருமுழுக்கை எதிர்த்த பல இயக்கங்களுக்கு முன்னோடியாயிற்று. இவ்வாறு பெந்தேகொஸ்தே சபைகள், கடவுளின் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவை வெளிப்பட்டன.

இங்கிலாந்தில் ஆங்கிலிக்கன் சபை உண்டான போது ஜெய புஸ்தகத்திற்கு எதிரான பல பிரிவுகள் உண்டாயின. அவர்கள் பியூரிட்டனியர், சபை ஆட்சி கொள்கையினர் முப்பராட்சி சபையினர். குவேக்கர் பிரிவினர் ஆகியோராவர். அது போல ஜெர்மானியில் பக்தி மார்க்கத்தார் **(Pietists)** தோன்றி ஜெர்மானியின் பல பகுதிகளில் பரவினர். மொரேவியாவில் சின்சன்டார்ப் என்பவரால் மொரெவிய இயக்கம் ஏற்பட்டு பலரைக் கவர்ந்து முன்னேறியது.

கிறிஸ்துவின் சேவையில் பிரதிஷ்டையோடு ஈடுபட்டு மிஷனரிப் பணியில் அதிக அக்கரையுள்ளவர்களாய் இவ்வியக்கம் காணப்பட்டதினிமித்தம் உலகின் பல இடங்களிலும் அவர்கள் காணப்பட்டனர். இங்கிலாந்தில் ஆவிக்குரிய உயிர் மீட்சியை சபைகளில் கொண்டுவர **மெதடிஸ்ட் இயக்கம்** ஆரம்பமானது. யோவான் வெஸ்லி, சார்லஸ் வெஸ்லி ஆகியோரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் பல மிஷனரி இயக்கங்கள் ஏற்படுவதற்குக் காரணமாயிற்று.

1792–இல் பாப்திஸ்து மிஷனரி சங்கம் ஏற்பட்டு இந்தியாவைக் களமாகத் தெரிந்து கொண்டது. அதன் விளைவாக இந்தியாவின் பல பகுதிகளிலும் தென் இந்தியாவிலும் பாப்திஸ்து சபைகள் வந்துள்ளன. 1795–இல் லண்டன் மிஷனரி சங்கம் ஏற்பட்டு இந்தியாவில் பல சபைகளை நிறுவியுள்ளது. தென் இந்தியாவில் திருவிதாங்கூர் (கன்னியாகுமரி, கேரளம்) கோயம்புத்துார் முதலிய இடங்களிலும் தெலுங்கு பிரதேசங்களிலும் சிறப்பாகப் பரவினது.

1799–இல் சபை மிஷனரி சங்கம் (C. M. S. ) யோவான் வென், தோமா ஸ்காட் ஆகியோரால் உருவானது. இச்சங்கம் தென் இந்தியாவில், சிறப்பாக திருநெல்வேலி, மத்தியதிருவிதாங்கூர் என்னும் இடங்களில் சபைகளை நிறுவினது. ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த மற்றொரு சங்கம் சுவிசேஷப் பிரபல்ய சங்கமாகும் (S. P. G). இது 1701 இலேயே ஏற்பட்டது. தென் இந்தியாவில் இப்பிரிவும் பல திருமண்டலங்களைக் கொண்டுள்ளன. மத்திய திருவிதாங்கூர், திருநெல்வேலி, சென்னை, தோர்ணக்கல் முதலிய இடங்கள் ஆகியவை அதற்கு முக்கியமான இடங்கள்.

1813–இல் இங்கிலாந்து வெஸ்லியன் மிஷனரி சங்கம் உருவானது. தென் இந்தியாவில் இச்சங்கத்தின் பணியால் மெதடிஸ்து சபைகள் ஏற்பட்டன, முக்கியமாக திருச்சி, தஞ்சாவூர், சென்னை ஆகிய இடங்களில் மெதடிஸ்து சபைகள் வளர்ந்தன. 1825–இல் உருவான ஸ்காத்லாந்து சபையின் மிஷன் போர்டும் தென் இந்தியாவில் பிரஸ்பித்தீரியன் சபைகளைப் பிறப்பித்துள்ளது.

அமெரிக்காவிலும் பல மிஷனரி சங்கங்கள் ஏற்பட்டன. 1810–இல் அமெரிக்கன் அயல்நாட்டு மிஷனரி போர்டு அமெரிக்காவில் புது இங்கிலாந்து என்னுமிடத்தில் தோன்றி ஆசியாவை முக்கிய ஊழிய இடமாய்க் கொண்டது. இச்சங்கத்தின் மூலமாக மதுரை அமெரிக்கன் மிஷன் ஏற்பட்டு யாழ்பாணம், மதுரை, இராமநாதபுரம் முதலிய இடங்களில் சபைகளைக் கொண்டுள்ளன. அமெரிக்கன் பாப்திஸ்து

மிஷனும் இந்தியாவில் பணியாற்றி பெரும் தொகையினரைக் கொண்ட ஒரு பிரிவாய் விளங்கினது. ஓங்கோல் அதற்கு முக்கியமான இடம். அமெரிக்கன் லுத்தரன் சங்கத்தினரும் இந்தியாவில் சபைகளை நிறுவியுள்ளனர்.

புராட்டஸ்தாந்து சபை உரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து பிரிந்து சீர்திருத்த முயற்சிகளில் வளர்ந்து சபைகள் பரவின போது உரோமன் கத்தோலிக்க சபையும் தூதுப் பணியில் அதிகமாக ஈடுபட்டது. தூதுப்பணியில் மிக முயற்சி எடுத்த இயேசுநாதர் சங்கம் 1540– இல் உண்டானது. இன்னாசியு லயோலா என்பவர் பிரான்சிஸ் சவேரியாரின் உதவியுடன் இச்சங்கத்தை உருவாக்கினார். இதன் ஆதரவில் இந்தியாவில், சிறப்பாக தென் இந்தியாவில் சிறந்தபணி செய்யப்பட்டது.

1498–இல் வாஸ்கோடகாமா இந்தியாவுக்குப் புதிய கப்பல் மார்க்கத்தைக் கண்டுபிடித்தபின் போர்த்துக்கீசியர் இந்தியாவோடு வணிகத்தொடர்பு கொண்டனர். இத்தொடர்பு 1595 வரை நீடித்திருந்தது. இக்காலத்தில் போப்புவானவர் கிறிஸ்தவ சமயத்தை இந்தியாவில் பரப்ப இது தக்க சமயமென்று எண்ணி போர்த்துக்கீசியரின் ஆதரவைக் கொண்டு இந்தியாவுக்கு சமய தூதுவர்களை அனுப்பினார். அவர்களில் ஒருவர்தான் இயேசு நாதர் சங்கத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் சவேரியார். இவர் 1542–இல் இந்தியாவுக்கு வந்து பணி யாற்றினார். இச்சமயத்தில் இந்தியாவில் இரண்டு லட்க்ஷம் கிறிஸ்தவர்கள் இருந்ததாகத் தெரியவருகிறது.

உரோமன் சபை அக்காலத்தில் தென் இந்தியாவில் சீரியர் சபையோடு தொடர்பு கொண்டிருந்த மலபார் கிறிஸ்தவர்களை உரோமன் ஆட்சிக்குள் கொண்டுவர முயற்சித்தது. பிரான்சிஸ் சவேரியார் நற்செய்திப் பணியில் ஈடுபட்டவராக தென் இந்தியாவிலுள்ள கடற்கரை மக்களை உரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக்கினார். எனவே, 16– ஆம் நூற்றாண்டின் இறுதியில் தென் இந்தியாவில் மட்டும்

1,59,000 உரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் இருந்தனர்.

உரோமன் சபையை 16–ம் நூற்றாண்டின் இறுதியில் பலப்படுத்த எண்ணியவர் கோவாவில் தலைமைப் பேராயராயிருந்த அலெக்சியஸ்டிமெனசிஸ் என்பவராகும். மலபார் சபையை உரோமைச் சபையோடு இணைக்க விரும்பியதன் காரணம் போப்பாளுகையின் கீழ் அது வரவேண்டுமென்ற நோக்கமேயாகும். 1599–இல் எர்ணாக்குளத்திற்கு ஐந்துமைல் தென் மேற்கிலுள்ள உதயம்பெரூர் என்னுமிடத்தில் அவர் நடத்திய ஆலோசனை மன்றத்தின் மூலம் மலபார் சபையினர் உரோமையின் ஐக்கியத்திற்குள் கொண்டுவரப்பட்டு 'யூனியேட்ஸ்' (ஒருமைப்பட்டவர்கள்) என்று அழைக்கப்பட்டனர். இதன் விளைவாக பெரும்பான்மையான மலபார் கிறிஸ்தவர்கள் 1653–இல் மட்டஞ்சேரியில் நடந்த கூனன் சிலுவை நிகழ்ச்சியின் மூலம் உரோமன் சபைக் கட்டுப்பாட்டிலிருந்து பிரிந்தனர். இவ்வாறு யாக்கோபிய (**Jacobite**) சபை ஏற்பட்டது. அதுவும் இரு பிரிவாகி பெரும் பேராயர் கட்சி (**Patriarch's party**) என்றும் மேட்ரானிய (**Metranis party**) கட்சி என்றும் பிரிந்தது, 19–ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாக்கோபிய சபையில் ஒரு சீர்திருத்த கட்சி உண்டாகி மார்த்தோமா சபை என்று அழைக்கப்பட்டது. இத்தகைய பல்வேறு பிரிவுகள் இந்தியாவில் வந்துள்ளன.

1900–இல் ஆங்கிலிக்கன் சபையில் 1,50,000–உம் லண்டன் மிஷனரி சங்கத்தில் 50,000–உம், மெதடிஸ்ட் சபையில் 12,000–உம், அமெரிக்கன் பாப்திஸ்து மிஷனில் 50,000 உம், மதுரை அமெரிக்கன் மிஷனில் 11,000–உம், டச் சீர்திருத்த சபையில் 6,000–உம், அமெரிக்கன் லுதரன் சபையில் 20,000–உம், லீப்சிக் மிஷனில் 18,000–உம், பேசில் சுவிசேஷ மிஷனில் 14,000 உமாய் இருந்தனர்.

உரோமன் கத்தோலிக்கர் பெருமிதமானவர்களாயிருந்தனர். யூனியேட்ஸ் 500,000–உம், யாக்கோபியர் 300,000உம், மார்த்தோமா சபை 1,25,000–உமாய் இருந்தனர். மேற்கூறப்பட்டுள்ள இவ்விபரம்

இந்திய சபையின் பிரிந்த நிலையைக் காட்டுகிறது. ஒரே மீட்பராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருந்தபோதிலும் ஆட்சி முறையிலும், தொழுகை முறையிலும், நற்கருணையைப் பொறுத்த அளவிலும் சபைகள் பிரிந்திருந்தன.

தென் இந்தியாவில் இத்தகைய அவல நிலைதான் காட்சியளித்தது. ஒரே இடத்தில் பிற மதத்தினர் சூழ்ந்திருக்க கிறிஸ்தவர்கள், ஆங்கிலிக்கன் என்றும், லண்டன் மிஷன் என்றும் லுத்தரன் என்றும் மெதடிஸ்ட் என்றும், பாப்திஸ்து என்றும் பிரிந்திருந்தனர். தாங்கள் இருந்த இடத்தின் காரணமாக கிறிஸ்தவர்கள் வெவ்வேறு சபைப் பிரிவைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். மேலும் தென் இந்தியாவில் பணியாற்றிய மிஷனரி சங்கங்கள் தத்தம் கொள்கைகளையும் வழிபாட்டு முறைமைகளையும் ஒழுங்குகளையும் சபைகளுக்குள் புகுத்தினார்கள். ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்தவர்கள் ஆங்களிக்கன் எண்ணமுடையவர்களாயிருந்தனர். பிரஸ்பிட்டீரியன் சபையைச் சேர்ந்தவர்கள் பிரஸ்பிட்டீரியன் எண்ணமுடையவர்களாயிருந்தனர். சபை ஆட்சிமுறை சபையைச் சேர்ந்தவர்கள் சபை ஆட்சி முறை எண்ணமுடையவர்களாயிருந்தனர்.

## இணைந்த சபைகளின் பாரம்பரியமும் கொள்கைகளும்

### ஆங்கிலேய சபை

ஆங்கிலேய சபை எவ்வாறு ஒருமைப்பாட்டிற்கு ஆயத்தமாயிருந்ததென்பது கவர்ச்சிகரமான வரலாறு. இங்கிலாந்திலிருந்த சபை முதலாவது உரோமைச் சபையோடு தொடர்புடையதாயிருந்தது. கி. பி. 314–இல் நடந்த ஆர்ல்ஸ் (**Coucil of Arles**) ஆலோசனை மன்றத்தில் இங்கிலாந்திலிருந்த லண்டன், யார்க், லிங்கன் ஆகிய இடங்களின் பேராயார்கள் வந்திருந்ததாகத் தெரிய வருகிறது. 597–இல் பெரிய கிரெகரி என்னும் போப்புவால் கந்தர்புரி தலைமை ஆதீனம் ஏற்படுத்தப்பட்டது.

அகுஸ்தீன் துறவி, முதல் கந்தர்புரி தலைமைப் பேராயராக (**Arch Bishop of Canturburry**) அபிஷேகம் பண்ணப்பட்டார். இவ்வாறு இங்கிலாந்து சபை உரோமன் சபையோடு இணைந்திருந்தது. எட்டாம் ஹென்றியின் காலத்தில் உரோமன் கத்தோலிக்க சபையோடுள்ள இத்தொடர்பு முறியலாயிற்று. ஹென்றி தன் மனைவி ஆரகோல் காத்றீனைத் தள்ளிவிடுவதற்கு போப்புவானவர் சம்மதியாதது இதற்கு முதல் தூண்டுதலைக் கொடுத்தது. இங்கிலாந்தைப் போப்புவானவரின் ஆட்சியிலிருந்த ஹென்றி பிரித்த போதிலும் ஹென்றி ஒரு சுத்தோலிக்க கிறிஸ்தவனாகவே இருந்தார். போப்புவானவரின் தொடர்பு நீக்கப்பட்டபோது கால்வினின் எண்ணத்தோடு தொடர்புள்ள ஒரு புதிய கட்சி தோன்றி பேராயரோ தேவையில்லை என்றனர். பேராய

ஆளுகையும் அரச ஆளுகையும் ஒன்றோடொன்று கட்டப்பட்டது போலிருந்தது. எனவே, பேராயரில்லாவிடில் அரசனுமில்லை என்ற தொனி எழும்பினது. எனவே, அரசும் சபையும் சேர்ந்த ஒரு நடுநிலைமை இங்கிலாந்தில் ஏற்பட்டது. இது உரோமைச் சபையின் கொள்கைக்கும் கால்வின் கொள்கைக்கும் இடைப்பட்டது. இது ஆங்கிலேய சபைக்கு ஒரு முக்கியமான அம்சம். உரோமைச் சபையைப் போல சபை அரசுக்கு மேலாக சர்வ அதிகாரம் செலுத்துவதுமில்லை.

கால்வின் கொள்கையைப் போல அரசு, சபைக்கு மேலாக சர்வ அதிகாரம் செலுத்துவதுமில்லை சபையும் அரசும் ஒன்றுக் கொன்று கிறிஸ்தவ தன்மையில் ஒன்றுபட்டு வாழும் நிலையை ஆங்கிலேய சபையில் காணலாம். அரசன் சுந்தர்புரி பிரதமப் பேராயரால் மகுடாபிஷேகம் செய்யப்படுதல், ஜெப புஸ்தகத்தில் அரசனுக்காக வேண்டுதல் அடங்கியிருத்தல் ஆகியவை இதற்குச் சான்றுகள்.

17–ஆம் நூற்றாண்டு ஆங்கிலிக்கன் சபையினர் திருமறையையும் பாரம்பரியத்தையும் முக்கியப்படுத்தினர். அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம் திருமறையையும் பாரம்பரியத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளதென்றும் அதிலடங்கிய 12 அம்சங்கள் பன்னிரு அப்போஸ்தலரால் பிறப்பிக்கப்பட்டன என்றும் உறுதியாய் நம்பப்பட்டது. திருமறையின் அடிப்படையில்தான் அவர்கள் பாரம்பரியத்திற்கு மதிப்பு கொடுத்தார்கள். எனவே, ஆங்கிலிகதன் சபை ஏழு சாக்கிரமந்துகள் உண்டெனப்பதையும், பொருள் மாறுதல் கொள்கையையும், உத்தரிக்குமிடத்தையும் பரிசுத்தவான்களுக்கு முறையிடுதலையும், சொரூப வணக்கத்தையும் பாவமன்னிப்புச் சலுகைகளையும் மறுத்துள்ளது.

பாரம்பரியத்தில் கூட்டிச் சேர்க்கப்பட்ட இத்தகைய கொள்கைகளை விட்டுவிட்டு திருமறையையே ஆங்கிலிக்கன் சபை வற்புறுத்தியுள்ளது. எனினும், சடங்குகள் ஒன்றுமே தேவையில்லை என்று துாயவர்களைப் போல் அவர்கள் எண்ணியதில்லை. அவை

மீட்புக்கு அவசியமில்லாவிட்டாலும் மார்க்க அனுசாரங்களுக்கு துணைக் கருவிகள் இன்றியமையாதவை என்று ஆங்கிலிக்கன் சபை நம்பினது. இந்த அளவில் அவர்கள் உரோமன் பாரம்பரிய எண்ணத்திற்கு இடம் கொடுத்தனர்.

போப்புவானவரின் சொல் தவறாத்தன்மையுள்ளதென்பதையும் ஆங்கிலிக்கன் சபை ஒப்புக் கொள்ளவில்லை. போப்புவானவரும், ஆலோசனை மன்றங்களும் தவறமுடியும். மனித மீட்புக்குரியவை திருமறையில் மிகத் தெளிவாக கடவுளின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் திரு அவதாரம், வாழ்க்கை , மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன. எனவே, இதற்கு வேறு எவருடைய விளக்கமும் தேவையில்லை. வரலாற்று நிகழ்ச்சிகளைக் காட்டும் தத்துவங்களையொட்டி வரலாற்றைக் கொண்டு செல்லுகிற தன்மையை குருத்துவத்தைப் பற்றிய ஆங்கிலிக்கன் சபை எண்ணத்தில் காணலாம்.

ஆங்கிலிக்கன் சபையின் ஆரம்ப காலத்தில் புரோகிதர் **(Priest)** என்ற சொல் வெறுக்கப்பட்டது. ஒரு போதகர் அவ்வாறு அழைக்கப்படலாகாதென்று அவர்கள் எண்ணினார்கள். ‘புரோகிதர்’ என்னும் சொல்லில் பலி செலுத்துகிறவர் என்ற பொருள் இருப்பதாகக் கருதினார்கள். நற்கருணையில் புரோகிதர் பலி செலுத்துகிறாரென்ற உரோமன் கத்தோலிக்க எண்ணத்தை ஆங்கிலிக்கன் சபை எதிர்த்த காரணத்தால் இவ்வாறு எண்ணியது. எனவே ‘பிரஸ்பிட்டா’ **(Presbyter)** அல்லது போதகப்பணியாள் **(Minister)** என்னும் சொல்லையே அவர்கள் விரும்பினார்கள்.

**பேராயர் ஆளுகை முறை (Episcopacy)** யைப் பற்றிய ஆங்கிலிக்கன் சபை எண்ணம் இங்கு குறிப்பிடத்தக்கது. போப்புவானவரை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. திருமறையின் அடிப்படையிலேயே பேராயர் ஆளுகை முறையை அவர்கள் செயல்படுத்தினார்கள். பேராயர் ஆளுகை முறையைக் கடவுளின் வெளிப்படுத்தலால் கட்டளையிடப்பட்ட ஒன்றாக அல்ல

திருச்சபையைக் காப்பதற்குக் கடவுளால் அங்கீகரிக்கப்பட்ட கிருபையின் கருவியாக அவர்கள் எண்ணினார்கள். பேராயர் ஆட்சி முறையைத் தவிர வேறெந்த ஆட்சி முறையும் கடவுளால் வந்ததல்ல என்ற எண்ணத்தை றிச்சர்ட் ஹுக்கர் **(Richard Hooker)** முதலியோர் வெளியிட்டுள்ளனர். கிறிஸ்து சபையில் முதல் பேராயர்கள் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர் என்று நம்பப்பட்டு வந்தது. காலப் போக்கில் அப்போஸ்தலர் ஏனையோருக்கு பேராயர் அதிகாரத்தைக் கொடுத்தனர்.

உரோமையில் அப்போஸ்தலரே லினாவைப்பேராயராக ஏற்படுத்தினார்கள் என்றும் சிமிர்னாவில் போலிகார்ப்பைப் பேராயராக அப்போஸ்தலர் நியமித்துள்ளார்களென்றும் அந்தியோகியாவில் இயோதியுவை ஏற்படுத்தினார்களென்றும் ஐரேனியு கூறியுள்ளார். இவ்வாறு பேராயர்கள் ஒருவர் பின் ஒருவராய் ஏற்பட்டனர். எல்லா பேராயர்களும் அப்போஸ்தலரின் மரபில் பின்வருவோர்கள் என்று யெரோம் கூறியுள்ளார். எனவே, பேராயர் ஆளுகை முறையைப் பின்பற்றும் ஆங்கிலிக்கன் சபை அப்போஸ்தல வரிசையை முக்கியப்படுத்துகின்றது.

ஆங்கிலேய சபைக்குப் பிரதானமான மற்றொன்று **பொதுவான ஜெபப்புஸ்தகமாகும்.** வழிபாட்டை மக்கள் நேசிக்கத்தக்கதாக இவ்வித ஜெப புஸ்தகம் ஏற்படுத்தப்பட்டது. ஆறாம் எட்வர்ட் காலத்தில் இது முதலாவது வெளி வந்தது. பிற்காலங்களில் இது திருத்தி அமைக்கப்பட்டது. இது ஆங்கிலிக்கன் சபை திருச்சபைக்குக் கொடுத்த அரும்பெரும் சொத்து எனலாம். அது ஒழுங்காய் அமைந்துள்ளதும், உயர் தரமானதும், திருமறையையே ஆதாரமாய்க் கொண்டுள்ளதுமாகும். அதிலடங்கிய நற்கருணை ஆராதனை முறை தனிச் சிறப்புள்ளது. சுருக்க ஜெபங்களும் திருமறைப் பகுதிகளும் மிக பொருத்தமானவை. லித்தானியா ஜெபங்களும் ஸ்தோத்திரங்களும் பக்திவிநயத்தை உண்டாக்கக்தக்கவை. திருமுழுக்கு, திருமணம், பிணியாளிகளை சந்தித்தல் ஆகியவற்றிற்குரிய ஆராதனை முறைகள்

மிக பொருத்தமும் தகுதியுமானவை. 39 விசுவாச அம்சங்கள் (**Thirty nine articles**) 1563 இலிருந்து ஆங்கிலேய சபையின் வேத சித்தாந்த பிரமாணங்களாயின.

வேத உபதேசத்திற்கிசைய விசுவாசிக்கப்பட வேண்டியவைகள் இவற்றில் அடங்கியுள்ளன. கடவுளைப் பற்றியும், இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் தூய ஆவியானவரைப்பற்றியும் மனிதனைப்பற்றியும் திருச்சபையைப்பற்றியும் விசுவாசிக்க வேண்டியவைகள் அவற்றில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பரிசுத்த நற்கருணையைப்பற்றி கொண்டுள்ள எண்ணத்தில் பொருள் மாறுதல் கொள்கை (**Transubstantiation**) தவிர்க்கப்படுகிறது. நற்கருணை நடக்கும் போதெல்லாம் கிறிஸ்து பலியிடப்படுகிறாரென்ற எண்ணத்தை ஆங்கிலிக்கன் சபை ஒப்புக்கொள்ளுகிறதில்லை, கிறிஸ்து ஒரே தரம் நம்மைத்தாமே பலி செலுத்தியுள்ளார். பாவத்துக்கு இனி வேறொரு பரிகாரம் இல்லை. கிறிஸ்துவின் இராப்போஜனம் ஒரு அடையாளம் மாத்திரமல்ல கிறிஸ்துவின் மரணத்தினாலே உண்டாகும் மீட்புக்குரிய சாக்கிரமந்தாயும் இருக்கிறது.

இராப்போஜனத்தில் கிறிஸ்துவினுடைய சரீரம் ஆவிக்குரிய திவ்விய பிரகாரமாக மாத்திரம் கொடுக்கப்பட்டும் வாங்கப்பட்டும் புசிக்கப்பட்டும் வருகிறது. கிறிஸ்து மன சரீரத்தை இராப்போஜனத்தில் வாங்கிப் புசிக்கிற யத்தனம் விசுவாசமே என்பது ஆங்கிலிக்கன் சபையின் எண்ணமாகும்.

ஆங்கிலிக்கன் சபையின் எண்ணத்தில் முக்கியமான மற்றொன்று மீட்படைவதற்கு அவசியமாய் அறிய வேண்டியவைகள் அனைத்தும் திருமறையில் அடங்கியுள்ளன என்பதாகும். திருச்சபை எக்காலத்திலும் அதிகாரமுள்ளவைகளாய் ஒப்புக் கொண்டுள்ள பழைய புதிய ஏற்பாடுகளிலுள்ள 66 புஸ்தகங்களை திருமறையாய்

அமையப் பெற்றது. இவற்றைத் தவிர எஸ்றாவின் மூன்றாம் ஆகமம், எஸ்றாவின் நான்காம் ஆகமம், தோபியாவின் ஆகமம், யூதிதின ஆகமம், எஸ்தர் ஆகமத்தின் குறை பங்கு, ஞான ஆகமம், சீராக்கின் குமாரன் இயேசுவின் ஆகமம், பாரூக்கு தீர்க்கதரிசியின் ஆகமம், மூன்று வாலிபரின் பாட்டு, சூசன்னாளின் வரலாறு, பெல்லையும் வலுசர்ப்பத்தையும் பற்றிய ஆகமம், மனாசேயின் ஜெபம், மக்கெபேயரின் முதலாம் ஆகமம் மக்கபேயரின் இரண்டாம் ஆகமம் ஆகிய தள்ளுபடி ஆகமங்கள் நல்லொழுக்கத்தில் தேறும்படியாக சபையில் வாசிக்கப்படலாம் ஆயினும், அவைகளைக் கொண்டு யாதொரு உபதேசத்தையும் ரூபிக்கலாகாதென்று ஆங்கிலிக்கன் சபை எண்ணுகிறது.

தொழுகைக்கு ஆங்கிலிக்கன் சபை முக்கிய இடமளிக்கிறது. இவ்விஷயத்தில் அது உரோமன் சபையைப் பின்பற்றுகிறது. திருச்சபையின் மன்றாட்டுகளை ஒவ்வொரு நாளும் சொல்லுதல் வேண்டும். அதற்காக காலை மாலை ஆராதனைமுறைகள் குறிக்கப்பட்டுள்ளன. அருளுரையை விட ஜெபங்களைச் சொல்லுதல் முக்கியமானதாய் எண்ணப்படுகிறது.

**குழந்தைகளுக்குத் திருமுழுக்கு**க் கொடுப்பது மிக இன்றியமையாத கடமை என்பதை ஆங்கிலிக்கன் சபை வற்புறுத்துகிறது. வயது வந்தவர்களுக்கு அது தேவையானால் குழந்தைகளுக்கும் அது தேவையானது குழந்தைகள் பரலோகராஜ்யத்திற்குரியவர்களானால் அவர்களுக்கு திருமுழுக்கு அவசியமானது. கடவுளே குழந்தைகளுக்கு பரலோக வாசலைத் திறந்து வைத்திருக்கும் பொழுது மனிதன் அதை அடைக்க முடியாது. குழந்தைகள் பரலோக ராஜ்யத்திற்குப் போக முடியாதென்றால் அவர்களுக்குத் திருமுழுக்கு அவசியமில்லை தான். பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின்படி விருத்த சேதனம குழந்தைகளுக்குச் செய்யவேண்டுமாயின் புதிய ஏற்பாட்டு நியமத்தின்படி திருமுழுக்கு குழந்தைகளுக்கு அவசியமானது. குழந்தைகள் பழைய இஸ்ரவேலில்

உறுப்பினர்களாயிருந்திருந்தால் புதிய இஸ்ரவேலிலும் அவர்கள் உறுப்பினர்கள். திருச்சபையில் குழந்தைகளுக்கு இடமில்லையென்றால் அது எவ்வளவு கொடுமையானது. கடவுள் பரிசுத்தமாய் எண்ணும் குழந்தைகளை மனிதன் அற்பமாய் எண்ணாதிருப்பானாக. மேலும் குழந்தைகள் திருமுழுக்கு பெற தகுதியற்றவர்களென்று எண்ணினால் அவர்கள் அவிசுவாச பெற்றோருக்குப் பிறந்தவர்கள் என்று எண்ணுவது போலாகும்.

கடவுள் குழந்தைகளுக்கு ஆவியானவரின் கிருபைகளையும் நடத்துதல்களையும் கொடுக்க வேண்டிக் கொள்ளக்கூடாது என்று எண்ணுவதற்கு அது சமம். திருமுழுக்குக்குப்பின் சிலுவை அடைளாளம் வரைதல் ஆங்கிலிக்கன் சபையின் நியமங்களில் ஒன்று. ஆதி அப்போஸ்தலர்களும் கிறிஸ்தவர்களும் சிலுவையை அற்பமாய் எண்ணாமல் அதை மகிமையாக எண்ணினார்கள். சிலுவையை உச்சரிப்பதே கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதையும் சிலுவைப் பாடுகளினால் உண்டான விளைவுகளையும் நினைவுப்படுத்தினது. அப்போஸ்தலருடைய காலத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் செய்கைகளிளெல்லாம் சிலுவை அடையாளமிடுதளை பயன்படுத்துதல் வழக்கமாயிருந்ததாகத் தெரிய வருகிறது.

ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிக்பையிட தாங்கள் வெட்கப்படவில்லை என்பதை வெளிப்படையாய் காட்ட அவர்கள் அப்படிச் செய்தார்கள் ஆதிச் சபையிலேயே திருமுழுக்குக்குப்பின் சிலுவை அடையாளம் வரைந்தனரென்று அறிகிறோம். திரு முழுக்கின் விலையைக் கூட்டுவதற்காக அது பயன்படுத்தப்படவில்லை. சிலுவையில் அறையுண்ட இயேசுவுக்கு சேவை செய்ய குழந்தை பிரதிஷ்டையாக்கப்பட்டது என்பது ஒரு அடையாளமாகக் காட்டப்பட்டது. திடப்படுத்தல் ஆங்கிலிக்கன் சபையில் ஒரு புனிதமான செயலாகக் கையாளப்பட்டு வருகிறது. உரோமன் கத்தோலிக்க சபையில் உள்ளது போல அதை ஒரு சாக்கிரமந்தாகக் கொண்டு நடத்தவில்லை. ஆதிச் சபையில் திருமுழுக்குக்குப்

பின்பரிசுத்த ஆவியைப்பெற தலையில் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்தது போல இது பின்பற்றப்படுகிறது.

நற்கருணை வழிபாட்டில் சமய உடுப்புகள் அணியப்பட்டன. காலத்திற்கேற்ற நிறங்களில் அவை அமைந்திருக்வின்றன. இது உரோமன் கத்தோலிக்கச் சபை பழக்கத்திலிருந்து வந்தது. பழைய ஏற்பாட்டுப் பிரதான ஆசாரியனுடைய ஆடையைப் பின்பற்றிய முறை இது. பேராயர்களின் ஆடை ஊதா நிறமுடையதாயிருக்கிறது. இம்முறை கத்தோலிக்க சபையில் 10–ம் நூற்றாண்டிலிருந்து செயலுக்கு வந்தது.

மேலும் பிரதான ஆசாரியன் திருத்தலத்துக்குச் சென்ற பொழுது அணிந்த தலை அணியைப் **(Mitre)** பேராயர்கள் திருச்சடங்குகளில் அணிந்தனர். அத்துடன் ஆடுகளின் தலைவன், ஆயன், தந்தை என்று காட்ட செங்கோலைப் பேராயர்கள் கையில் படித்துக் கொள்வர். ஒரு தனிப்பட்ட திருமண்டலத்திற்குரியவரென்று காட்ட மோதிரம் பேராயர்களின் ஒரு அணியாகும். பேராயர் ஒரு திரு ஆட்சியாளர் என்று காட்டட சிலுவை கழுத்தில் அணியப்படுகிறது.

இத்தகைய பாரம்பரியங்களையும் பழக்க வழக்கங்களையும் ஆங்கிலிக்கன், சபை பற்றிக் கொண்டிருக்க வேண்டியவைகளாக எண்ணாமல் **பக்திவிருத்திக்கேதுவாக பயன்படுத்துகின்றமையால் அனைத்துலக திருச்சபையில் பகிர்ந்து கொள்ளப்படவேண்டிய அம்சங்களாய் அவை மதிக்கப்படுகின்றன.**

இச்சபைப் பிரிவில் **பிரஸ்பிட்டீரியன் சபைகளும் காங்கிரிகேஷனல் சபைகளும்** அடங்கியுள்ளன.

பிரஸ்பிட்டீரியன் சபைகள் மூப்பர் ஆளுகையைப் பிரதானமாய்க் கொண்டவர்கள் காங்கிரிகேஷனல் சபைகள் சபை ஆட்சி முறையைப் பின்பற்றினவர்கள். இவ்விரு வகுப்பினர்களும் சேர்ந்த தென் இந்திய ஐக்கிய சபை பேராயர் ஆளுகை முறையை ஏற்றுக்கொள்ளாததாயிருந்தது. பிரஸ்பிட்டீரியன் சபையினர் ஆசாரியன் (**Priest**) என்னும் சொல்லை உபயோகியார்கள். அவர்களது எண்ணத்தில் எல்லா கிறிஸ்தவர்களும் ஆசாரியர்களே. பிரஸ்பிட்டர் என்னும் சொல்லே புதிய ஏற்பாட்டிற்குப் பொருத்தமுள்ளதென்று காண்கின்றனர். ‘ஊழியன்’ என்று சொல்வது மிகவும் பொருத்தம் என்று எண்ணுகின்றனர். ஏனெனில், சபை ஊழியங்கொள்ளும்படி இராமல் ஊழியஞ் செய்ய இருக்கிறது.

அப்போஸ்தல சபையில் ‘**பிரஸ்பிட்டர்**’ என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறபடியால் அதை பயன்படுத்துகின்றனர். சபையில் ஆட்சியைவிட பணியே முக்கியம் என்பது பிரஸ்பிட்டீரியன் சபையின் கருத்து. ஒரு அர்த்தத்தில் எல்லாரும் கிறிஸ்துவுக்குப் பணிபுரிகின்றவர்கள். எனினும் சிறப்புப்பணிபுரிய பிரஸ்பித்தர்மார்

ஏற்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் ஆண்டவரிடமிருந்து இப்பணியைப்பெற்று சபைக்குப் பணி செய்கின்றனர்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அவர்கள் அப்போஸ்தலரும் ஸ்தானாபதிகளுமாவர். பிரஸ்பிட்டர்கள் மக்களால் அனுப்பப்பட்டவர்களல்ல மக்களுக்கு ஆண்டவரால் அனுப்பப்பட்டவர்கள். பிரஸ்பிட்டர் ஒரு தனிச்சபைக்கென்று குருப்பட்டம் பெறுகிறவரல்ல. குருத்துவ பணிக்கு அவர்கள் குருப்பட்டம் பெறுகிறார்கள். குருப்பட்டம் அளித்தல் பிரஸ்பிட்டர்களின் வேலை. பிரஸ்பிட்டர்களின் கை வைப்பதினாலும், உபவாசத்தோடு கூடிய ஜெபத்தினாலும் அவர்கள் குருபட்டம் பெருகிறார்கள்.

ஒரு பிரஸ்பிட்டர் முதலாவது, தனக்குள்ளே ஆண்டவரின் அழைப்பை அறிந்திருக்கவேண்டும் பின்பு, ஒரு. சபை அவரைத் தங்கள் குருவாவிருக்க அழைத்தல் வேண்டும். அவர் ஆண்டவரால் அழைப்புப் பெற்றவரென்பதற்கு ஒரு சபையின் அழைப்பு சாட்சியாயிருக்கிறது. குழந்தைத் திருமுழுக்கு பிரஸ்பிட்டீரியன் சபையில் பின்பற்றப்படுகிறது. குழந்தையின் தந்தை அதைக் கொண்டு வரவேண்டும். தந்தை தவிர்க்க முடியாதகாரணத்தால் வர முடியாதிருந்தால் அவரது கிறிஸ்தவ நண்பரொருவர் அதைக் கொண்டுவரலாம். குழந்தையின் பெற்றோர் திருச்சபை உறுப்பினர்களாய் இருத்தல் வேண்டும் குருப்பட்டம் பெற்ற ஒரு பிரஸ்பிட்டரே திருமுழுக்கு கொடுக்கலாம்.

திருமுழுக்கு பொதுச்சபையில்தான் கொடுக்கப்பட வேண்டும். நற்கருணையில் பிரஸ்பிட்டர் அப்பத்தையும் ரசத்தையும் ஆசீர்வதித்து பிரதானிகளிடம் **(elders)** கொடுக்கிறார். அவர்கள் அவற்றைச் சபையாருக்குக் கொடுக்கின்றனர். ஒவ்வொருவரும் வாங்கி அடுத்தவருக்குக் கொடுக்கின்றனர். ஒவ்வொருவரும் வாங்குவதிலும் கொடுப்பதிலும் பங்குபெறுகின்றனர். இது ஆண்டவர் இராப்போஜனம் கொடுக்கையில் சீடர்கள் பின்பற்றின முறை. இம்முறை சுவிங்கிளியால் சூரிச்சபையில் புகுத்தப்பட்டது. இம்முறை சகோதர கூட்டுறவை

வளரச் செய்கிறது. தென் இந்தியாவில் பிரஸ்பிட்டீரியன் சபை ஸ்காத்லாந்திலிருந்து வந்தது.

ஸ்காத்லாந்தில் பிரஸ்பிட்டீரியன் முறையைப் புகுத்தினவர் யோவான் நாக்ஸ் என்பவர். அவர் கால்வினின் உபதேசங்களைப் பின்பற்றியவர். ஆண்டுக்கொருமுறை ஒரு பொது மன்றம் கூடுகிறது. ஆலோசனை மன்றங்களும் நடைபெறுகின்றன. ஒரு பிரஸ்பிட்டர் தலைவராக இயங்குவார். பிரதானிகளும் **(elders)** டீக்கன்மாரும் சபை ஆட்சியில் உதவுகின்றனர். சபையாருக்கு இவ்வாறு தகுந்த பொறுப்புக்கள் கொடுக்கப்படுகின்றன. தொழுகையில் எளிமை கால்வினுடைய எண்ணத்தின் அடிப்படையில் பின்பற்றப்படுறது. ஒன்றுக்கும் கட்டுப்பட்டிருக்கலாகாதென்பதும், பக்தியே முக்கியமானதென்பதும் அவர்களது எண்ணம். எனினும், ஸ்காத்லாந்து பிரஸ்பிட்டீரியன் சபைக்கு அதன் ஆராதனை ஒழுங்கு உண்டு.

காங்கிரிகேஷனல் சபைகளாக தென் இந்தியாவில் இயங்கியவை லண்டன் மிஷனரி சங்க சபைகளும் மதுரை அமெரிக்கன் மிஷன் சபைகளுமாகும். காங்கிரிகேஷனல் சபைகள் பேராயர் ஆளுகை முறையை விரும்பாமல் பணியையே முக்கியப்படுத்தின. பேராயர், மூப்பர், டீக்கன் என்பவை பதவிகளாயிராமல் மேற்பார்வையையும், பணியையுமே குறிக்கின்றன. போதகராயிருக்க வேண்டியவர் கடவுளால் அழைப்பும் பெற்றதை உணர்ந்து ஒரு சபையாலும் அழைப்பு பெற்றிருக்க வேண்டும். எந்த சபையினால் அவர் அழைப்பு பெற்று, குருப்பட்டம் பெறுகிறாரோ அந்தச் சபையில் அவர் உறுப்பினராகிவிடுகிறார்.

**திருப்பணி ஒரு உத்தியோகமாக அல்ல ஒரு ஊழியமாக எண்ணப்படுகிறது.** காங்கிரிகேஷனல் சபைகள் தனித்தனி ஆட்சிப் பொறுப்புடையவையாக இயங்கினாலும் கூட்டுறவுக்காக ஆலோசனை மன்றங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சபையிலுமுள்ள சபைக் குழுக்கள் ஒரு சபாலோசன மன்றத்தால் இணைக்கப்படுகின்றன. சபாலோசனைச் சங்கத்தில் சபைகளின் பிரதிநிதிகள் உறுப்பினர்கள்.

இம்மன்றத்திற்கு ஒரு தலைவரும் உபதலைவரும் செயலாளரும் இருப்பார்கள். ஞாயிறு காலை வழிபாடு மிகவும் முக்கியமானது. சுயேச்சையான மன்றாட்டுகளே விரும்பப்படுகின்றன. அருளுரை ஆற்லுதலே முக்கியமாகக் கருதப்படுகிறது. நடு வாரத்திலும் ஒரு ஆராதனை மாலையில் நடத்தப்படுகிறது.

நற்கருணை ஆராதனைகள் மாதத்தின் முதல் ஞாயிற்றுகள் கிழமைகளில் அல்லது ஆண்டுக்குச் சில தடவைகளில் மட்டும் நடத்தப்படுகிறது, அடிக்கடி நற்கருணை நடத்தப்பட்டால் அதன் மதிப்பு குறைந்துவிடுமென்பது எண்ணம்.

காங்கிரிகேஷனல் சபைகள் பொதுவாக ஒரு ஜெப புஸ்தகத்திற்கு அடிமைப்பட்டிராமல் சுயாதீனமாகத் தொழ விரும்புகின்றன. திட்டமான ஆராதனை முறைகளில் ஆவியானவர் செயலாற்றுகிறாரென்பதை ஏற்றுக்கொள்ள காங்கிரிகேஷன் சபையார் விரும்புகிறதில்லை.

மெதடிஸ்து சபைகளுக்குத் தூய்மை முக்கியமானது. எனவே, மெதடிஸ்து சபையில் கிறிஸ்தவ அனுபவமும் பரிசுத்த ஆவியானவரின் செயலாற்றுதலும் வலியுறுத்தப்படுகின்றன. யோவான் வெஸ்லியின் எண்ணத்தின்படி தூய்மை என்பது பாவமில்லாத பூரண நிலையன்று, தூய்மை பூரண அன்பாகும். மெதடிஸ்து சபையில் சேர விரும்புகிறவர்கள் விசுவாச வாழ்க்கை நடத்த ஆர்வமுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். கிறிஸ்தவ கூட்டுறவு மெதடிஸ்து சபையில் அதிகமான வலியுறுத்தம் பெறுகிறது. வகுப்பு கூட்டங்களின் மூலம் இது வளர்க்கப்படுகிறது.

அருளுரைகளுக்கு முன்போ பின்போ பொதுவான சம்பாஷணைகள் தவிர்க்கப்படுகிறது. பாடல்களின் கருத்துக்கள் உணர்த்தப்பட்டு பாடப்படுகின்றன. பாடல்களில் உணர்ச்சி வசப்படுதல் உற்சாகப்படுத்தப்படாமல் உண்மையாகக் கடவுளைத் துதிப்பதே ஆதரிக்கப்படுகிறது. சிலுவையிலறையுண்டு உயிர்த்தெழுந்த கடவுளின் குமாரனின் மீட்பின் வேலையிலுள்ள விசுவாசத்தின் மூலம் தூய்மையை அடைய எவர் விரும்புகின்றனரோ அவர்கள் பேராயர் ஆளுகை முறையைப் பின்பற்றுகிறவர்களாகவோ, பிரஸ்பிட்டீரியன் முறையைப் பின்பற்றுகிறவர்களாகவோ, சுயாதீன முறையைப் பின்பற்றுகிறவர்களாகவோ இருப்பினும் அவர்கள் மெதடிஸ்து சபையின் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்படுவர்.

மெதடிஸ்து சபையாருக்குக் கிருபையின் எத்தணங்கள், ஜெபம், திருமறை வாசிப்பு, நற்கருணை ஆகியவை, இவற்றோடு உபவாசம், கிறிஸ்தவ மாநாடுகள், வகுப்பு கூட்டங்கள் ஆகியவையும் சேர்க்கப்படுகின்றன. தொழுகை முறையில் அவரது எண்ணங்கள் ஆங்கிலிக்கன் சபையின் ஜெப புஸ்தகத்தை அடிப்படையாய்க் கொண்டுள்ளன. இந்நாள் வரையிலும் மெதடிஸ்து ஆராதனை முறையில் ஆங்கிலிக்கன் ஆராதனை முறையின் அம்சங்கள் அடங்கியுள்ளன. ஆங்கிலிக்கன் சபையின் ஜெப புஸ்தகத்தை யோவான் வெஸ்லி மிகவும் பாராட்டி உலகிலுள்ள எத்தகைய லித்தானியா முறைகளையும்விட அதுவே மிகச் சிறந்ததென்று தாம் நம்புவதாகக் கூறியுள்ளார்.

மெதடிஸ்து சபையில் நற்கருணையைப் பற்றி நான்கு எண்ணங்கள் உள்ளன.

1. இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் மாணத்தையும் நினைவு கூருதல்,
2. கிருபையின் எத்தனமும் அடையாளமுமாகும்
3. பரலோக வாழ்வைப் பற்றிய உறுதி
4. நற்கருணை ஒரு பலியைக் குறிக்கிறது.

பலி ஒரு தடவை நடந்தது என்றும் எண்ணினார்கள். இப்பொழுது அந்த பலி நற்கருணையில் இருக்கிறதென்றும் அவர்கள் நம்பினார்கள். இது யோவான் வெஸ்லியின் எண்ணம். குழந்தைகளுக்கு மெதடிஸ்து சபையில் திருமுழுக்கு கொடுக்கப்படுகிறது.

குருப்பட்டம் பெறாதவர்கள் திருமுழுக்கு கொடுக்கலாகாதென்பது மெதடிஸ்து சபையின் எண்ணம். 18–ஆம் நூற்றாண்டில் மெதடிஸ்து சபையில் ஒரு பிரிவினர் பேராயர் ஆளுகை முறையை வெறுத்தனர். மற்ற பிரிவினர் பேராயர் ஆளுகை முறையை

ஒப்புககொண்டனர். இத்தகைய வித்தியாசமான பாரம்பரியங்களும் எண்ணங்களுமுள்ள மூன்று சபைகள் தென் இந்தியாவில் ஒருமைப்பாட்டுக்கு இசைந்தது தூய ஆவியானவரின் செயலேயன்றி வேறல்ல.

# ஒருமைப்பாடு தென் இந்தியாவில் ஏற்பட்ட வரலாறு

இருபதாம் நூற்றாண்டு திருச்சபை ஒருமைப்பாட்டின் நூற்றாண்டு என்று பொதுவாகக் கூறப்படுகிறது. இது தென் இந்தியாவிலுள்ள சபை வரலாற்றில் மிக உண்மையாகும். பல மிஷெனரி சங்கங்கள் தென் இந்தியாவில் உழைத்த போது ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் ஏற்பட்டன. ஒரே இனத்தவர்களே இட வித்தியாசத்தின் நிமித்தமாகவும், வித்தியாசமான சபைப்பிரிவுகளில் சேர்ந்திருந்த காரணத்தினாலும் பிரிந்திருந்தனர். மேநாட்டு மிஷனரிமார் நற்செய்தியை இங்கு கூறி சபைகளை நிறுவியபொழுது தத்தம் வழிபாட்டு முறைமைகளையும் சடங்குகளையும் சபைக்குள் புகுத்தலாயினர்.

1795–இல் நிறுவப்பட்ட லண்டன் மிஷனரி சங்கமானது தனது மூலப்பிரமாணத்தில் "**மூப்பராட்சி முறைமையையோ, சுடாதீன ஆட்சி முறைமையையோ, வேறெந்த சபை ஒழுங்கையோ, ஆளுகையையோ பரப்புவதல்ல. ஸ்தோத்திரிக்கப்பட்ட கடவுளின் மகிமையான நற்செய்தியை பிறமதத்தினரிடம் கூறுவதே தங்கள் நோக்கம்**'' என்று கூறியது. எனினும் செயல் முறையில் ஒருவித காங்கிரிகேஷனல் சபை ஆட்சி முறையையே பரப்பியுள்ளனர். எனவே, சார்லி சிமியோன் என்னும் ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்தவர் லண்டன் மிஷனரி சங்கத்தோடு சேர்ந்து கொள்ள முடியாது என்றார். ஏனெனில் லண்டன் மிஷனரி

சங்கத்தின் ஆராதனை முறைகளும் ஆட்சி முறையும் ஒழுங்கீனமாக அவருக்குத் தோன்றியது.

ஆங்கிலிக்கன் சபையிலும் சுவிசேஷ பிரபல்ய சபை என்றும் சபை மிஷனரி சங்கம் என்றும் இருபிரிவுகள் தென் இந்தியாவில் பணியாற்றின. சுவிசேஷ பிரபல்ய சபை சடங்குகளையும் தொழுகையையும் வற்புறுத்தினது. சபை மிஷனரி சங்கம் நற்செய்திப்பணியில் அதிக ஆர்வமுடையதாயிருந்தது. இரு பிரிவுகளிலும் ஏற்பட்ட வேறுபாடுகள் சபையினரைப் பாதித்தன. இறையியல் கருத்துக்களிலிருந்த வேறுபாடுகளும் சபைகளில் பிரிவினைக்குக் காரணமாயிருந்தது. லுத்தரன் சபையினர் வேறு சபைகளோடு உறவு கொள்ளாதிருந்தனர். நற்கருணையிலோ போதக ஊழியத்திலோ ஒரு சபையினர் மற்ற சபையினரோடு கலந்து கொள்ளக் கூடாதவர்களாயிருந்தனர். இந்தியர்களுக்கு ஆரம்ப காலங்களில் சபைப் பொறுப்புகள் கொடுக்கப்படாமலிருந்தது. சமய தூதுவர்களே ஆட்சியில் நிர்வாகிகளாயிருந்தனர். ஆலோசனை மன்றங்களிலும் சமய தூதுவர்களே பெரும்பாலும் பங்கு கொண்டனர். இக்காரணத்தினால் இந்திய சபையினர் மிஷன் மனநிலையுடையவர்களாயிருந்தனரேயன்றி பரந்த நோக்கற்றவர்களாயிருந்தனர். ஒவ்வொரு சபைப் பிரிவினரும் தங்கள் சபையே உண்மையான சபை என்று எண்ணினர். இன வேறுபாடு, பிரிவினைக்கு மற்றொரு காரணமாயிருந்தது. இனவேறுபாட்டின் காரணமாக கிறிஸ்தவர்கள் தொழுகை இடத்திலும் சமூக வாழ்க்கையிலும் பிரிந்திருந்தனர்.

நற்செய்திப் பணியிலும் கிறிஸ்தவர்கள் ஈடுபட்ட போது சபைக்குள்ளே பிரிந்திருப்பது எத்தகைய பெரிய இடையூறு என்பதை மக்கள் உணரலாயினர். பிற மதத்தினரும் சபைக்குள்ளிருக்கும் பிரிவுகளைக் கண்டு திகைக்கக் கூடிய நிலை ஏற்பட்டது. ஆள் பெயரின் காரணத்தாலும் இடப் பெயரின் காரணத்தாலும் பற்பல சபைப் பிரிவுகள் ஏற்பட்டிருந்த மக்கள் கண் விழிக்கலாயினர். ஆங்காங்கே தங்களைச் சுற்றியிருந்த இடங்களில் சென்றபோது பல பிரிவினரோடு

தொடர்பு, கொள்ளும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைத்தன. 1876 – 1878இல் ஏற்பட்ட பஞ்சத்தில் பலர் இடம் விட்டு வேறு இடம் சென்றனர். இவ்வாறு திருநெல்வேலி, மதுரை, சென்னை, இலங்கை ஆகிய இடங்களிலுள்ள கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கலாயினர். அதன் மூலமாகவும் திருமண உறவின் மூலமாகவும் வித்தியாசமான பிரிவிலுள்ளவர்கள் தொழுகையிலும் சபை வாழ்க்கையிலும் இணைக்கப்படலாயினர்.

கல்வியினாலும் இத்தகைய தொடர்பு ஏற்பட்டது. சான்றாக, சென்னையில் 1837– இல் ஸ்காத்லாந்து பிரஸ்பிட்டீரிய மிஷனால் நிறுவப்பட்டதும், பிற் காலத்தில் சென்னை கிறிஸ்தவ கல்லூரி என்று அழைக்கப்பட்டதுமான கல்லூரியில் தென்னாட்டிலுள்ள பலர் கற்ற பொழுது ஆங்கிலிக்கன் சபையினரும், காங்கிரிகேஷனல் சபையினரும் பிரஸ்பிட்டீரியன் சபையினரோடு தொடர்பு கொள்ளலாயினர். இவ்வாறு திருச்சிராப்பள்ளிக்குச் சென்றவர்கள் மெதடிஸ்து சபையையோ லுத்தரன் சபையையோ சேர்ந்தார்கள். திருவிதாங்கூருக்குச் (கன்னியாகுமரி – கேரளம்) சென்றவர்கள் லண்டன் மிஷனெரி சங்க சபைகளில் சேரலாயினர். திருச்சபையின் ஒருமைப்பாட்டு இயக்கம் "**மிஷன் தளம்**" என்று அழைக்கப்படும் சபைகளிலிருந்துதான் துாண்டுதலைப் பெற்றுள்ளதென்று கூறுவது சாலவும் பொருந்தும். இக்காலத்தில் இந்தியாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் பணியாற்றிய மிஷனரி சங்கங்களுக்குள் ஒரு புத்துணர்சி ஏற்பட்டது. மிஷனரி சங்கங்கள் வெவ்வேறு சபைப்பிரிவுகளைச் சேர்ந்தவைகளாயிருப்பினும் ஊழியத்தில் ஒன்றோடொன்று ஒத்துழைக்க வேண்டுமென்ற எண்ணம் உருவானது. என்வே, பல பிரிட்டீஷ் மிஷனரி சங்கங்களின் செயலாளர்கள் 1819 முதல் ஏறத்தாள 120 ஆண்டுகளாக மாதம்தோறும் கூடி ஜெபித்தனர். இதன் விளைவாக மிஷனரி சங்க மாநாடுகள் நடத்தப்படுவதற்கு ஏதுவாயிற்று.

தென் இந்தியாவில் முதல் மிஷனரி மாநாடு 1858 ஏப்ரலில் 19 முதல் மே 5 வரை உதகமண்டலத்தில் கூடினது. எட்டு மிஷனரி

சங்கங்களிலிருந்து 32 பிரதிநிதிகள் கூடி ஊழிய சம்பந்தமான பல காரியங்கள் ஆலோசிக்கப்பட்டன. ‘**இந்திய திருச்சபை**’ என்றது அப்பொழுதே தொனிக்க ஆரம்பித்துவிட்டது.

இரண்டாம் மிஷனரி மாநாடு பெங்களூரில் 1879 ஜுன் 11 முதல் 18 வரை நடைபெற்றது. 15 மிஷனரி சங்கங்களிலிருந்து 118 பிரதிநிதிகள் சேர்ந்து திருச்சபை ஒருமைப்பாடு, இந்திய திருச்சபை உருவாகுதல், சுய ஆதரவு, சுய நிர்வாகம் ஆகிய காரியங்களைக் குறித்து ஆய்வு செய்தனர். அவர்களில் 14 பேர் இந்தியராவர்.

மூன்றாம் மிஷனரி மாநாடு சென்னையில் 1900–இல் ஜனவரி 2 முதல் 5 வரை நடைபெற்றது. இதில் கூடின 150 பேரில் 24 பேர் மட்டும் இந்தியராயிருந்தனர். இம் மாநாடு அதற்குப் பின் நடந்த மாநாடுகளுக்கு ஒரு வழி காட்டியாய்க் காணப்பட்டது. மிஷனரி சங்கங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று இம்மாநாட்டில் கூறப்பட்டது. அனைத்துலக மிஷனரி மாநாடு 1910– இல் எடின்பரோவில் கூடுவதற்கும் இது ஒரு முன்னோடியாயிருந்ததென்று கூறலாம்.

1910– இல் எடின்பரோவில் கூடின அனைத்துலக மிஷனரி மன்றத்தில் ‘ஒத்துழைப்பு’, ’ஒருமைப்பாடு’ ’ஒன்று கலந்தாலோசித்தல்’ ஆகியவை வலியுறுத்தப்பட்டன. இம்மன்றத்தின் ஒரு விளைவு இந்தியாவில் சிறப்பாக தென் இந்தியாவில் ஏற்பட்ட திருச்சபை ஒருமைப்பாட்டு இயக்கமாகும். இந்தியாவில் தோன்றின முதல் திருச்சபை ஒருமைப்பாடு பிரஸ்பித்தீரியன் சபை ஒருமைப்பாடாகும்.

1865இலேயே இந்தியாவிலுள்ள பிரஸ்பிட்டீரியன் சபைகள் அனைத்தும் ஒருமைப்பட வேண்டுமென்று வட இந்தியாவிலுள்ள அமெரிக்கன் பிரஸ்பிட்டீரியன் சபை பேரவையில் ஆலோசிக்கப்பட்டது. 1877–இல் இந்திய பிரஸ்பீட்டிரியன் கூட்டிணைப்பு(**Indian Presbyterian Alliance**) உருவானது. இந்த கூட்டிணைப்பு இந்தியாவிலுள்ள பிரஸ்பிட்டீரியன் சபைகளை உறுப்பு இணைப்புக்கல்ல

**(Organic union)** ஒரு நெருங்கின கூட்டுறவுக்குள் கொண்டு வர முயன்றது.

1899–இல் தென் இந்தியாவிலுள்ள பிரஸ்பிட்டேரியன் சபைகள் இணைப்பைக் குறித்து ஆலோசிக்கலாயினர். 1900–இல் சென்னையில் நடைபெற்ற மிஷனரி மாநாட்டினால் தூண்டப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் அதற்கென்று ஒரு கூட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டது. இதன் விளைவாக 1901–இல் பிரஸ்பீத்திரியன் தென் இந்திய ஐக்கிய சபை ஏற்பட்டது. இதில் சேர்ந்த சபைகள் அமெரிக்கன் ஆர்காட் மிஷன், ஸ்காத்லாந்து சபை, ஸ்காத்லாந்து சுயாதீன சபை ஆகியவையாகும். இது கூட்டிணைப்பாகும் **(Federal union)**.

டாக்டர் ஜேக்கப் சேம்பர்லைன் அதற்குத் தலைவரானார். தென் இந்தியாவிலுள்ள காங்கிரிகேஷனல் சபைகளும் ஒருமைப்பட முயற்சிகள் எடுத்தன. அவை மதுரை அமெரிக்கன் மிஷன் சபைகளும் லண்டன் மிஷனரி சபைகளுமே. இவை இரண்டும் இணைந்து 1905 ஜூலை மாதம் மதுரையில் முதல் பொது மன்றம் நடைபெற்றது. லண்டன் மிஷனரி சங்கத்தின் மிஷனரியாயிருந்த டாக்டர் ஜே. டதி அதன் தலைவராயிருந்தார். இதற்குப் பின் பிரஸ்பிட்டீரியன் சபைகளும் காங்கிரிகேஷன் சபைகளும் ஒருமைப்பட ஒத்துக்கொண்டன. லண்டன் மிஷனரி சங்கத்தின் சபைகள் தனிச்சபை ஆட்சி முறையை விட்டு சபாலோசனைச் சங்கத்தின் ஆட்சிக்குள் வந்தன.

பிரஸ்பிட்டீரியன் சபைகளும் எளிமையான விசுவாச அறிக்கையை ஏற்றுக்கொள்ள முன் வந்தது. இவ்வாறு இரு சபைகளும் சிலவற்றை விடவேண்டியதாயிருந்தது. எனினும் இப்புதுச்சபை பெரும்பான்மையும் பிரஸ்பிட்டேரிய அமைப்பைப் பெற்றுள்ளது. 1908 ஜூலை 25–ஆம் நாள் தென் இந்திய ஐக்கிய சபை பிறந்தது. மறைத்திரு து. மு. உயிக்காப் அதன் முதல் தலைவராயிருந்தார். தென் இந்திய ஐக்கிய சபையில் எட்டு சபாலோசனைச் சங்கங்கள் இருந்தன. அவையாவன:

1. தெலுங்கு சபாலோசனைச் சங்கம்.
2. கன்னட சபாலோசனைச் சங்கம்
3. மாறாஸ் சபாலோசனைச் சங்கம்
4. ஆர்காடு சபாலோசனைச் சங்கம்
5. வட தமிழ் சபாலோசனைச் சங்கம்
6. மதுரை சபாலோசனைச் சங்கம்
7. திருவாங்கூர் சபாலோசனைச் சங்கம்
8. யாழ்ப்பாணம் சபாலோசனைச் சங்கம்.

தென் இந்திய ஐக்கிய சபையில் இந்திய தலைமை மிகவும் கவனத்திற்கெடுக்கப்பட்ட விஷயமாயிருந்தது. 1912 டிசம்பர் மாதத்தில் கல்கத்தாவில் ஜான் ஆர் மாட் என்பவரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்திய தேசீய மிஷனரி மாநாட்டில் இந்தியர்களுக்கு ஐரோப்பியரோடு சம பொறுப்புகள் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. 1900 முதல் 1910 வரை இந்திய தேசிய காங்கிரஸ் வளர்ச்சியடைந்த காலம். இந்திய கிறிஸ்தவர்களும் விழித்தெழுந்தனர்.

1890–இல் சென்னையில் ஆரம்பமான வாலிப கிறிஸ்தவ சங்கம் இந்திய கிறிஸ்தவ தலைவர்களுக்கு அதிக வாய்ப்புகள் அளித்தன. இத்தலைவர்கள் திருச்சபை ஒருமைப்பாட்டு இயக்கத்திலும் அதிக பங்கெடுத்தனர். கே. டி. பவுல், வே சா . அசரியா, வி சந்தியாகோ ஆகியோர் அவர்களில் தலைசிறந்தவர்கள். இந்திய கிறிஸ்தவ தலைவர்கள் நற்செய்திப்பணியில் அதிகமாக ஈடுபட்டனர். 1901 ஆட்தொகைக் கணக்கு கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 1/100 என்று வெளிப்படுத்தியது. இது இந்திய கிறிஸ்தவ தலைவர்களுக்கு ஒரு அறைகூவலாக இருந்தது. இந்த தலைமுறையில் இந்தியாவை

சுவிசேஷமயாக்குதல், என்னும் குறிக்கோளுடன் அவர்கள் உழைக்கலாயினர். வே. சா. அசரியா வேறு சில இந்திய வாலிபரையும் கொண்டு 1903 பெப்ருவரி 2–ம் நாள் இந்திய மிஷனரி சங்கத்தை நிறுவினார்.

அசரியா அதன் முதல் செயலாளராக செயலாற்றினார். 1905 கிறிஸ்மஸ் தினத்தன்று அசரியா கே. டி. பவுல், ஜி. எஸ். எடி ஆகிய 16 இந்திய கிறிஸ்தவர்கள் செராம்பூரிலுள்ள ஹென்றி மார்ட்டின் பகோடாவில் இந்திய தேசிய மிஷனரி சங்கத்தை நிறுவினார்கள். அதன் குறிக்கோள் இந்திய மனிதரால், இந்திய பணத்தைக் கொண்டு, இந்திய முறையில் நற்செய்திப்பணி செய்ய வேண்டுமென்பது. 1912–இல் ஜாண் ஆர் மாட் கல்கத்தாவில் நடந்த இந்திய தேசீக மிஷனரி மாநாட்டில் இந்திய கிறிஸ்தவ தலைவர்களுக்குச் சம இடம் கொடுக்கவேண்டுமென்று வலியுறுத்தினது ஒரு சிறந்த கட்டம் எனலாம்.

ஆங்கிலிக்கன் சபை இவ்விஷயத்தில் முன்னேற்றம் காட்டியது. அசரியா டீக்கனாவும் குருவாகவும் ஏற்படுத்தப்பட்டபின் 1909–இல் தோர்ணக்கல்லில் மிஷனரியாக ஊழியம் ஆரம்பித்தார். அவரை ஆங்கிலிக்கன் சபை பேராயராக 1912–இல் அபிஷேகம் செய்தது. முதல் இந்தியராகப் பேராயரான சிறப்பு கனம் அசரியா அவர்களுக்குக் கிடைத்தது. ஆனால் தென் இந்திய ஐக்கிய சபையில் மிஷனரிமார் இந்திய கிறிஸ்தவ தலைவர்களின் எண்ணங்களுக்கு ஆலோசனை மன்றங்களில் தகுந்த வாய்ப்பு கொடுக்காதது வருந்தத்தக்கதாயிருந்தது. கே. டி, பவுல் முதலியோர் நற்செய்திப் பணி மிஷன் மையமாக அல்ல சபைமையமாக இருக்க வேண்டுமென்பதை வற்புறுத்தினார்கள். குறிப்பாக லண்டன் மிஷனரி சங்கத்தின் மிஷனரிமார் சிற்றரசர்களைப் போல அதிகாரம் செலுத்தினார்கள். இதை எய்ச். ஏ. பாப்லி என்னும் லண்டன் மிஷனரி சங்கத்தின் மிஷனரி எதிர்த்தார்.

ஆங்கிலிக்கன் சபையின் முன்னேற்ற எண்ணம் பாராட்டப்பட்டது. மதுரை சபாலோசனை சங்கம் 1909–இல் ஆங்கிலிக்கன் முறைமையால் கவரப்பட்டு திருநெல்வேலி திருமண்டில ஆலோசனை மன்றத்தின் சட்ட அமைப்பின் அடிப்படையில் ஒரு புதிய சட்ட அமைப்பை உருவாக்கியது. ஆங்கிலிக்கன் சபை இந்திய சுய ஆட்சி முறையை ஊக்குவிப்பதிலும் முன்னேற்றம் காட்டியது. ஆங்கிலிக்கன் சபைக்குள் இந்திய சுய ஆட்சியை வளர்த்ததற்கு சிறப்பிடம் திருநெல்வேலி திருமண்டிலம் பெற்றுள்ளது.

இந்திய தலைவர்களுக்குக் கூடுதலான பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. சபை ஆலோசனை மன்றங்களை பேராயர் ஜெல், கானன் செல் ஆகியோர் உட்புகுத்தினார்கள். இதன் மூலம் பொதுச் சபையார் திருமண்டிலத்தில் ஆலோசனைகளில் ஒத்துழைக்க முற்பட்டனர். ஒருமைப்பாட்டு முயற்சியிலும் சில முக்கியமான நிகழ்ச்சிகள் ஆங்கிலிக்கன் சபையில் நடந்தன. சென்னையில் பேராயராக 1899–இல் அபிஷேகம் பண்ணப்பட்ட ஹென்றி உயிட் கெட் தன் சபையைப்பற்றிய திட மனப்பான்மையுள்ளவராயிருந்தார். கல்கத்தாவில் மிஷன் மேலகிகாரியாயிருந்த பொழுது அவர் இதர சபைப் பிரிவுகளிலுள்ள மிஷனரிமார் கூடின மாநாடுகளில் ஒரு போதும் சேர்ந்து கொண்டதில்லை. ஆனால் அவர் சென்னைப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் ஒருமைப்பாட்டு இயக்கத்தில் தலையான இடம் எடுத்துள்ளார்.

தென் இந்தியாவில் நற்செய்தி பரப்புவதற்குரிய சூழ்நிலையை அவர் கண்டார். கல்வி முறையால் பெரும்பாலும் ஒரு மன மாற்றமும் இல்லை என்பதை அவர் கண்டார். ஆங்கிலிக்கன் சபை தனிமையாக இம்மாபெரும் நற்செய்திப் பணியில் ஈடுபட முடியாதென்பதையும் சபைகள் ஒருமைப்படுவதிலேயே பலம் இருக்கிறதென்பதையும் அவர் உணர்ந்தார். கோடிக்கணக்கான இந்திய மக்கள் குணப்படுவது சடங்காசாரங்களைப்பற்றிப் பிடித்திருப்பதைவிட முக்கிய மென்பதை அவர் அறிந்தார். ஆனால், ஒரு கூட்டம் கிறிஸ்தவர்கள் சேர்ந்து ஒரு

சபையை உண்டாக்கலாமென்ற சுயாதீன சபைக் கொள்கையை பேராயர் உயட்கெட் ஒப்புக்கொள்ளவில்லை. வரலாற்று சம்பந்தமான பேராயர் ஆளுகை முறை ஒருமைப்பாட்டிற்கு இன்றியமையாததென்பது அவரது கருத்து. இனவேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கும் அது ஏற்ற முறை என்றார். ஒருமைப்பாட்டைப்பற்றி லாம்பத் மாநாடு 1888–இல் வகுத்ததை அவர் வலியுறுத்தினார். அதாவது, பேராயர் ஆளுகை முறையைப் பின்பற்றாத சபைகள் பேராயர் ஆளுகை முறையைப்பற்றி என்ன அர்த்தம் கொண்டாலும் அந்த முறையை ஏற்றுக்கொள்வது அவசியம் என்று அவர் கூறினார்.

1910–இல் சென்னையில் விசுவாசத்தையும் அமைப்பையும் பற்றிய ஆலோசனை மன்றத்தில் இவ்விஷயங்கள் ஆய்வு.செய்யப்பட்டன. முடிவில் தென் இந்திய ஐக்கிய சபையின் சட்டத்தையும் லாம்பத் நாற்கட்டத்தையும் (**Lambeth Quadrilateral**) அடிப்படையாய்க் கொண்டு திருச்சபை ஒருமைப்பாடு உருவாக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டது. . ஆனால், லாம்பத் நாற்கட்டம் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. எனினும், இது அதிகார பூர்வமான கூட்டமல்ல. எனவே, அதன் தீர்மானங்கள் ஒரு சபையையும் பாதிக்காது ஆயினும், ஒருமைப்பாட்டிற்குள்ள முதல்படி எடுக்கப்பட்டாயிற்று. ஒத்துழைப்பைப் பேசின காலம் மாறி ஒருமைப்பாட்டைப் பேசும் காலம் வந்துவிட்டது. இச்சமயத்தில் வெஸ்லியன் மெதடிஸ்து சபை தென் இந்தியாவில் வளர்ச்சியடைந்த முறை தென் இந்தியாவின் மிஷன் வரலாற்றில் சிறப்பானது. கும்பல் இயக்கத்தினால் அநேகர் கிறிஸ்தவர்களானார்கள்.

1907–இல் ஹைதராபாத்தில் 10,000–உம் 1913–இல் 17,000–உம், 1922–இல் 48,000 மாக வளர்ந்தது. சென்னை, மைசூர், திருச்சினாப்பள்ளி, ஹைதரபாத் முதலிய மாவட்டங்களில் மெதடிஸ்து சபை வளர்ந்தது. தென் இந்திய ஐக்கிய சபை மெதடிஸ்து சபையோடு ஒருமைப்பட ஆவல் கொண்டது. ஆனால் மெதடிஸ்து சபை சுயாதீன சபைகளோடு உறவு கொள்ளத் தயங்கினது. எனினும், 1914–இலும்

1915–இலும் இரு சபைகளுக்கும் பேச்சு வார்த்தைகள் நடந்தன. மெதடிஸ்து சபைத் தலைவர்கள் சபையின் மேலதிகாரம் ஒரு ஆலோசனை மன்றத்திடம் இருப்பதைவிட எல்லாவற்றிற்கும் மேலான ஒரு பேரவையில் இருப்பதையே தாங்கள் விரும்புவதாகக் கூறினர் இதற்கு தென் இந்திய சபை பிரதிநிதிகள் ஒப்புதல் தெரிவித்தனர். ஆனால் ஒரே மத்திப் பேரவையைவிட மாகாண பேரவைகளில் அதிகாரம் இருப்பது நன்று என்று கூறி ஒரு சமரசத்திற்கு வந்தனர். அந்தந்த சபைகளில் இவ்விஷயம் ஆலோசிக்கப்பட்ட போது மெதடிஸ்து சபையிலுள்ள இந்தியர்கள் பிரிட்டிஷ் மெதடிஸ்து மாநாட்டிலிருந்து பிரிவதை விருமபவில்லை. எனவே பேச்சு வர்த்தைகளில் தடை ஏற்பட்டது.

தென் இந்திய ஐக்கிய சபை பேசல் மிஷனோடும் ஒருமைப்பட விரும்பினது. எனவே, 1913– இல் பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்தன. 1918–இல் பேசல் மலபார் மிஷன் தென் இந்திய ஐக்கிய சபையோடு ஒருமைப்பட ஆசித்தது. 1919 மார்ச் மாதத்தில் அது தென் இந்திய ஐக்கிய சபையோடு சேர்ந்து மலபார் சபோலோசனை சங்கத்தின் கீழ் இயங்கியது. 1919. இல் தரங்கம்பாடி திருச்சபை ஒருமைப்பாட்டு பேச்சு வார்த்தைகளுக்கு முக்கிய இடமாயிற்று. விசுவாசமும் அமைப்பும் பற்றிய பல மாநாடுகளின் நினைவினால் ஆங்கிலிக்கன் சபையினதும் சுயாதீன சபையினரும் நெருங்கின உறவுக்குக் கொண்டு வரப்பட்டார்கள். ஏன் ஆங்கிலிக்கன் சபையும் தென் இந்திய ஐக்கிய சபையும் ஒருமைப்பட கூடாதென்ற வினா ஆங்காங்கே இந்திய கிறிஸ்தவ தலைவர்களால் எழுப்பப்பட்டன.

இந்தியாவின் பல பாகங்களில் இந்திய கிறிஸ்தவ தலைவர்கள் நற்செய்திபனியில் ஈடுபட்டபொழுது இத்தகைய உணர்ச்சி தோன்றினது. பெஸ்வாடாவிலுள்ள ஒரு உயிர் மீட்சி கூட்டத்தில் எஸ். பி. ஜி. , சி. எம். எஸ். தென் இந்திய ஐக்கிய சபை, லுத்தரன் சபை ஆகிய சபைகளிலுள்ள பிரதிநிதிகள் பங்கு பெற்றனர். அக்கூட்டத்திலிருந்து பாப்லிபும் எடியும் தரங்கம்பாடிக்கு வந்தனர். அங்கே 1919 மே மாதத்தில்

போதகர் மாநாடொன்று நடத்த பாப்லி ஒழுங்கு செய்திருந்தார். திருச்சபை ஒருமைப்பாட்டைப் பற்றி ஆராய பேராயர் அசரியா ஒரு இந்திய போதகர் மாநாட்டை அப்பொழுது கூட்ட பாப்லியிடம் கலந்தாலோசித்த பொழுது இரண்டு மாநாடுகளையும் ஒன்றாய் தரங்கப்பாடியில் வைக்க பாப்லி உடன்பட்டார். இந்த மாநாடு ஒரு இந்திய மாநாடாக இந்தியரின் யோசனையின்படியே நடந்தது. இதற்குத் தூண்டுகோலாயிருந்து நடத்தியவரும் முதல் இந்திய ஆங்கிலிக்கன் பேராயராகிய அசரியாவாகும். அது இந்தியரது எண்ணங்களுக்கு இடமளிக்கும் இந்திய மாநாடாயிருக்கவேண்டுமென்பதே பேராயர் அசரியாவின் நோக்கம்.

தென் இந்திய ஐக்கிய சபையிலுள்ள வி. சந்தியாகோ, மேஷாக் பீட்டர் ஆகிய இரு இந்திய தலைவர்களும் இம்மாநாட்டில் முக்கிய பங்கெடுத்தனர். சந்தியாகோ தென் இந்திய ஐக்கிய சபைபில் முதல் மாடரேட்டராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர். இவர் தான் பேராயர் அசரியாவை இம்மாநாட்டின் கன்வீனராக இருக்கக் கேட்டுக்கொண்டார். மேஷாக் பீட்டர் தென் இந்திய ஐக்கிய சபையைச் சேர்ந்த ஆர்காட் மிஷனில் ஒரு தலைசிறந்த இந்திய தலைவராயிருந்தவர். அவரது தந்தை சீர் திருத்த சபையில் ஒரு போதகராயிருந்தார். அவருடைய மாமன் ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்தவர். அவரது பாட்டனார் லுத்தரன் சபையிலுள்ளவராயிருந்தார். அவருடைய அன்னையும் மனைவியும் காங்கிரிகேஷனல் சபையைச் சேர்ந்தவர்கள். "**நான் அவர்கள் அனைவரையம் நேசிக்கிறேன். ஏன் நாம் ஒன்று சேர்ந்து வாழக் கூடாது**" என்று கேட்பாராம். எனவே, மேஷாக் பீட்டர் தென் இந்தியாவில் ஒருமைப்பாட்டு இயக்கத்தில் அதிக ஆர்வமுடையவராயிருந்தது ஆச்சரியப்படத்தக்கதல்ல.

தரங்கம்பாடியில் முதல் கூட்டம் இந்திய போதகர் மாநாடாக ஏப்ரில் 29, 30 நாட்களில் நடந்தன. ஆங்கிலிக்கன், தென் இந்திய ஐக்கிய சபை, வெஸ்லியன் மெதடிஸ்து, சபை, லுத்தரன் சபை ஆகிய சபைகளின் 56 போதகர்கள் இக்கூட்டத்தில் பங்கு பெற்றனர்.

அதைத் தொடந்த இரண்டாம் கூட்டம் திருச்சபை ஒருமைப்பாட்டைப் பற்றிய மாநாடு. இது மே 1, 2 நாட்களில் நடைபெற்றது. இந்த இந்திய மாநாட்டில் இருவர் மட்டும் மேனாட்டினர். அவர்கள் எடி, பாப்லி ஆகியோர். ஒவ்வொரு சபைப்பிரிவின் தலைவர்களுக்கும் அசரியா அனுப்பின மூன்று வினாக்களுக்குரிய விடைகள் மாநாட்டில் ஆய்வு செய்யப்பட்டன. அவையாவன:

1. உங்கள் சபையின் அமைப்பு, போதனை, செயல்கள் ஆகியவற்றில் சிறப்பான அம்சங்கள் எவை ?

2. ஐக்கிய சபை ஏற்பட்டால் எந்த பண்புகள் நீங்கள் விடமுடியாது. எவை ஐக்கிய சபையில் இருத்தல் வேண்டும்

3. பிற சபைகளோடு ஒருமைப்படுவதைப் பற்றி உங்கள் சபையின் எண்ணம் யாது ?

லுத்தரன் சபையினர் தங்கள் கோட்பாட்டில் ஆதாரமாய்க் கொள்ளாத ஒருமைப்பாடு தவறு என்றனர். ஆய்வு கூட்டங்களில் யோ. 17: 21 நடுமையப் பொருளாயிருந்தது. பேராயர் அசரியா பேராயர் அபிஷேகத்தின் முக்கியத்தைப் பற்றி பேசினபோது தென் இந்திய ஐக்கிய சபைப் பிரதிநிதிகள் எதிர்த்து பவுல் அப்போஸ்தலறும் தீமோத்தேயுவும் டீக்கன்மாரால் கைகள் வைத்து ஏற்படுத்தப்பட்டனர். எனவே பேராயர் அபிஷேகம் தேவையில்லை என்றனர். ஆனால் தென் இந்திய ஐக்கிய சபையைச் சேர்ந்த எடி இந்தியாவில் இந்திய சபைக்கு பேராயர் ஆளுகை முறை, இன்றியமையாததென்பதைக் காட்டினார்.

எடி மாநாட்டிற்கு வந்த அனைவரையும் சேர்த்து ஒரு புகைப்படம் எடுத்தபோது தரங்கம்பாடியில் லுத்தரன் மிஷனரியாயிருந்த பால் சான்ட் கிரின் ஐயரிடம் **முதல் தடவையாக பேராயர் ஆளுகை முறைச் சபையும், பேராயர் ஆளுகை இல்லாத சபையும் (புகைப்படத்தில்) ஒன்று சேர்ந்துவிட்டது** என்றார். இது புகைப்படத்தில் மட்டுமல்ல உண்மையிலேயே நிறைவேறிவிட்டது. எடி, பாப்லி, சந்தியாகோ,

மேஷாக் பீட்டர் ஆகியோரின் உதவியுடன் பேராயர் அசரியா மாநாட்டில் ஒரு தீர்மானத்தை வைத்தார். அது மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டது. அது '**தரங்கம்பாடி கொள்கை விளக்க வெளியீடு**' **(Tranquebar Manifesto)** என்று அழைக்கப்படுகிறது. இந்த விளக்க வெளியீட்டில் ஆங்கிலிக்கன் சபையும் தென் இந்திய ஐக்கிய சபையும் ஒருமைப்பாட்டு ஒப்பந்த அறிக்கையைச் செய்துள்ளது. அதில் முக்கிய அம்சங்கள்.

1. ஒருமைப்பாடு கடவுளின் சித்தம்

2. சென்ற கால பிளவுகளுக்காக துக்கித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் சபையாகிய சரீரத்தின் ஒருமைப்பாட்டை நாடுகிறோம். இந்தியாவை கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தும் மகத்தான கடமையை உணரும் போது துக்ககரமான பிரிவுகளினால் பலவீனப்பட்டிருக்கும் நிலையில் பிளவுகளை இனி வளரச் செய்ய விரும்பவில்லை.

3. திருமறையின் அடிப்படையில் ஒவ்வொருவரும் நேரடியாய்க் கடவுளிடம் பிரவேசம் அடையமுடியுமென்றும், ஒவ்வொருவரும் முழுச்சபைக்காக தன் வரத்தைப் பிரயோகிக்க முடியுமென்றும் உணரும் காங்கிரிகேஷன் அம்சம் ஐக்கிய சபையில் இருத்தல் வேண்டும்.

4. ஒருமைப்பட்ட ஒழுங்கான அமைப்பில் பொது மன்றம், பரவை, ஆலோசனை மன்றம் ஆகியவற்றின் மூலம் சபை இணைக்கப்படும் பிரஸ்பிட்டீரியன் அம்சம் ஐக்கிய சபையில் இருத்தல் வேண்டும். பேராயர் ஆளுகை அம்சம் ஐக்கிய சபையில் இருத்தல் வேண்டும். ஒருமைபாட்டை நாடுவதில் ஆங்கிலிக்கன் சபை வரலாற்றுத் தொடர்புடைய பேராயர் ஆட்சி முறையை **(Historic Episcopate)** வற்புறுத்துகிறது. அதை ஒப்புக் கொள்ளுவதில் அதைப் பற்றிய ஏதாவது ஒரு விளக்கத்தைத் தான் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்கவில்லை.

தென் இந்திய ஐக்கிய சபை பேராயர் ஆட்சி முறையை அப்போஸ்தல காலத்திலிருந்த முறைப்படி சட்டம் சார்ந்த முறையிருப்பது அவசியம் என்று நம்புகிறது. ஐக்கிய சபையில் ஆவிக்குரிய சமத்வம் இருந்து எல்லா விசுவாசிகளின் ஆசாரியத்வம் பாதுகாக்கப்படுவது ஒரு நியதி என்றும் ஒருமைப்பாட்டு பேச்சு வார்த்தைகளில் எப்பொழுதும் இந்த ஆவிக்குரிய சமத்வம் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் தென் இந்திய ஐக்கிய சபை கேட்கிறது.

வரலாறு சார்ந்த பேராயர் ஆட்சி முறையையும், இரு சபைகளின் எல்லா உறுப்பினர்களின் ஆவிக்குரிய சமத்வத்தையும் அடிப்படையாய்க் கொண்டு பின் வரும் நான்கு ஆதாரங்களில் ஆங்கிலிக்கன் சபையினரும் தென் இந்திய ஐக்கிய சபையினருமாகிய நாங்கள் ஒருமைப்பாட்டை அறிக்கையிடுகிறோம்.

1. மீட்புக்குத் தேவையான அனைத்தும் பழைய புதிய ஏற்பாடுகள் அடங்கிய பரிசுத்த வேதாகமங்களில் அடங்கியுள்ளது.

2. அப்போஸ்தல, நிசேய விசுவாசப் பிரமாணங்கள்.

3. கிறிஸ்து தாமே ஏற்படுத்திய திருமுழுக்கு, கர்த்தருடைய இராவிருந்து ஆகிய இரு சாக்கிரமந்துகள்.

4. அந்தந்த இடத்திற்கேற்றபடி ஏற்றுக் கொள்ளப்படும் வரலாறு சார்ந்த பேராயர் ஆட்சி.

பேராயர் ஆட்சி முறையின் ஆரம்பத்தைப் பற்றியோ, ஏதாவதுகோட்பாட்டைப்பற்றியோ ஏதோ ஒரு விளக்கத்தைத் தான் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதல்ல. எங்கள் சபைகளைப் பொறுப்பாக்காமல் நாங்களாக ஒப்புக்கொள்கிறோம். தென் இந்திய ஐக்கிய சபை ஒருமைப்பாட்டை விரும்பினால் பேராயர்களாக அபிஷேகம் பண்ணப்பட வேண்டியவர்களைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். இவர்களை முதன் முறையாக பேராயர்களாக அபிஷேகம்

பண்ணப்படுபவர்கள் மேல் மூன்று அல்லது அதற்குக் கூடுதலான ஆங்கிலிக்கன் பேராயர்களும், தென் இந்திய ஐக்கிய சபையிலிருந்த அதற்குச் சமமான போதகர்களும் கைகளை வைத்தல் வேண்டும். இரு சபைகளிலுமுள்ள போதகர்கள் இரு சபைகளிலும் நற்கருணை பரிமாறத்தக்க சமத்வம் பெற ஒரு சிறப்பு ஆராதனையில் அதற்கென்று ஏற்படுத்தப்படவேண்டும்.

இரு சபைகளிலுமுள்ள போதகர்கள் எவரேனும் பேராயர்களால் இவ்வாறு ஏற்படுத்தப்பட்டு எல்லாச் சபைகளிலும் நற்கருணை பரிமாற அவசியமில்லை என்று எண்ணினால் அவர்களது விருப்பத்திற்கு விடப்படுவார்கள். மேற்கூறப்பட்ட இந்த கொள்கை விளக்க அடிப்படையில் ஒப்பந்தம் பண்ணின தரங்கம்பாடி மாநாட்டு உறுப் பினர்கள் 33 பேர். அவர்களில் 7 பேர் ஆங்கிலிக்கள் சபையினரும் 26 பேர் தென் இந்திய ஐக்கிய சபையினருமாவர். தரங்கம்பாடி கொள்கை விளக்க வெளியீடு லாம்பெத் நாற்கட்டத்தை வெளிப்படுத்துகிறதென்பதைக் காணலாம்.

தரங்கம்பாடி மாநாட்டின் தீர்மானம் சபைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இனி செய்ய வேண்டியவற்றிற்கு முக்கியமான சொல் எடுக்கப்பட்டாயிற்று. இனி சபைகள் தீர்மானித்து ஒருமைப்பாட்டைச் செயல் முறைக்குக் கொண்டு வரவேண்டும். அமெரிக்காவும், இங்கிலாந்தும் எனைய நாடுகளும் இத்தகைய ஒருமைப்பாட்டிற்காக ஜெபித்து, ஆய்வு செய்து, விரும்பி நாடுகின்றனர். செயல்பட வேண்டியது இந்தியா. தரங்கம்பாடி தீர்மானம் 1919–ஆம் ஆண்டை இந்திய திருச்சபை ஒருமைப்பாட்டு வரலாற்றில் சிறப்புடையதாக்கிற்று. எனினும், இன்னும் போராட்டங்கள் பல உள்ளன.

மதுரை சபாலோசனைச் சங்கம் 1919 ஜூலை மாதத்தில் டாக்டர் ஜே. ஜே. பானிங்காவின் செல்வாக்கினால் இத்தகைய ஒருமைப்பாட்டை வரவேற்றது. ஆலோசனை மன்றத்தில் ஒருவர் மட்டுமே எதிராக வாக்கிட்டார். தென் இந்திய ஐக்கிய சபையில்

பல எதிர்ப்புகள் இருந்தன. தென் இந்திய ஐக்கிய சபையின் பொது மன்றத்தில் மதுரை அமெரிக்கன் சபையே ஒருமைப்பாட்டில் மிகுந்த ஆர்வம் காட்டினது. லண்டன் மிஷனரி சங்கச் சபையிலிருந்து எதிர்ப்பு வந்தது. நற்கருணை விஷயத்தில் முழு சமத்வம் வருவதைப் பற்றிய ஐயப்பாட்டைச் சிலர் தெரிவித்தனர். எனினும், பொது மன்றத்தில் ஒருமைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர், ஒவ்வொரு சபாலோசனைச் சங்கங்களிலும் ஒருமைப்பாட்டு விஷயம் ஆலோசனைக்கு எடுக்கப்பட்டது.

எட்டு சபாலோசனை மன்றங்களில் வட தமிழ் சபாலோசனை மன்றம் மட்டும் பேராயர் ஆட்சி முறையை ஒப்புக்கொள்ள மறுத்தது. மூன்றில் இரண்டு வீசம் ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டபடியால் தென் இந்திய ஐக்கிய சபை ஆங்கிலிக்கன் சபையோடு பேச்சு வார்த்தைகள் நடத்த ஆயத்தமாயிற்று. ஆங்கிலிக்கன் சபையைப் பொறுத்த அளவில் பேராயர்கள் செயலாற்ற வேண்டியதாயிருந்தது. மத்திய திருவிதாங்கூர் (மத்திப கேரளம்) பேராயர் சி, எய்ச் ஜில் அங்குள்ள மார்த்தோமா சபையோடுள்ள தொடர்பைப் பற்றியே அதிகமாய் சிந்தித்தபடியால் ஒருமைப்பாட்டு பேச்சு வார்த்தைகளில் அதிகமாகக் கலந்து கொள்ளவில்லை.

பேராயர் அசரியா தரங்கம்பாடி தீர்மானத்தின் சார்பில் திறமையாய் வாதாடினார். திருநெல்வேலி பேராயர் வால்லர் என்பவர் தென் இந்திய ஐக்கிய சபையிலுள்ள போதகர்கள் பேராயர்களாக பிரதிஷ்டிக்கப்படும் போது அவர்கள் ஆங்கிலிக்கன் சபையில் வராமல் அநேக சபைகளின் கூட்டுறவில் சேருகிறார்களென்று கூறினார். உயிட்ஹெட் பேராயரும் அதை வற்புறுத்தி ஐக்கிய சபை இந்திய சபை என்பதை வலியுறுத்தினார். முடிவில் ஆங்கிலிக்கன் பேராயர் பேரவையும் ஒப்பந்த பேச்சைத் தொடர ஒப்புதல் தெரிவித்தது. எனவே, **முதல் கூட்டுக்குழு** 1920 மார்ச் 18, 19–இல் பங்களூரில் நடைபெற்றது. 5 ஆங்கிலிக்கன் பிரதிநிதிகளும் 10 தென் இந்திய ஐக்கிய சபைப் பிரதிநிதிகளும் கலந்தாலோசித்தனர். பரிசுத்த வேதாகமங்களைக்

குறித்தும் விசுவாசப் பிரமாணங்களைக் குறித்தும் முக்கிமான ஒப்பந்தம் இக்கூட்டத்தில் உண்டானது. பழைய புதிய ஏற்பாடுகள் அடங்கிய பரிசுத்த வேதாகமங்கள் மீட்புக்குத் தேவையான யாவற்றையும் கொண்டுள்ளன என்றும், அது விசுவாசத்திற்கு அடிப்படையான சட்டமும் அளவுகோலுமானது என்றும் முடிவு செய்யப்பட்டது. அப்போஸ்தல விசுவாசபிரமாணமும் நிசேய விசுவாசப்பிரமாணமும் கூட்டுறவுக்கு ஆதாரமாயிருப்பதற்குப் போதுமான விசுவாச அறிக்கையைக் கொண்டுள்ளதென்றும் அங்கீகரிக்கப்பட்டது.

**2–ஆம் கூட்டுக்குழு** 1920 டிசம்பர் 14–16 வரை பெங்களூரில் நடந்தது. மீண்டும் குருப்பட்டம் பெறுவதைப் பற்றிய விவாதம் இதில் முக்கிய இடம் பெற்றது. தென் இந்திய ஐக்கிய சபை மீண்டும் குருப்பட்டம் கொடுப்பதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தது. 1920–இல் கூடின லாம்பைத் மாநாடு ஆங்கிலேய சபையைச் சேராதவர்கள் மீண்டும் குருப்பட்டம் பெறுவதை வலியுறுத்தினதுதான் இவ்விவாதத்திற்குக் காரணம். பானிங்கா முதலியோர் தென் இந்திய ஐக்கிய சபையின் குருப்பட்டம் குறைந்ததல்ல என்றும் எல்லாக் குருக்களும் சமநிலையுடையவர்கள் என்பதையும் வற்புறுத்தினார்கள். ஆனால் பாப்லி ஒருமைப்பாட்டுக்காக மீண்டும் குருப்பட்டம் பெறுவதை ஏற்றுக்கொள்ளும் மனநிலையுடைவராயிருந்தார். **எனது தெய்வீக குருப்பட்டதைப் பற்றி நான் நிச்சயமுடையவனாயிருந்தால் மனித பிரகாரமான எத்தனை குருப்பட்டங்களையும் நான் பெற தயாராயிருக்கிறேன்** என்று பாப்லி கூறினார்.

லண்டன் மிஷன் சங்கத்தைச் சேர்ந்த ஜி. இ. பிலிப்ஸ் என்பவரும் பானிங்காவின் எண்ணத்தைச் சேர்ந்தவராய் லாம்பத் தென் இந்தியாவில் ஒருமைப்பாட்டிற்குச் சிரமத்தை ஏற்படுத்திவிட்டது என்றார். இறுதியில், இரண்டாம் கூட்டுக்குழு ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தது. ஒருமைப்படும் சபைகளின் எல்லா போதகர்களும் ஒருமைப்பாட்டிற்குப் பின் ஐக்கிய சடையின் போதகர்களேயாவர். ஒவ்வொரு போதகரும் ஐக்கிய சபையின் பேராயர்களால் செயலுரிமையளிப்பு பெறவேண்டும்.

இதன் மூலம் ஒருமைப்பாட்டிற்கு முன் ஒரு போதகர் சேராத சபையிலும் திருப்பணியாற்ற உரிமை பெறுகிறார்.

**1921–இல் மூன்றாம் கூட்டுக்குழு** சென்னையில் ஜுன் மாதத்தில் கூடியது. சபை ஆட்சியைப் பற்றியவை ஆலோசிக்கப்பட்டன. சபை அமைப்புக்கு ஆங்கிலிக்கன் சபையிலிருந்தும் தென் இந்திய ஐக்கிய சபையிலிருந்தும் அம்சங்கள் சேர்க்கப்பட்டன. பாஸ்ற்றரேட்டு குழுக்களும், திருமண்டில ஆலோசனை மன்றங்களும், பேரவையுமுள்ள ஒரு அமைப்பு திட்டமிடப்பட்டது. திருமண்டில ஆலோசனை மன்றங்களின் பொறுப்புக்கள் தென் இந்திய ஐக்கிய சபையின் சபாலோசனை மன்றங்களின் பொறுப்புக்களுக்கு ஒத்தவை. பேராயருக்கு சட்டப்படி அதிகாரங்கள் இருப்பினும் பேரவை முடிவான தீர்ப்பைக் கொடுக்க அபயமிடும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. 1922 ஜுலை மாதத்தில் தென் இந்திய ஐக்கிய சபை பேராயர் ஆளுகை முறைமை ஏற்றுக்கொள்வதற்கு மூன்று நியதிகளைச் சமர்ப்பித்தது. அவையாவன

1. சமயத்தில் உண்மையான தன்மை ஆவிக்குரிய உலகில்தானிருக்கிறது.
2. பேராயர் ஆளுகை முறையில் கடவுளின் கிருபை இயந்திரத்தில் பிறப்பிக்கப்படுவது போல் வருவதில்லை.
3. பேராயர் ஆளுகை முறையில் அப்போஸ்தல தொடர் வரிசை முறை இருக்கிறதென்னும் எண்ணத்திற்குத் தென் இந்திய ஐக்கிய சபை ஒப்புதல் அளிக்கவில்லை.

அதன்பின்னர் **கூட்டுக் குழுவின் நான்காம் கூட்டம்** பசுமலையில் 1923 ஏப்ரில் மாதம் நடைபெற்றது. திருப்பணியாளர்களைப்பற்றிய பிரச்சினையே இதில் முக்கியமாய் ஆலோசிக்கப்பட்டது. செயலுரிமை அளிப்பு மறுபட்டமளிப்பாக அல்ல இரு சபைகளிலுள்ள போதகர்களும் செயலுரிமை அளிப்புப் பெறுவதாக இருத்தல் வேண்டும் என்று

தீர்மானம் செய்யப்பட்டது. செயலுரிமை அளிப்பு ஆராதனையில் கைகளை வைத்தலும் தூய ஆவியானவருக்காக வேண்டுதல் செய்தலும் இடம் பெறவேண்டும்.

ஆங்கிலிக்கன் பேராயர்களுக்கும் குருக்களுக்கும் தென் இந்திய ஐக்கிய சபையின் சில குருக்களால் செயலுரிமை அளிப்பு கொடுக்கப்படும். தென் இந்திய ஐக்கிய சபையின் போதகர்களுக்கு ஆங்கிலிக்கன் பேராயர் ஒருவராலும் சில போதகர்களாலும் செயலுரிமை அளிப்பு அளிக்கப்படும். எல்லா போதகர்களும் சேர்ந்து சொல்லவேண்டிய ஒரு அறிக்கையும் தொகுக்கப்பட்டது. "**நாங்கள் பெற்ற குருத்துவப் பணியை எங்களில் ஒருவரும் அசட்டை பண்ணத் துணியோம். இப்பொழுது நாங்கள் சொல்லுகிறதோ செய்கிறதோ நாங்கள் முன்னாள் பெற்ற குருத்துவ பட்டத்தைக் குறித்து சந்தேகத்தை உண்டாக்குகிறதாக அர்த்தப்படுத்தப்படலாகாது. நாங்கள் இங்கே வெளிப்படையாகவும், அடையாள ரூபமாகவும் தமது சரீரத்திலுள்ள பிளவுகள் நீங்கி குணமடைய ஐக்கிய சபையில் பரந்த சேவைக்குரிய ஒரு புது அழைப்பாகவும் முழுமையான அதிகாரமாகவும் எண்ணுகிறோம்**" என்பது அந்த அறிக்கை. ஆயினும் செயலுரிமை அளிப்பு திருப்திகரமானதல்ல என்பதைச் சிலர் வெளியிட்டனர்.

இரு சபைகளும் அதற்கு வித்தியாசமான கருத்தைக் கொடுக்கக்கூடும். ஆங்கிலிக்கன் சபையிலுள்ள டர்னர் என்பவர் இவ்வெண்ணத்தை வெளியிட்டார். மேலும் பேராயர் அபிஷேகத்திற்குக் குருக்களும் கைகள் வைக்கவேண்டுமென்பது பேராயரைப் பற்றியுள்ள கருத்துக்கே முரண்பாடுடையது என்று அவர் குறிப்பிட்டார்.

**ஐந்தாம் கூட்டுக்குழு** 1925 பெப்ருவரி மாதம் சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வெஸ்லியன் சபையின் பிரதிநிதிகள் அழைப்புக்கிணங்கி வந்தனர். தென் இந்திய ஐக்கிய சபையின் பொது மன்றம் அவர்களுக்கும் லுத்தரன் சபைக்கும் அழைப்புகள் கொடுத்தது. டேனிஷ் லுத்தரன் சபை ஒருமைப்பாட்டு விஷயத்தில் ஒத்துழைக்க

ஆர்வம் காட்டிய போதிலும் கட்டுக்குழு கூட்டங்களில் பங்கு பெற முடியாமற் போயிற்று. ஆனால் வெஸ்லியன் சபை தென் இந்திய ஐக்கிய சபை மன்றம் 1923 ஆகஸ்ற் மாதம் விடுத்த அழைப்புக்கிணங்கி ஒப்பந்தப் பேச்சுக்கல்ல, கலந்து பேச உடன்பட்டது.

ஐந்தாம் கூட்டுக்குழு கூட்டம் வெஸ்லியன் சபைப் பிரதிநிதிகளுக்கு அறிமுகமடையும் ஒரு கூட்டமாகவே இருந்தது. ஒருமைப்பாட்டு பேச்சு வார்த்தைக்கு ஒரு தென் இந்திய வாசனை உண்டானது 1926 பெப்ருவரி மாதம் திருச்சிராப் பள்ளியில் நடந்த **ஆறாவது கூட்டுக் குழு**விலாகும்.

ஆங்கிலிக்கன் சபை ஐம்பது ஆண்டு இடைக்காலம் இருக்க வேண்டுமென்றும் அதற்குப்பின் எல்லா போதகர்களும் பேராயரால் குருப்பட்டம் பெற்றவர்களாயிருக்கவேண்டு மென்றும் கூறினது. தென் இந்திய ஐக்கிய சபை பேராயரால் குருப்பட்டம் பெறாத போதகர்களுக்கு ஐக்கிய சபையில் எப்பொழுதும் இடம் இருக்கவேண்டுமென்றும், ஆவிக்குரிய சமத்வம் முக்கியமானதென்றும் எண்ணினது.

1927–இல் இந்தியாவிலுள்ள ஆங்கிலிக்கன் சபை ஒரு முக்கியமான முடிவுக்கு வந்தது. இங்கிலாந்து அரசாட்சியிலிருந்து பிரிந்த ஒரு ஆங்கிலிக்கன் சமூகத்தோடு தான் ஒருமைப்பட முடியுமென்று தென் இந்திய ஐக்கிய சபையின் தலைவர்கள் தெரிவித்தனர். எனவே, 1927 டிசம்பர் மாதத்தில் இங்கிலாந்து அரசாங்க தொடர்பிலிருந்து பிரிந்த சபையாக இந்தியாவிலுள்ள ஆங்கிலிக்கன் சபை இந்தியா, பர்மா, இலங்கை சபை (C. I. B. C.) என்று அழைக்கப்படலாயிற்று. எஸ். பி. ஜி. என்றும் சி. எம். எஸ். என்றும் அழைக்கப்பட்ட திருநெல்வேலி சபைகளும் சி. ஐ. பி. சி. சபைகளாயின. இது தென் இந்தியாவிலுள்ள ஒருமைப்பாட்டுக்கு மிக முக்கியமானதான ஒன்று. ஒருமைப்பாட்டுக்கு இருந்த தடைகளில் ஒரு முக்கியமான தடை இதன் மூலம் நீக்கப்பட்டது.

**ஏழாம் கூட்டுக்குழு** கூட்டம் பெங்களூரில் 1928 ஜூன்

மாதத்தில் நடந்தது. இக்கூட்டத்தில் இடைக்காலமாகக் குறிப்பிடப்பட்ட ஐம்பது ஆண்டுகள் முப்பது ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. ஒருமைப்பாட்டிற்குள் அமைந்த எல்லா சபைகளும் ஐக்கிய சபையின் எந்த போதகர்களிடமிருந்தும் நற்கருணை பெற்றுக் கொள்ளவேண்டும். அக்காலம் முப்பது ஆண்டுகளுக்குப் பின் தான் வரலாம். அதுவரையிலும் ஆங்களிக்கன் சபையிலுள்ளவர்கள், அதற்கு மாறாக சம்மதித்தாலன்றி, பேராயரால் குருப்பட்டம் பெற்றவர்களாலே நற்கருணை பெறுவதற்குத் தடை இராது. அதுபோல, பேராயரால் குருப்பட்டம் பெற்ற போதகரின் கீழிருந்த ஒரு சபை பேராயரால் குருப்பட்டம் பெறாத ஒருவரின் கீழ், அவர்கள் அதற்குமாறாக சம்மதித்தாலொழிய, உட்படுத்தப்படமாட்டாது. தென் இந்திய ஐக்கிய சபையின் பிரதிநிதிகள் இந்த முப்பது ஆண்டு இடைக்காலத்திற்கு உடன்பட்டனர். எனினும், சில சபாலோசனைச் சங்கங்கள் அதைக் குறித்து கேள்விகள் எழுப்பினர்.

முப்பது ஆண்டு இடைக்காலம் எல்லா பிரச்சினைகளையும் தீர்த்துவிட்டதாகக் கூட்டுக்குழு அங்கத்தினர் உணரமுடியவில்லை. ஆனால், சென்னையில் 1929 பெப்ருவரி, மார்ச் மாதங்களில் நடந்த **எட்டாம் கூட்டுக்குழு** கூட்டத்தில் மெதடிஸ்து சபை அங்கத்தினர் கொண்டுவந்த ஒரு தீர்மானம் ஒரு போக்கை உண்டாக்கியது. அத்தீர்மானம் ‘வாக்குறுதி’ **(Pledge)** என்று அழைக்கப்படுகிறது. இந்த வாக்குறுதி இக்கூட்டுக்குழுவால் பின்வரும் வடிவத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஐக்கிய சபையில், பொதுவாகவோ அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலோ, சம்பந்தப்பட்ட எவருடைய மனச்சான்றுக்குரிய உள்ளப்பற்றுறுதிகளைப் பழிப்பதற்காகவோ, அல்லது, சபைக்குள் முழு ஒருமைப்பாட்டிற்குரிய வளர்ச்சியைத் தடுப்பதாகவோ, அல்லது, பிற சபைகளோடு இனி ஒருமைப்படுவதற்கேற்ற முன்னேற்றத்திற்கு ஆபத்து விளைவிக்கிறதாகவோ சபைகளைப் பற்றியோ, போதகர்களைப் பற்றியோ ஒரு ஒழுங்குகளும் வேண்டுமென்றே செய்யப்படமாட்டாதென்று வாக்குறுதி செய்து ஒருவரையொருவர்

முழுமையாக நம்புகின்றனர்.

இதன் பின் 1929–இலேயே ஒருமைப்பாட்டைப் பற்றிய ஒரு முன் கொணரப்பட்ட திட்டம் **(Proposed Scheme of union)** அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது ஒரு **தொடர்ச்சிக் குழுவால்** தயாரிக்கப்பட்டது. இதில் முக்கியமாக முயற்சித்தவர்கள் ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த எப், ஜே. வெஸ்டர்ன் என்பவரும் தென் இந்திய ஐக்கிய சபையைச் சேர்ந்த பானிங்கா என்பவருமாகும். இதில் சபையின் விசுவாசம் ஐக்கிய சபையின் திருப்பணி, சாக்கிரமந்துகள், தொழுகை, ஐக்கிய சபைக்கு இதர சபைகளோடுள்ள தொடர்புகள், ஐக்கிய சபையின் ஆட்சி முறை ஆகியவற்றைக் குறித்த ஒழுங்குகள் வரையப்பட்டுள்ளன.

1929 ஒருமைப்பாட்டு திட்டமானது 1947 வரையுள்ள காலத்தில் ஆறு பதிப்புகளில் வெளி வந்தன. (1930, 1932, 1933, 1934, 1936, 1942) பல போராட்டங்களினூாடே மாறுதல்கள் செய்யப்பட்டு அது திருத்தி அமைக்கப்பட்டதென்பதை இது காட்டுகிறது. 1934–இல் பிரசுரிக்கப்பட்ட ஒருமைப்பாட்டு திட்டம் மெதடிஸ்து தத்துவங்களுக்கு எதிரானதல்லவென்று 1934–இல் கூடின மெதடிஸ்து மாநாடு வெளியிட்டது.

தென் இந்திய ஐக்கிய சபையும் ஆங்கிலிக்கன் சபையும் திட்டத்தை விட்டு பலவாறு விவாதிக்கும்போது மெதடிஸ்து சபை இவ்வாறு வெளியிட்டது மிக முக்கியமானதொரு தீர்மானமாகும். மெதடிஸ்து சபையின் இந்திய தலைவர்களில் பவுல் ரங்கராமானுஜம் ஒருமைப்பாட்டிற்காக கூட்டுக்குழுவில் வாதாடின சிறந்தவர்களில் ஒருவராகும். தென் இந்தியாவில் மெதடிஸ்து மிஷனரியாயிருந்த எம். டெய்லர் 1937–ல் மெதடிஸ்துசபையின் எண்ணத்தை வெளியிடும் பொழுது ஒருமைப்பாட்டைப் பற்றிய முக்கிய தத்துவங்கள் எங்களுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கவை. எங்களைப் பொறுத்த அளவில் விவாதத்தின் நாள் முடிந்தது என்றார்.

தென் இந்திய ஐக்கிய சபை இந்திய தலைவர்களுக்கு ஒருமைப்பாட்டு பேச்சு வார்த்தைகளில் அதிக வாய்ப்பு அளித்தது. கூட்டுறவு ஒருமைப்பாட்டையுடைய தென் இந்திய ஐக்கிய சபை உறுப்பு இசைவு ஒருமைப்பாட்டுக்குச் செய்த சிறந்த தொண்டு இதுவாகும். தென் இந்திய ஐக்கிய சபையின் சார்ப்பில் ஒருமைப்பாட்டு இயக்கத்தில் சிறப்புப் பங்கு பெற்ற இந்திய தொண்டர்கள். கே. ற்றி பவுல், வி. சந்தியாகோ, மேஷாக் பீட்டர், எய்ச். சுமித்திரா, சாமுவேல், சி. ஜே. லூாக்காஸ் கே. ஏ. ஜேக்கம், எம். ஜே. சர்குணம் ஆகியோராவர். கூட்டுக்குழு கூட்டங்களில் பல்வேறு எண்ணங்களும் எதிர்ப்புகளும் இருந்தபோதும் எல்லா அங்கத்தினர்களுக்குள்ளும் கூட்டுறவு எண்ணம் இருந்தது.

**1929 கூட்டுக்குழு** கூட்டத்தில் ஒருவர், அப்போஸ்தல வரிசையிலுள்ள பேராயர்கள் மூலமாகவே போதக அதிகாரம் சரியானபடி கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார். ஏற்பட்ட அமைதியை உடைத்தவண்ணமாக மெதடிஸ்து சபையைச் சேர்ந்த பவுல் ரங்கராமானுஜம் எழுந்து, போதகாபிஷேகத்தில் இரு காரியங்கள் வழங்கப்படுகின்றன. அவை, கிருபையும் அதிகாரமுமாகும். ஆங்கிலிக்கன் சபையார் அதிகாரத்தை வழங்குகிறவர்களாயிருக்க விரும்பினால் சுயாதீன சபையார் கிருபையை வழங்குகிறவர்களாயிருப்பதில் திருப்தியடைந்திருக்கலாம் என்றார்.

**ஒன்பதாம் கூட்டுக்குழு கூட்டம்** 1930 நவம்பர் மாதப் சென்னையில் நடைபெற்றது. சபைகளுக்கிடையே இருக்க வேண்டிய கூட்டுறவைப் பற்றி ஆராயப்பட்டது. முறையை விட ஆவிதான் முக்கியம் என்பது பேசப்பட்டது. பேராயர் ஆளுகை முறையில் மட்டுமல்ல பேராயர் ஆளுகை இல்லாத முறையிலும் கடவுள் செயலாற்றுகிறார் என்னும் எண்ணத்தில்தான் சபைகளுக்கிடையே கூட்டுறவு உண்டாக முடிய மென்பதை ஆங்கிலிக்கன் சபைத் தலைவர்கள் சிலரும் உணரலானார்கள். ஆனால், ஆங்கிலிக்கன் பேராயர் அவை விசேஷ

சந்தர்ப்பங்களில் மட்டும் பேராயர் ஆட்சி முறையில் இராத சபைகளோடு உறவு கொள்ளலாமென்று எண்ணம் கொண்டிருந்தது.

1932, பெப்ருவரி 15 முதல் 18 வரை சென்னையிர் வெஸ்லியன் பேரவை மண்டபத்தில் நடந்த கூட்டங்களில் இரண்டாம் நாளில் சென்னை பேராயர் நற்கருணை ஆராதனை நடத்த, தென் இந்திய ஐக்கிய சபையிலிருந்தும் மெதடிஸ்து சபையிலிருந்தும், போதகர்கள் உதவி புரிந்தனர். மூன்றாம் நாள் மெதடிஸ்து சபை போதகர்களால் நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டது. அசரியா, வெஸ்டர்ன் ஆகிய பேராயர்களும் பல ஆங்கிலிக்கன் சபையினரும் அதில் சேர்ந்து நற்கருணை எடுத்தனர். அடுத்த நாள் காலையில் தென் இந்திய ஐக்கிய சபையிலுள்ள போதகர்கள் நற்கருணை ஆராதனை நடத்தினார்கள்.

ஆங்கிலிக்கன் சபைப் பேராயர்களும் ஏனையோரும் அதில் நற்கருணை எடுத்தனர். ஆகவே, கூட்டு நற்கருணை ஆராதனைகள் ஒருமைப்பாட்டு விஷயத்தில் ஒருபடி கூடுதலாக விளங்கினது. எனவே, 1932–ஆம் ஆண்டு ஒருமைப்பாட்டு பேச்சு வார்த்தைகளில் ஒரு திருப்புக்கட்டத்தை அளித்தது எனலாம். தென் இந்தியாவிலுள்ள, ஆங்கிலிக்கன் சபை இவ்விஷயத்தில் ஒரு தீரமான முறையில் நடந்து கொண்டது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமுள்ள பலர் இதினிமித்தம் முரண்பாடாய் நிற்கவேண்டியதாயிற்று. ஆனால் மெதடிஸ்து சபை இதினிமித்தம் ஒருமைப்பாட்டு விஷயத்தில் அதிக ஊக்கமடைந்தது.

வேறுபட்டு நின்ற மெதடிஸ்து போதகர்களும் ஒருமைப்பாட்டுக்காக உறுதியாய்ப் போராட முன் வந்தனர். தென் இந்திய ஐக்கிய சபையிலும் மாறுதல் ஏற்பட்டது. இதுவரையிலும் சபையாரிடம் நற்கருணைப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்ட. பழக்கத்தையுடைய பசுமலை சபையில் 1932–இல் நற்கருணை அழி பானிங்காவால் கட்டப்பட்டது. அதிலிருந்து சபையார் நற்கருணை அழிக்கு வந்து நற்கருணை பெற்றுக்கொள்ளும் பழக்கத்தையுடையவர்களானார்கள்.

சில தென் இந்திய ஐக்கிய சபைகளில் ஆங்களிக்கன் சபை முறைப்படி போதகர்கள் அங்கிகளும் (**Cassocks**) மேலங்கிகளும் (**Surplies**) போடலானார்கள்.

எனவே 1932 ஜுன் மாதம் பெங்களூரில் நடந்த கூட்டுக் குழுவின் பத்தாம் கூட்டத்தில் ஒருமைப்பாட்டுத் திட்டத்தில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. மாற்றப்படக்கூடாத 'ஆதாரம்' (**Basis**) என்றும், மாற்றப்பட்டக்கூடிய 'சட்டம்' (**Constitution**) என்றும் இரு பகுதிகளாக ஒருமைப்பாட்டுத் திட்டம் பிரிக்கப்பட்டது. ஏற்பட்ட மாறுதல்களில் ஒன்று வரலாற்றுப் பேராயர் ஆட்சி முறையைப் பற்றியது சட்டத்தோடு தொடர்புகொண்ட வரலாற்றுப் பேராயர் ஆட்சி முறையாக அது மாற்றப்பட்டது. இதற்கிசைய, பேராயர் சட்டத்தின்படி செயலாற்றுவார்.

பேராயருக்கு மேலாக பேரவையின் அதிகாரமும் வலியுறுத்தப்பட்டது. இதன் மூலம் பேராயர் எடுத்துக் கொள்ளக்கூடிய சர்வாதிகார தன்மை நீக்கப்பட்டது.

ஆங்கிலிக்கன் சபையாரல்லாதவர்களுக்கு இது ஒரு முக்கியமான அம்சமாகும். திருச்சபையில் நிலை கொண்டிருந்த ஒரு ஆட்சி முறையாகப் பேராயர் ஆளுகைமுறை இருந்தது என்ற கருத்தில் அது வரலாற்றுப் பேராயர் ஆளுகைமுறை என்று கூறலாமென்று தென் இந்திய ஐக்கிய சபை மனதிலாக்குகிறது என்ற அடிக்குறிப்பு 1932 ஒருமைப்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. முப்பது ஆண்டுகள் இடைக்காலத்திற்குப் பின் ஐக்கிய சபை ஒரு அடைக்கப்பட்ட சபையாகவே இருந்து இதர ஆட்சி முறைகள் அப்படியே மூடப்பட வேண்டுமென்பதை காங்கிரிகேஷனல் சபைகள் விரும்பவில்லை. விதிவிலக்குக்கு இடமளிக்க வேண்டுமென்று அவர்கள் வாதாடினார்கள். இறுதியில், முப்பது ஆண்டு இடைக்காலம் வேண்டும் என்றும், ஆனால், அது முடிந்தபின் விதிவிலக்கு அனுமதிக்கலாமா, அப்படியானால் அது எத்தன்மையுள்ளதாயிருக்கவேண்டுமென்பதை

முடிவு செய்ய வேண்டுமென்றும், லண்டன் மிஷன் சங்கத்தின் ஆர். எய்ச். ஈஸ்ற்றாப் போதகர் கூறின ஆலோசனை ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆங்கிலிக்கன் சபைப் பிரதிநிதிகள் 1929 வாக்குறுதியைத் தெளிவுப்படுத்தவேண்டுமென்று விரும்பினார்கள். இந்திய ஆங்கிலிக்கன் பேராயர்கள் வாக்குறுதி ஒருமைப்பாட்டுத்திட்டத்திற்குப் பொருத்தமானதென்று எண்ணினார்கள். ஆனால், மேனாட்டு ஆங்கிலிக்கன் பேராயர்களுக்கு அது போதுமானதாகப் புலப்படவில்லை. எனவே 1930–இல் நடந்த லாம்பத் மாநாட்டில் பேராயர்களால் போதகாபிஷேகம் பெற்ற போதகர்களே ஆங்கிலிக்கன் பாரம்பரியத்தைத் தழுவிய சபைகளில் நற்கருணை நடத்தலாமென்றும் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. எனினும் 1932 ஜூன் நடந்த கூட்டுக்குழு கூட்டத்தில் கூட்டு நற்கருணையில் அசரியா, வெஸ்ட்டன் ஆகிய ஆங்கிலிக்கன் பேராயர்கள் பங்கு பெறுகையில் வாக்குறுதியையும் மீண்டும் திருத்தி அமைப்பதில் சித்தி பெற்றுள்ளார்கள். இதுவே தென் இந்திய சபையில் நிரந்தரமாக ஒப்புக்கொள்ளப்பட்ட வாக்குறுதியாகும். அந்த வாக்குறுதி பின்வருமாறு: "**சபை அதிகாரிகளாலோ, பெரும்பான்மை எண்ணத்தாலோ எந்தச் சபையின் மனச்சாட்சியையும் மீறாதிருக்க ஐக்கிய சபை கவனமாயிருக்குமென்றும் ஒருமைப்பட்ட சபைகளில் நீண்டகாலமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட பாரம்பரியங்களை சார்ந்தவித செயலினாலும் மனப்பூர்வமாய் மீறாதென்றும் ஒருமைப்படும் சபைகள் வாக்குறுதி செய்கிறது. மேலும் தங்களுக்குப் பழக்கமில்லாததும், மனமார விரும்பாததுமான எவ்வித தொழுகை முறைகளும் சடங்குகளும், திருப்பணியும் எந்த சபையிலும் திணிக்கப்பட்டமாட்டாது. ஐக்கிய சபையில். பொதுவாகவோ, அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலோ. சம்பந்தப்பட்ட எவருடைய மனச்சான்றுக்குரிய உள்ளப் பற்றுறுதிகளைப் பழிப்பதற்காகவோ, அல்லது சபைக்குள் முழுஒருமைப்பாட்டிற்குரிய வளர்ச்சியைத் தடுப்பதற்காகவோ, அல்லது, பிற சபைகளோடு இனி ஒருமைப்படுவதற்கேற்ற முன்னேற்றத்திற்கு ஆபத்து விளைவிக்கிறதாகவோ, சபைகளைப் பற்றியோ,**

**போதகர்களைப் பற்றியோ ஒரு ஒழுங்குகளும் வேண்டுமென்றே, செய்யப்படமாட்டாதென்றும் வாக்குறுதி செய்து ஒருவரையொருவர் முழுமையாக நம்புகின்றனர்.**" இது கூட்டுக் குழுவால் அங்கீகாரம் பெற்றது.

1932 நவம்பர் டிசம்பர் மாதங்களில் நடந்த 11–ம் கூட்டுக் குழு கூட்டத்தில் மெதடிஸ்து அங்கத்தினர் எல்லா பேராயர் அபிஷேக ஆராதனைகளிலும் பிரஸ்பித்தர்மார் பங்கு பெற வேண்டுமென்று கேட்டனர். பின்பு அவர்கள் அதை வலியுறுத்தவில்லை. 1933 ஜனுவரி பெப்ருவரி மாதங்களில் நடந்த ஆங்கிலிக்கன் பேராயர் பேரவையில் 1932 வாக்குறுதிக்கு கொடுக்கப்பட்ட விளக்கம் பானிங்கா முதலியோருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. முன்னாள் ஆங்கிலிக்கன் சபைக்கு பேராயரால் போதகாபிஷேகம் பெறாதவர்கள் நியமிக்கப்படலாகாதென்றும், நற்கருணை நடத்தலாகாதென்றும் பேரவையில் கூறப்பட்டதே அந்த விளக்கம்.

1934 பெப்ருவரி மாதத்தில் சென்னையில் நடந்த கூட்டுக் குழுவின் பன்னிரண்டாம் கூட்டத்தில் இது ஆலோசனைக்கு எடுக்கப்பட்டது. மெதடிஸ்து சபை வாக்குறுதிக்குக் கொடுத்த விளக்கம் கூட்டுக் குழுவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஐக்கிய சபையின் போதகர், ஒருமைப்படுவதற்கு முன்னே பேராயர் ஆளுகைமுறையிலுள்ள சபையிலோ பேராயர்.

ஆளுகைமுறை இல்லாத சபையிலோ போதகராயிருந்ததினிமித்தம் ஐக்கிய சபையின் எந்த சபையிலாவது நியமிக்கப்படவோ, பணி செய்யவோ அந்த சபை அதை விரும்புவதால் அவர் தடை பண்ணப்படுகிறாரென்பது வாக்குறுதியின் கருத்தல்ல என்பதுவே அந்த விளக்கம். இது 1934 விளக்கம் (1934 **Interpretation**) என்று அறியப்படுகிறது. வரலாற்றுப் பேராயர் ஆட்சி முறையைப் பற்றியும் 1934–இல் நடந்த கூட்டுக்குழு ஒரு தீர்மானம் செய்தது, 1932 ஒருமைப்பாட்டுத் திட்டத்தில் தென் இந்திய

ஐக்கிய சபை அங்கத்தினர்களின் ஆலோசனையில் சேர்க்கப்பட்ட அடிக்குறிப்பினிமித்தம் இது ஏற்பட்டது. அதாவது, "சிலர் பேராயர் ஆளுகை முறையைச் சபையின் ஒரு ஆளுகை முறையாக எண்ணுகின்றனர். வேறு சிலர் இது கடவுளால் ஏற்படுத்தப்பட்டது என்று கூறுகின்றனர். சிலர் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட பல்வேறு எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் ஐக்கிய சபையானது பேராயர் ஆளுகை முறையைப் பற்றிய ஏதாவது விளக்கத்தால் கட்டுப்படுகிறதில்லை" என்பதாகும்.

1935–இல் சென்னையில் பெப்ருவரி மார்ச் மாதங்களில் நடந்த கூட்டுக்குழுவின் 13–வது கூட்டத்தில், கிறிஸ்தவம் பிரிந்து காட்சியளிக்கும் இக்காலத்தில் எல்லா திருப்பணிகளும் இவ்விஷயத்தில் பூரணமற்றதே என்று அறிவதால் தான், திருப்பணிகளின் சமத்துவத்தைப் பற்றிய பிரச்சினை தீர்க்கப்பட முடியுமென்று உணரப்பட்டது. கிறிஸ்து தமது கிருபையை எல்லா திருப்பணிகளிலும் வித்தியாசமின்றி பொழிந்தருளி அவை யாவற்றையும் தமது மகிமைக்காக பயன்படுத்தியுள்ளார். எனவே எல்லா திருப்பணிகளும் கிறிஸ்து சபையில் வார்த்தையையும் சாக்கிரமந்துகளையும் பற்றிய உண்மையான திருப்பணிகளேயாகும்.

"**ஒரு சபையும் கடவுளே ஆசீர்வதித்த சாக்கிரமந்துகள், திருப்பணிகள் ஆகிய இவற்றை பயனற்றது என்று கூறமுடியாது. இதை ஐக்கியத்தில் சேரும் சபைகள் அங்கீகரிக்கின்றன என்னும் இவ்வாசகங்கள் ஒருமைப்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன**". இந்த எண்ணத்திற்கு முக்கிய தூண்டுதலாயிருந்தவர்கள் மெதடிஸ்து அங்கத்தினராவர். திருச்சபை ஒருமைப்பாட்டிற்கு இறையியற்கல்வியிலும் ஒருமைப்படுவது நன்று என்று பலரால் உணரப்பட்டது.

1930– இல் இந்தியாவுக்கு வந்த லின்சே கமிஷன் ஒரு ஐக்கிய இறையியற் கல்லூரி நிறுவப்படவேண்டுமென்றும் அது பசு

மலையில் இருக்கவேண்டுமென்றும் சிபாரிசு செய்தது. தென் இந்திய ஐக்கிய சபையும் திருநெல்வேலி திருமண்டிலமும் அதில் அதிக ஆர்வம் காட்டினது. எஸ். சி. நீல் அதன் தலைவராகவும், பானிங்கா உதவியாளராகவும் இருக்கவும் இரண்டு இந்திய பேராசியர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்றும் உடன்பாடானது.

**1933** அல்லது **1934—**இல் ஐக்கிய திருமறைக் கல்லூரி இயங்க ஆரம்பிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இறுதியில் திருநெல்வேலி செயற்குழு இவ்வெண்ணத்திற்கு இணங்கவில்லை. நாசரேத்திலுள்ள இறையியற் கல்லூரியையே பலப்படுத்தவேண்டுமென்று செயற்குழு விரும்பினது. எனவே, இம் முயற்சி தோல்வியடைந்தது. **1938** பெப்ருவரி மாதம் சென்னையில் நடந்த கூட்டுக் குழுவில் விசுவாசப் பிரமாணங்களைப் பற்றிய காரியம் ஆலோசிக்கப்பட்டது.

தென் இந்திய ஐக்கிய சபையிலுள்ள லூாக்காஸ் முதலியோர் விசுவாசப் பிரமாணங்களில் சில மாறுதல்கள் செய்யப்படவேண்டுமென்று எண்ணியிருந்தார்கள்.ஆனால் கூட்டுக்குழு ஏதாவது மாறுதல் செய்வது திருச்சபையின் வரலாற்று விசுவாசத்திற்கு உண்மையற்றதாயிருப்பதாகும் என்று எண்ணினது. எனவே, விசுவாசப் பிரமாணங்களில் மாற்றம் செய்யப்பட கூட்டுக்குழு இணங்கவில்லை. தென் இந்திய ஐக்கிய சபை குருப்பட்டம் பெறாதவர்கள் நற்கருணை நடத்த அதிகாரப்படுத்தப்பட கேட்டுக்கொண்டது. ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்தவர்கள் கும்பல் இயக்கத்தின் மூலம் ஆயிரமாயிரமாய்ப் பெருகினதாலும் நற்கருணை நடத்த போதுமான குருப்பட்டம் பெற்ற போதகர்கள் இல்லாமையாலும் ஹைதரபாத் மெதடிஸ்து பகுதிகளில் சுவிசேஷகர்களை நற்கருணை நடத்த அதிகாரப்படுத்துவது வழக்கமாயிருந்தது.

**1935 கூட்டுக்குழுவில்** இது கொண்டு வரப்பட்டிருந்தது. தென் இந்திய ஐக்கிய சபையிலுள்ள வட தமிழ் சபாலோசனைச்

சங்கமும் இதை விரும்பியது ஆனால், நற்கருணை நடத்துவது பேராயர்களுக்கும் பிரஸ்பிரதர்மார்களுக்கும் மட்டும் உள்ள உரிமை என்னும் சட்டதிற்கிசைய அவ்வாறு அனுமதி கொடுக்கப்படவில்லை. 1939 நவம்பர் மாதம் சென்னையில் நடந்த கூட்டுக்குழுவி முடிவு செய்யப்பட்டது.

1941 அக்டோபர் மாதத்தில் சென்னையில் நடந்த கூட்டுக் குழு சபைகளுக்கிடையில் கூட்டுறவுக்கு முயற்சிகள் செய்தது. ஐக்கியத்திற்குள் சேரும் 2 அல்லது 3 சபைகள் இருக்கும் இடங்களில் ஐக்கிய ஆராதனைகள் நடத்த அனுமதி அளித்தது. மாநாடுகளும் நடத்த சம்மதித்தது மேலும். இந்த கூட்டுக்குழு கூட்டத்தில் ஒருமைப்பாட்டுத் திட்டம் இறுதி வடிவம் பெற்றது. அது 1942–இல் அச்சிட்டு வெளிவந்தது. 1941 கூட்டுக்குழு '**தீர்மானம் செய்ய ஒரு வேண்டுகோள்**' சபைகளுக்கு அனுப்பினது. இத்தகைய ஒரு தீர்மானத்தை 1944–க்குள் சபைகள் செய்யும்படியாகவும் அது ஆலோசன கூறினது.

1944 நவம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற கூட்டுக் குழு கூட்டம் பிற்சேர்வான போதகப் பதவி அளிப்பைப் (**Supplemental Ordination**) பற்றி மிகவாக விவாதித்தது. அது மீண்டும் ஒருமுறை போதகப் பதவி அளித்தலாகுமென்று பலர் எதிர்த்தனர். ஜே. இ. எல். நியூபிதின் மறுபோதகாபிஷேகமல்ல அதிகாரப்படுத்துதலே தேவை என்றார். ஆங்கிலிக்கன் சபைகள் அதை விரும்பினாலும் தென் இந்திய ஐக்கிய சபையில் பெரும்பான்மையோர் அதை விரும்பவிலலை. சபை ஒருமைப்பாட்டையே பிற்சேர்வான போதகப் பதவி அளிப்பு உடைத்துவிடும் என்று எண்ணத்தக்க அளவில் விவாதம் நடந்தது. எனவே, முடிவான தீர்மானம் இக் கூட்டத்தில் செய்யப்படமுடியவில்லை.

சபைகள் தீர்மானம் செய்ய 1941 கூட்டுக்குழு கூட்டம் அனுப்பின வேண்டுகோளுக்கிசைய முதலாவது ஐக்கிய சபையில் உட்பட முடிவுசெய்த பெருமை மெதடிஸ்து சபைக்கு உரியது. தென் இந்தியாவில் மெதடிஸ்து சபையில் நான்கு வட்டாரங்களில்

ஒருமைப்பாட்டைப் பற்றிய அறிவு கொடுக்கப்பட்டது. ஒருமைப்பாட்டைப் பற்றி நூல்களும் பரப்பப்பட்டு மக்களுக்கு உண்மையான நிலை எடுத்துக் காட்டப்பட்டது. இவ்வாறு செய்யப்பட்ட ஆயத்தத்திற்குப் பின் 1943 ஜனுவரி மாதம் மாகாணப் பேரவை கூடினது. நான்கு வட்டாரங்களின் வாக்குப் பதிவுகள் கணக்கிடப்பட்டன. மைசூர், திருச்சினாப்பள்ளி வட்டாரங்களில் ஏகமனதாக வாக்குப்பதிவு செய்திருந்தனர். சென்னையில் ஒருமைப்பாட்டிற்காக 64 பேரும், ஒருவர் விரோதமாகவும் வாக்குப் பதிவு செய்திருந்தனர். ஹைதராபாத்தில் 48 பேர் சார்பாகவும், 43 பேர் எதிராகவும் பதிவு செய்திருந்தனர். பின்பு மாகாணப் பேரவை 1942–இல் பிரசுரிக்கப்பட்ட ஒருமைப்பாட்டுத் திட்டத்தின் ஏழாம் பதிப்பின் அடிப்படையில் தென் இந்தியாவிலுள்ள மெதடிஸ்து சபை ஒருமைப்பாட்டில் பிரவேசிக்க முடிவு செய்தது. 1943 ஜூலை மாதம் இங்கிலாந்திலுள்ள மெதடிஸ்து மாநாடு தென் இந்திய மாகாணப் பேரவையின் தீர்மானத்தை அங்கீகரித்தது. விரைவில் ஒருமைப்பாடு ஏற்படவேண்டுமென்ற நம்பிக்கையையும் மாநாடு தெரிவித்தது.

ஆங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த திருமண்டிலங்கள் 1944 பெப்ருவரி மாதம் நடந்த பொது ஆலோசனை மன்றத்தில் வாக்கு பதிவு செய்தனர். தோர்ணக்கல் திருவிதாங்கூர் ஆகிய திருமண்டலங்களில் ஏகமனதாய் வாக்களிப்பு இருந்தது. ஏனைய திருமண்டிலங்களும் ஒருமைப்பாட்டை அங்கீகரித்தன. இவ்வாறு 1945 ஜனுவரி மாதத்தில் ஒருமைப்பாட்டு திட்டத்தை சி. ஐ. பி. சி. ஒப்புக்கொண்டது. சென்னை, திருவிதாங்கூர், கொச்சி (கேரளம்), திருநெல்வேலி, தோர்ணக்கல் ஆகிய திருமண்டிலங்கள். மெதடிஸ்து சபையோடும் தென் இந்திய ஐக்கிய சபையோடும் ஒருமைப்பட சி. ஐ. பி. சி. அனுமதித்தது.

தென் இந்திய ஐக்கிய சபை ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொள்வதற்குரிய காலம் நீடித்தது. கன்னட சபைலோசனைச் சங்கம் எய்ச் கமித்திரா, சி. பி. பொர்த் ஆகியோரின் தூண்டுதலினால் 1939–இல் ஒருமைப்பாட்டுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. லண்டன்

மிஷனரி சங்கத்தைச் சேர்ந்த திருவிதாங்கூர், தெலுங்கு, வட தமிழ் ஆகிய சபாலோசனைச் சங்கங்கள் ஒருமைப்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருந்தன. திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம் ஒருமைப்பாட்டிற்கு அனுகூலமாயிருக்க 75 சதவீதம் வாக்குகள் கிடைத்தால் ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொள்ளலாம் என்று தீர்மானித்தது. ஆனால் சாதகமாயிருக்க வேண்டிய இத்தீர்மானம் பல இன்னல்களுக்குக் காரணமாகிவிட்டது. ஒருமைப்பாடு நிறைவேறின பின்பும் ஒருமைப்பாட்டில் சேராத எதிர்கட்சியினர் வழக்கு மன்றங்களில் 75 சதவீத் தீர்மானம் எடுத்துப் பேசுவதற்குரிய துருப்புச் சீட்டாகிவிட்டது.

1941–இல் திருவிதாங்கூர் சபாலோசனை சங்கத்தில் வாக்குப் பதிவு எடுக்கப்பட்டபோது 63 சதவீதமே ஒருமைப்பாட்டுக்குச் சாதகமாகக் கிடைத்தது. மூன்று லண்டன் மிஷன் சபாலோசனைச் சங்கங்களும் ஒருமைப்பாட்டிற்குச் சாதகமாக இருக்கமுடியவில்லை தென் இந்திய ஐக்கிய சபையில் இவர்கள் மூன்றில் இரண்டு வீதத்தினராயிருந்தபடியால் தென் இந்திய ஐக்கிய சபை இந்நிலையில் ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொள்ளக்கூடாததாயிருந்தது.

1942–இல் லண்டன் மிஷனரி சங்கத்தின் முகாமைக்காரர் லண்டன் மிஷனரி சபைகள் ஒருமைப்பாட்டில் சேர ஊக்குவிக்கும் ஒரு அறிக்கையை அனுப்பினார்கள். நார்மன் குட்டால் என்னும் எல். எம். எஸ். பரதேச காரியதரிசி இதில் அதிக ஆர்வம் காட்டினார்.

1939 முதல் 1945 வரை நடந்த போரும் ஒருமைப்பாட்டுக்குத் தூண்டுதல் அளித்தது. இந்திய தலைவர்களின் தேவை தென் இந்திய ஐக்கிய சபையின் ஆலோசனை மன்றங்களில் உணரப்பட்டது. இது ஒருமைப்பாட்டுக்கு ஏவக் கூடியதாயிருந்தது.

தென் இந்திய ஐக்கிய சபையின் சபை ஒருமைப்பாட்டுக் குழுவின் கன்வீனராயிருந்த பானிங்கா 1942–இல் இந்தியாவைவிட்டுத் தம் தாய் நாடாகிய அமெரிக்காவுக்குச் சென்றார். அந்த இடத்தில்

ஆர். ஏ. டட்லி ஒரு ஆண்டு சேவை புரிந்தபின் 1943–இல் ஜெ. இ. எல். நியூபிகின் மிக திறமையோடு செயலாற்றினார். 1946–இல் ஒருமைப்பாட்டுத் திட்டத்திற்கு எதிராளியாயிருந்து பின்னர் அதை ஆர்வத்தோடு ஆதரித்த ஏ. எய்ச். லெக் கன்வீனரானார். இவர் காலத்தில் தான் ஒருமைப்பாட்டிற்கு முடிவான வாக்குப் பதிவு 1948–இல் எடுக்கப்பட்டது.

தென் இந்திய ஐக்கிய சபை ஒருமைப்பாட்டை ஏற்றுக் கொள்ளுமோ ஏற்றுக்கொள்ளாதோ என்னும் ஐயப்பாடு பலருக்குள் இருந்தது. சிலர் விரோதமாகவும் சிலர் சார்பாகவும் இருந்தமையால் வாக்குப்பதிவுகளைப்பற்றி அறிய அனைவரும் ஆர்வத்துடன் அக்கரையாயிருந்தனர்.வாக்குப் பதிவுகள் பின்வருமாறு:

தெலுங்கு சபாலோசனைச் சங்கம்

- 1941 ஒருமைப்பாட்டுக்கு எதிராக
- 1944 ஒருமைப்பாட்டுக்கு எதிராக
- 1945 ஒருமைப்பாட்டுக்கு வாக்குப்பதிவுகள்
- 1946 ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொண்டது.

திருவிதாங்கூர் சபாலோசனைச் சங்கம்

- 1941 ஒருமைப்பாட்டுக்கு 63 சதவீதம்
- 1942 ஒருமைப்பாட்டுக்கு எதிராக 63 சதவீதம்
- 1944 ஒருமைப்பாட்டுக்குச் சார்பாக 76 சதவீதம்
- 1945 ஒருமைப்பாட்டுக்குச் சார்பாக 53 சதவீதம்
- 1946 ஒருமைப்பாட்டுக்குச் சார்பாக 75 சதவீதம்

வட தமிழ் சபாலோசனை சங்கம்

- 1941 ஒருமைப்பாட்டுக்கு எதிராக
- 1942 ஒருமைப்பாட்டுக்குச் சார்பாக 68 சதவீதம்
- 1943 தீர்மானம் 4 ஆண்டுகளுக்குக் கடத்தி வைக்க
- 1944 ஒருமைப்பாட்டுக்கு விரோதமாக
- 1946 தீர்மானம் கடத்தி வைக்க
- 1947 ஒருமைப்பாட்டுக்கு26 சார்பாகவும் 25 விரோதமாகவும்

1946 செப்டம்பர் மாதத்தில் தென் இந்திய ஐக்கிய சபை ஒருமைப்பாட்டுக்குச் சம்மதம் தெரிவித்தது.

இவ்வாறு தென் இந்தியாவிலுள்ள மெதடிஸ்து சபையும், சி. ஐ. பி. சியின் சென்னை, திருவிதாங்கூர், திருநெல்வேலி, தோர்ணக்கல் திருமண்டிலங்களும், வடதமிழ் (கோயம்புத்தூர்) சபாலோசனை சங்கம் நீங்கலாக தென் இந்திய ஐக்கிய சபையும் ஒருமைப்பாட்டுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டபின் 1947 செப்டம்பர் மாதம் 27– ஆம் நாள் தென் இந்திய சபை உருவானது. தொடக்க விழா சென்னையிலுள்ள புனித ஜியார்ஜ் தேவாலயத்தில் 1947 செப்டம்பர் 27–ஆம் நாளாகிய அன்று நடைபெற்றது. தென் இந்திய சபையில் 14 திருமண்டிலங்கள் அமைக்கப்பட்டன. அவையாவன:

| **திருமண்டிலம்** | **கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை** | **பேராயர்** |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | தென் திருவிதாங்கூர் | 1,50,000 | ஏ. எய்ச். லெக் |
| 2. | கிருஷ்ணா –கோதாவரி | 1,15,000 | ஒய். முத்துயாலு |
| 3. | திருநெல்வேலி | 1, 00, 000 | ஜி. ற்றி. செல்வின் |
| 4. | ஹைதரபாத் (மேதக்) | 1, 00, 000 | எப். உயிட்டாக்கர் |
| 5. | சென்னை | 80, 000 | ஏ. எம். ஹாலிஸ் |
| 6. | மத்திப திருவிதாங்கூா | 78,000 | சி. கே. ஜேக்கப் |
| 7. | தோர்ணக்கல் | 70, 000 | ஏ. பி. எலியட் |
| 8. | திருச்சினாப்பள்ளி | 60, 000 | இ. பி. தார்ப் |
| 9. | கடப்பா–சித்துாா | 51, 000 | எய்ச். சுமித்திரா |
| 10. | கர்னூால் அனந்தப்பூா | 45,000 | பன்யன் ஜோஸப் |
| 11. | மதுரை–ராமனாதபுரம் | 45, 000 | ஜே.இ.எல். நியூபிகின் |
| 12. | மைசூர் | 27, 000 | பி. குருஷாந்தா |
| 13. | வட திருவிதாங்கூர், கொச்சி, மலபார் | 21,000 | ற்றி.சுடுவட் சிமித் |
| 14. | யாழ்ப்பாணம் | 3, 500 | எஸ். குலேந்திரன் |

14 பேராயர்களில் 6 பேர் இந்தியரும் 8 பேர் ஆங்கிலேயருமாவார். 14 பேராயர்களில் 7 பேர் ஆங்கிலிக்கன் சபையிலிருந்தும் 3 மேதடிஸ்து சபையிலிருந்தும், 3 காங்கிரிகேஷனல் சபையிலிருந்தும், ஒருவர் பிரஸ்பிட்டீரியன் சபையிலிருந்தும் வந்தவர்கள்.

23 ஆண்டுகளின் பேச்சு வார்த்தைகளின் விளைவு துவக்க

விழாவில் நிறைவடைந்தது. துவக்க விழாவில் தலவராயிருந்த பேராயர் சேரக்காராட்டு கொருலா ஜேக்கப் சிறப்பு நிரம்பிய அறிக்கையை மொழிந்த நிகழ்ச்சி வரலாற்றைப் பிறப்பித்தது. அந்த அறிக்கை பின்வருமாறு:

**அன்புக்குரிய பிரியமான சகோதரரே,**

சென்னை திருவிதாங்கூர் கொச்சி, திருநெல்வேலி, தோர்ணக்கல் திருமண்டலங்களைக் கொண்ட இந்தியா, பர்மா, இலங்கைச் சபையும், சென்னை, மதுரை, மலபார், யாழ்ப்பாணம், கன்னட, தெலுங்கு, திருவிதாங்கர் சபாலோசனைச் சங்கங்களைக் கொண்ட தென் இந்திய ஐக்கிய சபையும் சென்னை, திருச்சிராப்பள்ளி, ஹைராத், மைசூர் வட்டாரங்களைக் கொண்ட தென் இந்திய மெதடிஸ்து சபையும் ஆகிய இம்மூன்று சபைகளும் தென் இந்திய சபை ஆயின என்றும், ஒருமைப்பட்டுக் திட்டத்திற்குச் சம்மதித்து, தென் இந்திய சபையின் திட்டடத்தை ஏற்றுக்கொண்டு. பரிசுத்த மேசையில் பேர்கள் வைக்கப்பட்டுள்ளவர்களாகிய பேராயர்களும், பிரஸ்பித்தர்மாரும்: டிக்கன்மாரும், தேர்ந்தாயும் நிலைக்கு உட்பட்டவர் அதும், இச்சபையின் பேராயர்களும், பிரஸ்பித்தர்களும், டீக்கன்மாயிருக்கிறார்களென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் நான் இதனால் அறிக்கையிடுகிறேன் ஆமென்.

ஆங்கிலிக்கன் சபை பேராயர்களும், பாக்கன்ஹாம் பேராயரும் முதலாவது தென் இந்திய சபையின் பேராயர்களாக அதிகாரப்படுத்தப்பட்டனர். அதன் பின்பு தலைவர் சி. ஐ. பி. சி. பிரஸ்சித்தர்மார்களிடம் தென் இந்தியா சபைச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்களா என்றும், சட்டத்திற்கிசைய தென் இந்திய சபையில் பணியாற்றுவார்களா என்றும் கேட்டு சம்மதம் பெற்றுக்கொண்டார். அதுபோல, தென் இந்திய ஐக்கிய சபையின் போதகர்களும், மெதடிஸ்து சபை போதகர்களும் சம்மதிக்கவே

தலைவர் அவர்களைத் தென் இந்திய சபையின் பிரஸ்பித்தர்களாக அதிகாரப்படுத்தினார்.

ஒன்பது பேர் புதிதாகப் பேராயர்களாக அபிஷேகம் செய்யப்பட்டனர். அவர்கள் ஏ. எய்ச். லெக், ற்றி. ஜே. சுடுவட் ஸ்மித், ஜே. இ. எல். நியூபிகின், எஸ். குலேந்தரன், எப். உயிட் டாக்கர், பன்யன் ஜோஸப், எய்ச். சுமித்ரா, இ. பி. தார்ப், பி. குருஷாந்தா ஆகியோராவர். கூட்டத்தின் தலைவராகிய சி. கே. ஜேக்கப் பேராயரும், ஹாலிஸ், செல்வின் ஆகிய பேராயர்களும், தென் இந்திய ஐக்கிய சபை மெதடிஸ்து சபை ஆகிய இருசபைகளிலுமிருந்து மும்மூன்று பிரஸ்பித்தர்மார்களும் அபிஷேகம் பெறுவோரின் தலைகளில் கைகளை வைத்தனர். இவ்வாறு தென் இந்திய கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கினது.

# முதல் இருபத்தைந்து ஆண்டுகள்

தென் இந்திய சபை ஒருமைப்பாட்டு பேச்சு வார்த்தைகளுக்கு ஒரு முடிவாயிருந்தாலும் இன்னொரு கருத்தில் ஒருமைப்பாட்டு சபை இப்பொழுதுதான் ஆரம்பமாகிறது. எனினும், இது ஒரு அற்புதமான ஆரம்பம். பேராயர் ஆளுகை முறையுள்ள சபைகளும் பேராயர் ஆளுகை முறையில்லாத சபைகளும் ஒருமைப்பட்டது இதுவே முதல் தடவையாகும். இது உலகின் எந்த பகுதியிலும் நடக்க முடியும் என்பதற்கு தென் இந்தியாவில் நடந்தது ஒரு எடுத்துக்காட்டாயிருக்கிறது. தென் இந்தியாவில் நடந்த இந்த ஒருமைப்பாடு உலகமெங்குமுள்ள சபைகளுக்கே ஒரு அறைகூவலாக விளங்குகிறது. எனினும், இது முடிவல்ல, கிறிஸ்துவின் திருப்பெயரை அறிக்கை பண்ணுகிற எல்லாரும் அடங்கிய அனைத்துலக திருச்சபையோடு ஒருமைப்படுவதே முடிவான நோக்கமாகும். உலகத்தில் தோன்றின பல சபைகளைபோல் இதுவும் மற்றொரு சபை என்று தென் இந்திய சபை எண்ணவில்லை. வேறு சபைகளையும் ஒன்றுபடச் செய்வதற்குத் தென் இந்திய சபை ஒரு கருவியாய் இருக்குமென்பதைத் தென் இந்திய சபை நம்புகிறது. இந்த லட்சியத்துடன் அது செயல்பட ஆரம்பித்தது.

தென் இந்திய சபையின் முதல் பேரவை மதுரையில் நடந்தபொழுது ஏ. எம். ஹாலிஸ் பேராயர் மாடரேட்டராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அத்துடன் போதகர் ஜே. எஸ். எம்.

ஹுப்பர் பொருளாளராகவும், திரு. ஜி. வி. ஜோப் செயலாளராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். தென் இந்திய சபை சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன்றத்தில் (W. C. C) ஒரு உறுப்பாக இருக்கத் தீர்மானித்து ஆம்ஸ்டர்டாமில் நடந்த முதல் பொதுக் கூட்டத்திற்கும் பிரதிநிதிகளை அனுப்ப ஒழுங்கு செய்தது.

தென் இந்திய சபை தென் இந்தியாவிலுள்ள ஏனைய சபைகளும் தென் இந்திய சபையோடு அகன்ற ஒருமைப்பாட்டுக்காகக் கலந்தாலோசிக்க அழைப்பு கொடுத்தது. ஒருமைப்பாட்டைப்பற்றி கலந்தாலோசிக்க ஒரு குழுவையும் 1948–இல் கூடின முதல் பேரவை ஏற்படுத்தினது.

இந்தியாவில் மிகத் தொன்மையான புராட்டஸ்தாந்து சபையாகிய லுத்தரன் சபை ஐந்து லட்சம் கிறிஸ்தவர்களைக் கொண்டுள்ளதாக பதினொரு பிரிவுகளாக இயங்கின. 1936இல் பத்து பிரிவுகள் சேர்ந்து சுவிசேஷ லுத்தரன் கூட்டுறவில் வந்துள்ளன. அக் கூட்டுறவு தென் இந்திய சபையின் ஒருமைப்பாட்டுத் திட்டத்தை ஆராய்ந்து சம்பாஷணைகள் நடத்த போதுமானவை அதில் இருக்கின்றன என்று அறிந்தது. எனவே தன் எண்ணங்களைத் தென் இந்திய சபையோடு பகிர்ந்து கொள்ள முன்வந்தது.

அமெரிக்கன் பாப்திஸ்து மிஷனிலிருந்து உண்டான பாப்திஸ்து சபைகளும் தென் இந்திய சபையோடு ஒருமைப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட முன்வந்தது.

எனவே, தென் இந்திய சபையின் பேரவையின் செயற் குழு 1948 அக்டோபர் மாதத்தில் முதல் தடவையாகக் கூடி 1948 டிசம்பர் மாதத்தில் லுத்தரன் சபையின் பிரதிநிதிகளும் பாப்திஸ்து சபையின் பிரதிநிதிகளும் தென் இந்திய சபையின் பிரதிநிதிகளும் கூடவேண்டுமென்று தீர்மானித்தது. அதற்கிசைய டிசம்பர் 14 முதல் 16 வரை போர்ட் செண்ட் ஜியார்ஜ் புனித மரியாள் ஆலயத்தில் அது

நடந்தது. அதில் பதினொரு லுத்தரன் பிரதிநிதிகளும், ஒன்பது பாப்திஸ்து பிரதிநிதிகளும், ஏழு தென் இந்திய சபைப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

லுத்தரன் சபைப் பிரதிநிதிகளும் பாப்திஸ்து சபைப் பிரதிநிதிகளும் ஒருமைப்பாட்டில் மிக ஆர்வம் காட்டினர். எனவே இறையியல் கருத்துக்களை ஆராய கூட்டங்கள் தொடர்ந்து நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. எனவே மூன்று சபைகளிலுள்ள பிரதிநிதிகளும் கூடி உறுப்பு ஒருமைப்பாட்டின் விலை, திருமுழுக்கு நற்கருணை ஆகியவற்றின் கருத்து, திருச்சபையின் தன்மையும் திருப்பணியும், பேராயர் ஆளுகையின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் குறித்து ஆராய்ந்தனர். 1950– க்குப்பின் பாப்திஸ்து சபை இக்கூட்டங்களில் பங்குபெறவில்லை. ஏனெனில் உறுப்பு ஒருமைப்பாடு அவசியமில்லையென்பதை பாப்திஸ்து சபை உணர்ந்தது. அதற்குப்பின் தென் இந்திய சபையும் லுத்தரன் சபையும் மட்டும் பேச்சுவார்த்தைகளை நடத்தின.

ஒருமைப்பாட்டில் சேராமலிருந்த தென் இந்திய ஐக்கிய சபையின் வட தமிழ் சபாலோசனைச் சங்கம் 1950–இல் தென் இந்திய சபையில் சேரத் தீர்மானித்தது. ஏ. ஜே அப்பாசாமி இவ்வாறு தென் இந்திய சபையில் அமைந்த கோயம்புத்துார் திருமண்டிலத்தின் முதல் பேராயராக அபிஷேகம் பண்ணப்பட்டார்.

பாசல் மிஷனைச் சேர்ந்த பலபார் சபாலோசனைச் சங்கம் தென் இந்திய சபையில் சேர்ந்திருந்தது. ஆனால் பாசல் மிஷனைச் சேர்ந்த பம்பாய், கர்னாடக ஆலோசனைச் சங்கமும் தென் கன்னட ஆலோசனைச் சங்கமும் தென் இந்திய சபையில் சேராமலிருந்தன. 1954–இல் இவை இரண்டும் ஒருமைப்பாட்டில் சேரத்தீர்மானித்தன. முடிவான தீர்மானம் இன்னும் இரண்டு கூட்டங்களில் எடுக்க வேண்டியதாயிருந்தது. 1958 ஜனுவரி மாதம் பம்பாய், கர்னாடக ஆலோசனைச் சங்கம் தென் இந்திய சபையில் சேர்ந்தது. அது

வித்தியாசமான திருமண்டலமாக ஏற்படுத்தப்படுவது வரை மைசூர் திருமண்டிலத்தோடு இணைக்கப்பட்டது.

**ஒருமைப்பாட்டின் ஒரு நோக்கம் கடவுள் இயேசு கிறிஸ்து**வில் வெளிப்படுத்தியுள்ள மீட்பைக் கூறி அறிவிப்பதற்குத் தென் இந்தியாவிலுள்ள சபை ஒரு வல்லமையான கருவியாயிருக்கவேண்டுமென்பதாகும். எனவே, தென் இந்திய சபை முழுவதிலுமுள்ள நற்செய்திப்பணிகளை ஊக்குவிக்க பேரவை தூதப்பணிகளின் ஒரு மன்றக் குழுவை ஏற்படுத்தினது. திருமண்டிலங்கள் செய்யும் நற்செய்திப்பணிகளை மேற்பார்வை செய்வதும், நற்செய்திப்பணிக்கு முதல் இடம் கொடுக்கப்படுகிறதா என்பதைக் கவனிப்பதும், நற்செய்திப்பணிக்கு ஊக்கம் அளிப்பதுமே அதன் கடமை. அயல் நாடுகளில் தூதுப்பணி செய்ய ஊக்கமளிப்பதும் அதன் பொறுப்பாகும்.

தென் இந்திய ஐக்கிய சபை பாப்புவாவில் செய்த தூதுப் பணியைத் தென் இந்திய சபை தூதுப் பணி மன்றக் குழுவின் மூலம் தொடர்ந்து செய்தது. 1946–இல் தென் இந்திய ஐக்கிய சபை பாப்புவாவுக்குத் தூதுவர்களாக அனுப்பின சத்தியா ஜோஸப் போதகரும் அவரது மனைவியும் தொடர்ந்து செயலாற்றினார்கள்.

திருநெல்வேலியில் 1903–இல் ஏற்படுத்தப்பட்ட **இந்திய மிஷனரி சங்கம்** பளியர் மத்தியிலும் தோர்ணக்கல்லிலும் செய்த பணிகளும் தூதுப்பணி மன்றக் குழுவின் கீழ் வந்தன. தென் திருவிதாங்கூர் திருமண்டிலம் மத்திய இந்தியாவில் கோண்டர் மத்தியில் செய்த பணியும், மெதடிஸ்து சபை கோதாவரிக்கு அப்பாலுள்ள நிர்மல் என்னுமிடத்தில் செய்த பணிடம், திருவிதாங்கூர் கொச்சியிலுள்ள ஆங்கிலிக்கன் சபை ஹைதராபாத்திலுள்ள பாரக்கல்லில் செய்த பணியும். தூதுப்பணி மன்றக் குழுவின் ஆதரவுக்குள் வந்தன.

திருமண்டிலங்களினால் செய்யப்பட்ட சுதேச மிஷன்களும்

தூதுப்பணி மன்றக்குழுவின் மேற்பார்வையில் வந்தன. அவையாவன்: மைசூரிலும், சாம்ராஜ் நகரிலும், தலவாடியிலும் பணிசெய்த மைசூர் மிஷனரி சங்கம்.

- ஹைதரபாத்திலுள்ள ஆலம்பூரில் பணி செய்த
- நந்தியால் மிஷனரி சங்கம்.
- தோர்ணக்கல் செய்த முளகு மிஷன்
- யாழ்ப்பாணம் செய்த தீவுகள் மிஷன்
- தென் திருவிதாங்கூரின் சுதேச மிஷனரி சங்கம்.
- மத்திப திருவிதாங்கூரின் அடூர் மிஷன்.
- திருச்சினாப்பள்ளி திருமண்டிலத்தின் நற்செய்திப் பணி.
- மேதக் திருமண்டிலத்தின் நற்செய்திப் பணி
- கேரளா திருமண்டிலங்களின் நற்செய்திப் பணிகள் ஆகியவை.

பாப்புவாவில் செய்யப்பட்ட வெளிநாட்டுத் தூதுப் பணியில் திடீரென மாறுதல் ஏற்பட்டது. 1955–இல் பெப்ருவரி 14–ஆம் நாள் சத்யா ஜோஸப் பாப்புவாவில் மரித்தார். அவருடைய இடத்தில் ஒரு புதிய மிஷனரி அனுப்புவதற்கும் தடை ஏற்பட்டது. ஐரோப்பியரல்லாத எவரும் பாப்புவாவில் தூதுப் பணி செய்ய ஆஸ்திரேலியா அரசாங்கம் தடை விதித்தது. பாப்புவாவோடுள்ள தொடர்பு அற்றுப்போன போதிலும், தென் இந்திய சபை பாப்புவா சபையின் நலனைக் கருதுவதில் தவறவில்லை. ஆண்டொன்றுக்கு 650 ரூபாய் சத்தியா ஜோஸப் நினைவு உதவிப் பணமாக பாப்புவாவிலுள்ள ஒரு கவானி மாணவன் குருத்துவ ஊழியத்திற்காக இறையியல் பயிற்சி பெறுவதற்காக அளிக்கப்படுகிறது.

தென் இந்திய சபையின் மாடரேட்டர் ஹாலிஸ் ராஜினாமா செய்த பின் ஏற்பட்ட இரண்டாவது மாடரேட்டர் சுமித்திரா பாப்புவாவிற்கு ஒரு மாநாட்டிற்குச் செல்லவேண்டியதாயிருந்தது. அவர் திரும்பி வருகையில் தாய்லாந்தில் சென்று அது அயல் நாட்டுத் தூதுப் பணிக்கு ஏற்ற வாய்ப்பளிக்குமோ என்று அறிய மாடரேட்டர் கேட்டுக்கொள்ளப்பட்டார். தாய்லாந்திலுள்ள கிறிஸ்து சபை மிக ஆர்வத்துடன் அந்த எண்ணத்தை ஏற்றுக்கொண்டதுமன்றி ஒரு மிஷனரி மனைவியோடு வருவதற்கு அழைப்பையும் கொடுத்தது.

1958 ஜனுவரி மாதத்தில் கூடின பேரவை தாய்லாந்தை மிஷன் களமாக ஒப்புக்கொண்டு திருநெல்வேலி திருமண்டிலத்தில் குருவாகப் பணியாற்றின ஜே. ற்றி. பால் மாணிகம் போதகரையும் அவரது மனைவியையும் தாய்லாந்துக்கு மிஷனரிகளாக ஏற்றுக்கொண்டது. எனவே, 1958 ஜனுவரி 12–ஆம் நாள் அவர்கள் நாகர்கோவில் தென் இந்திய சபை ஆலயத்தில் அதிகாரப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டார்கள்.

சுதேச மிஷனரி பணிகளிலும் வளர்ச்சி காணப்பட்டது. கோயம்பத்தூரிலுள்ள கொடுமுடியிலும், மேடக் திருமண்டிலத்திலுள்ள கமாரெடியிலும், மைசூர் திருமண்டிலத்திலுள்ள தலாவடியிலும் தென் திருவிதாங்கூரிலுள்ள மலைப் பிரதேசங்களிலும், வட கேரள திருமண்டிலத்தில் கரும்பர்களிடமும், சென்னைக்கு வடக்கேயுள்ள ஆவடி, அம்பாத்தூர் ஆகிய இடங்களைச் சுற்றியுள்ள இடங்களிலும் சுதேச மிஷன் வேலைகள் ஆரம்பமாயின.

மதுரை நகர மிஷனின் சேவையும் குறிப்பிடத்தக்கது. மாதவபுரம், வேலூார், குப்பம், செய்யூர் (செங்கல்பட்டு), செய்யூர் (வட ஆற்காடு) ஆகிய இடங்களிலும் மிஷன் களங்கள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மதுரை நகர மிஷன் மேலும் கோவிலுாரில் 6 கிராமங்களிலும் திருவதானையில் 13 கிராமங்களிலும் நற்செய்திப்பணி செய்து வருகிறது.

தென் இந்திய சபையானது ஆரம்பத்திலிருந்தே வாலிபரையும் தூதுப் பணியில் ஊக்குவித்து உற்சாகப்படுத்தியது. தூதுப் பணி மன்றக்குழு அதற்கென்று இளையோர் மிஷனரி சங்கம் ஒன்றை ஏற்படுத்தியது. சில மாதங்களுக்குள் பல சபைகளில் இதன் கிளைகள் ஏற்படுத்தப்பட்டன. ஓய்வுநாள் பாடசாலைகள், கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கங்கள், வாலிபர் இயக்கங்கள் ஆகியவற்றோடு ஒத்துழைத்துத் தூதுப் பணிக்குத் தூண்டுவது இதன் கடமை. இந்திய கிறிஸ்தவ வாலிபரைத் தங்கள் சபையின் தூதுப் பணிக்குப் பயிற்சிப்பதே இச்சங்கத்தின் நோக்கம்.

இளையோர் மிஷனரி சங்கப் பணியில் ஊழியத்தின் விளைவுகள், தேவைகள், ஆலோசனைகன் ஆகியவை 4 மாதத்திற்கு ஒருமுறை பத்திரிகையின் மூலமாக கொடுக்கப்படுகின்றன. பொருட்காட்சிகள் வைக்கப்படுகின்றன. நாடகங்கள் மூலம் செய்தி கொடுத்தலும் படக்காட்சிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு இளையோர் மிஷனரி சங்கம் நற்செய்திப் பணிக்கு ஊக்கமளிக்கிறது.

ஆரம்பகாலத்தில் தென் இந்திய சபையிலுள்ள இளையோர் மிஷனரி சங்கத்தின் செயலாளர்களுக்கென்று ஒரு மாநாடு நடத்தப்பட்டது. தென் இந்திய சபையின் மிஷனரி சங்கங்களால் செய்யப்படும் பணிகளைக் குறித்து அவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. பணிகளின் முறைகளைப் பற்றிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டன. இவை. பெரும் கவர்ச்சியையும் ஊக்கத்தையும் உண்டு பண்ணின.

இளையோர் மிஷனரி சங்கத்தின் மூலம் சபைகளுக்குள் நற்செய்திப் பணியிலுள்ள ஆர்வம் அதிகரிக்கத் தொடங்கினது. மிஷன் சேவைகளுக்காகப் பணப் பிரிவு செய்வதிலும் அது சிறந்த பணியாற்றியுள்ளது.

தொழுகையிலும் தென் இந்திய சபையின் வளர்ச்சி காணப்படுகிறது. கிறிஸ்தவ அனுபவத்தின் மகிமையைத் தொழுகையில்

காண்கிறோம்: தென் இந்திய சபையின் ஆரம்பத்திற்குப் பின் அது பிறப்பித்துள்ள தொழுகை முறைகளில் தென் இந்திய சபையில் துாய ஆவியானவரின் செயலாற்றுதலைக் கண்ணாரக் காண்கிறோம். தொழுகையில் வித்தியாசமான பாரம்பரியங்களிலுள்ளவர்கள் ஆவிக்குரிய ஒருமைப்பாட்டில் கலந்து கொள்ளுவது அனுபவமாகிறது. எனவே, ஒருவரோடொருவர் அதிகமாய் நெருங்கி வருவதற்கு இத்தொழுகை முறைகள் காரணமாயிருக்கின்றன.

எதிர்பாராத அளவில் ஒருமைப்பாட்டின் எண்ணம் தொழுகையில் காட்டப்பட்டு வருகிறது. ஒருமைப்பாட்டுக்கு மூன்னே மூன்று சபைகளும் தத்தம் தொழுனை முறைகள் மாற்றப்படாதிருக்க வேண்டுமென்று உறுதி கொண்டிருந்தன. ஒருமைப்பாட்டு ஆதாரத்தில் இதைப் பற்றிய பகுதியில் மூன்று குறிப்புகள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

1. பொது தொழுகையில் அந்தந்த சபை வரலாற்று முறைகளை அனுசரிக்கவோ அனுசரியாதிருக்கவோ சுயாதீனம் உண்டு.

2. ஒருமைப்பாட்டுக்கு முன்னே மூன்று சபைகளிலும் எந்த தொழுகை முறைகள் உபயோகத்தில் இருந்தனவோ –இவை ஐக்கிய சபையில் தடை செய்யப்படமாட்டாது.

3. ஒரு சபையோ அல்லது அதன் போதகரோ சம்மதியாவிட்டால் ஒரு புது முறையும் புகுத்தப்படமாட்டாது. தங்களது வழிபாட்டு முறையைத் திட்டமிட அவர்களுக்கு உரிமை உண்டு. எனினும், ஆரம்பத்திலேயே புதிய தொழுகை முறைகளின் தேவை யாவராலும் விரும்பப்பட்டது ஆச்சரியமானதே.

எனவே, முதல் பேரவை ஒரு தொழுகைக் குழுவை ஏற்படுத்தவேண்டியதாயிற்று. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய பகுதிகளில் அந்தந்த மொழியின் அடிப்படையில் தொழுகைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு திருமண்டிலங்களும் அந்தந்த

தொழுகைக் குழுக்களும் இந்தியாவுக்குப் பொருத்தமான ஆராதனை ஒழுங்குகளை உருவாக்கவும் அதைப் பேரவை தொழுகைக் குழு பின்பற்றலாமென்று தீர்மானித்தது.

இவ்வாறு புதிய ஆராதனை முறைகள் தென் இந்திய சபையில் உபயோகத்திற்கு வந்தன. இவை வடிவத்திற்கு வருவதற்குக் காரணமாயிருந்தது பேரவைத் தொழுகைக் குழுவாகும். பேரவைத் தொழுகைக் குழுவில் உறுப்பினராயிருந்தவர்கள் , லெஸ்லி பிரௌன், ஜே. ஆர். மக்பேய்ல், எய்ச். கே. மோல்ற்றன், ற்றி. எஸ். காரட், ஜி. எஸ். அசரியா, இ. எல். ஆனந்த்ராவ், இ. தித்திக்கஸ், தாமஸ் சித்தர் ஆகியோர். இவைகள் ஆங்கிலத்தில் தயாரித்து, பேரவையால் அங்கீகரிக்கப்பட்டன. இவை சபைகளில் கட்டாயமாக அல்ல, சுய விருப்பத்தின் படியே பயன்படுத்தி வருகின்றனர். ஒருமைப்பட்ட சபை தான் இவ்வாறு செய்ய முடியும்.

முதல் தென் இந்திய சபை நற்கருணை ஆராதனை 1950 ஜனுவரி 8–ஆம் நாள் ஞாயிறு நாளன்று பேரவை நடக்கும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்டது. 1954–இல் அது புதிப்பிக்கப்பட்டு முடிவான வடிவத்தில் வெளியிடப்பட்டது.

தென் இந்திய சபை நற்கருணை ஆராதனை முறை உலக மெங்குமுள்ள சான்றோரால் போற்றப்பட்டுள்ளது. இது பல சபைகளிலுள்ள ஆராதனை முறைகளிலிருந்து தொகுக்கப்பட்டது. இவான்ஸ்டனில் 1954–இல் நடைபெற்ற சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன்றத்தில் தென் இந்திய சபை நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டது. மிகச் சிறந்த ஆவிக்குரிய உணர்ச்சியை இந்த ஆராதனை கொண்டுவந்த தென்று பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டது.

லுண்டில் 1952–இல் நடைபெற்ற விசுவாசத்தையும் அமைப்பையும் பற்றிய உலக மாநாட்டில் தென் இந்திய சபை நற்கருணை

ஆராதனை நடத்தப்பட்டபோது பல சபைப் பிரிவுகளிலிருந்து பங்குபெற்றவர்கள் எழுப்புதலான அனுபவத்தைப்பெற்று புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள்.

தென் இந்திய சபையிலும் இந்த நற்கருணை ஆராதனை மக்களை உண்மையான தொழுகையிலும் வணக்கத்திலும் நடத்த ஏதுவாயிருந்து வருகிறது. அதன் சிறப்பு அம்சங்கள் பத்திரிகைகளிலும் நூல்களிலும் வெளிவந்துள்ளன. அது சிறிய உட்பிரவேசத்தோடு ஆரம்பித்து படிப்படியாக கிறிஸ்துவாகிய மணவாளனின் பிரசன்னத்திற்கு நடத்தி, பரவச ஐக்கியத்திற்குட்படச் செய்கிறது. இறுதியில் பங்கு பெறுபவர்கள் அனைவரையும் கடவுளுக்குப் பிரியமும் பரிசுத்தமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கச் செய்கிறது.

திடப்படுத்தல் ஆராதனை முறை 1950–இல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு பின்பு தென் இந்திய மொழிகளில் பிரசுரிக்கப்பட்டன.

சபைகளில் தொழுகையில் பயன் படுத்தப்படுவதற்குத் திருமறைப்பாட அட்டவணையும் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டு 1954–இல் வெளிவந்தது. அட்வந்து, எப்பிபேனி, லெந்து ஆகிய காலங்களை ஒட்டி இந்த அட்டவணை பேரவைத் தொழுகைக் குழுவால் தயாரிக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகள் முக்கிய திருநாட்களாகிய கிறிஸ்து பிறப்பு, உயிர்த்தெழுந்த திருநாள், பெந்தேகொஸ்தே ஆகிய பண்டிகைகளை மனதில் வைத்து அது தொகுக்கப்பட்டுள்ளது.

ஞானஸ்நான ஆராதனை முறை 1954–இல் பேரவையால் ஒப்புக்கொள்ளப்பட்டு 1955–இல் பிரசுரிக்கப்பட்டது. இதிலும் பல அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மறு பிறப்பில் வலியுறுத்த அதற்கு அடையாளங்களாகிய ஒளி, வெண் உடை ஆகியவற்றிற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. போதகர் சொந்த வார்த்தைகளில் ஜெபிக்கவும் இடமுண்டு. சபையாரின் பிரதியுத்திரத்திற்கும் பங்குண்டு. சிலுவை அடையாளமிடுதல், வெண்ணாடை தரித்தல், தீபம் ஏற்றுதல்,

ஆகியவை கட்டாயமல்ல.

எல்லா ஆராதனை முறைகளையும் உருவாக்கிய பின் 1968–இல் தென் இந்திய திருச்சபையின் இறைவழிபாட்டு நூல் வெளிவந்துள்ளது. இந்நூலில் திருவிருத்து எனும் பரிசுத்த நற்கருணை ஆராதனை முறை, வழிபாட்டு நாட் கட்டளை முறைகள் (சுருக்க ஜெபங்கள், முகவுரைகள் முதலியன), காலை மாலை ஆராதனை முறைகள், ஞானஸ்நான ஆராதனை முறை. உடன்படிக்கை ஆராதனை முறை, திருமண ஆராதனை முறை, அடக்க ஆராதனை முறை, அபிஷேக ஆராதனை முறைகள், திருவிருந்து ஆராதனையின் சுருக்க முறை, தினசரி திருமறை வாசிப்பு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

ஒரே தொழுகைமுறை தென் இந்திய சபையில் திணிக்கப்படவேண்டுமென்பது தென் இந்திய சபையின் நோக்கமன்று. ஆனால் புதிய நல்ல அம்சங்களைத் தெரிந்துகொள்ள ஆயத்தமாயிருப்பது நன்று. 25 ஆண்டுகள் சென்ற பின்னரும் சில சபைகளில் புதிய முறைகளை ஏற்றுக் கொள்ள மன மற்றவர்களாயிருப்பவர்கள் உண்டு. தூய ஆவியானவரின் நடத்துதலுக்கு இசைந்து வழிபாடுகளைச் செழிக்கச் செய்வது சபையின் வளர்ச்சிக்கு மிக இனறியமையாதது.

நம் நாட்டுக்கிசைந்தபடி நமது தொழுகை முறைகளை அனுசரிப்பதைப் பற்றி பலர் மனதைச் செலுத்தி வருகின்றனர். இந்திய பாட்டுக் கருவிகள் அதிகமதிகமாக சபைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. **திருநெல்வேலி யாழ்ப்பாணம் முதலிய திருமண்டிலங்களில் தென் இந்திய சபையின் நற்கருணை ஆராதனை முறை பாடல் முறையில் பாடப்படுகிறது.** நம் நாட்டு முறையான தொழுகை முறையும் சில சபைகளில் சிறப்பான தருணங்களில் பயன்படுத்தப்படுகிறது. அரசரடியிலுள்ள தமிழ்நாட்டு இறையியற் கல்லூரி இந்திய முறை வழிபாட்டை அதிகமாக ஊக்குவித்து வருகிறது.

தென் இந்திய சபையில் பெண்கள் ஐக்கிய சங்க ஊழியத்திற்கும் ஒரு முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது 1948 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன் எல்லா திருமண்டிலங்களிலும் பெண்கள் ஊழியம் நடைபெற்று வந்தது. சில திருமண்டிலங்களில் பெண்கள் உதவிச் சங்கம் என்ற பெயரில் அது இயங்கி வந்தது. இவை யெல்லாம் ஒரே அமைப்புக்குள் கொண்டு வரப்பட்டு பெண்கள் ஐக்கிய சங்கம் உருவாக்கப்பட்டது.

காரல் கிரஹாம் அதன் தலைவராக ஏற்படுத்தப்பட்டார்கள். பெண்கள் ஐக்கிய சங்கத்தின் நோக்கங்கள் பின் வருமாறு:

1. ஜெபத்திலும், சேவையிலும், சாட்சியிலும் உறுப்பினர்களை ஒருமைப்படுத்த.
2. மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு முன்மாதிரி வைத்தல்.
3. கிறிஸ்தவ திருமணத்தின் தூய்மையையும் நிலைவரத்தையும் உயர்த்துதல்.
4. தாய்மார் தங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ முறையில் வளர்க்கும் பொறுப்பில் அவர்களுக்கு உதவி செய்தல்.

பெண்கள் ஐக்கிய சங்கம் எல்லா திருமண்டிலங்களிலும் அதிகமாக வளர்ந்து சிறந்த பணி புரிந்து வருகிறது. சபையின் பணிகளுக்காகப் பணம் திரட்டுவதிலும், ஜெபிப்பதிலும் செயல்படுவதிலும், இச்சங்கம் சபைக்கு: வல்ல கருவியாய் அமைந்திருக்கிறது.

தென் இந்திய சபையிலுள்ள பெண்கள் மொழி, இனம், பாரம்பரியம், கல்வி, சூழ்நிலை ஆகிய எல்லைகளைக் கடந்து ஜெபத்திலும் சேவையிலும் சாட்சியிலும் ஒன்றுபட்டு இயங்குதல் தென் இந்திய சபை ஒருமைப்பாட்டின் சிறப்பைக் காட்டும் ஒரு அம்சமாகும். பெரிய நகரங்களில் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் பண்டிகை

வரும் பொழுது தங்களை முன்னே ஒரு போதும் பார்த்திராதவர்கள் ஒருவரோடொருவர் சேர்ந்து ஜெபத்திலும் சாட்சியிலும் கலந்து கொள்கின்றனர்.

“**சகோதரிகள் வரிசை**” தென் இந்திய சபையில் ஏற்பட்டிருப்பதும் ஒரு வளர்ச்சியாகும். இது சபை ஒருமைப்பாட்டின் பலாபலன்களில் ஒன்று என்று ஹாலிஸ் பேராயர் துவக்க விழாவிற்கு முன் சகோதர வரிசையில் சேர விரும்பினவர்களுக்கு நடத்தப்பட்ட ஆயத்த கூட்டம் ஒன்றில் கூறினார்.

சகோதர வரிசையின் துவக்க விழா 1952 ஜுன் மாதம் 1–ஆம் தேதி நடைபெற்றது. 27 பெண்கள் சபையின் சகோதரிகளாக ஹாலிஸ் மாடரேட்டரால் ஏற்படுத்தப்பட்டனர். சகோதரிகள் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரமாவது, தனி ஜெபத்திலும் வேத வாசிப்பிலும், தியானத்திலும் செலவிட வேண்டும். ஒரு ஆண்டுக்கு ஒரு முறையாவது அவர்கள் ஒரு ஒடுக்கக் கூட்டத்திற்குச் செல்லவேண்டும். அவர்கள் திருமணம் புரிய வேண்டுமென்று விரும்பினால் சகோதரிகள் வரிசையை விட்டு நீங்கி விடுவார்கள். நீல பட்டையையுடைய வெண் ஆடையையும், வரிசையின் சின்னமாகிய சிலுவையையும் அவர்கள் அணிய வேண்டும்.

அவர்களின் பணி சபைக்குள்ளே முழுநேர கிறிஸ்தவ வேலையாகும். மருத்துவ வேலை, கல்விப்பணி அல்லது சபைப் பணியில் அவர்கள் ஈடுபடலாம். ஒரு ஆசிரமத்தில் ஒரு சிறு கூட்டமாகப் பொதுவாக வாழ்ந்து அவர்கள் பணி செய்யலாம். அல்லது, ஒரு நிறுவனத்தில் அவர்கள் சேவை புரியலாம் ஒரு கிராமத்தில் ஒரு பொறுப்பான வேலையை அவர்கள் எடுத்துச் செய்யலாம்; இவ்வேலைகளை அவர்கள் நற்செய்திப் பணியாகக் கருதுதல் வேண்டும்.

இப்பணிக்கு அவர்கள் கடவுளால் அழைக்கப்பட்டவர்களென்று

உணர்ந்து அதற்கென்று தங்களை ஒப்புக்கொடுத்தால் அவர்களுடைய பேராயரும், அதற்குரிய குழுவும் அவர்களை ஏற்றுக்கொண்டபின் ஓராண்டு இறையியல் பயிற்சி பெறவேண்டும். மூன்று ஆண்டுகள் பரிசோதனைக்குரியவர்களாக அவர்கள் பணியாற்றிய பின் 30–வது வயதில் சகோதரிகள் வரிசையில் சேர்க்கப்படுவார்கள்.

திருச்சபையின் ஆவிக்குரிய வளர்ச்சி சபையார் எவ்வாறு அதன் பணியில் ஆர்வமுள்ளவர்களாயிருக்கிறார் களென்பதில் தான் முக்கியமாக அறியப்படுகிறது. குரு. குலமும் சபையாரும் சேர்ந்து கடவுளோடு பணியாற்றுவதில் தான் சபையின் பணிகள் சிறப்பாய் நடந்தேறுகின்றன. உலகிலுள்ள பல்வேறு துறைகளில் மக்களோடு தொடர்பு. கொள்ளும் சபையார் மூலமாகச் சபை இயேசு கிறிஸ்துவின் மூலமாக உண்டாகும் மீட்பின் வல்லமை உலகிற்குச் செல்ல முடியும்; வழிபடும் ஒரு சமூகமாகவும் அன்றாடக வாழ்க்கையில் செயல்படும் மக்களாகவும் சபையாரின் சாட்சியும் சேவையும் சபைக்கு முக்கியமானது. சபையார் தங்கள் கிறிஸ்தவ: உத்தரவாதங்களைக் குறித்துக் கவலையுள்ளவர்களாயிருந்து திருப்பணியில் ஆர்வத்துடன் பங்கு பெற்றால் தான் திருச்சபை சிறப்பாய் உலகில் தனது கடமையை நிறைவேற்ற முடியும்.

தென் இந்திய திருச்சபையில் குருப்பட்டம் பெறாத பொதுச் சபையினர் சபையின் பணிகளில் பெருமிதமான பங்கெடுக்கின்றனர். தென் இந்திய சபையின் பேரவையிலும், திருமண்டில ஆலோசனை மன்றங்களிலும் ஆண்களும் பெண்களுமான பெருந் தொகையான சபையார் உறுப்பினர்களாயிருக்கின்றனர். சபையின் முக்கிய தேர்தல்களிலும் அவர்களே அதிகமாகப் பங்கு பெறுகின்றனர்.

உபதேசிகர்களாகவும், சுவிசேஷகர்களாகவும், ஆசிரியர்களாகவும், வேதாகம ஸ்திரிகளாகவும், மருத்துவர்களாகவும். தாதிகளாகவும், செயலாளர்களாகவும், கணக்கர்களாகவும், பொருளாளர்களாகவும் பணிபுரிகிறவர்கள் குருப்பட்டம் பெறாத

சபையாரேயாவர். சபையின் வாழ்க்கையிலும் பணியிலும் சபையார் மூன்று விதங்களில் பணிசெய்கின்றனர்.

1. சபையில் சம்பளம் பெற்று முழு நேரம் ஊழியஞ் செய்கிறவர்கள்.

2. சபையில் முழு நேர வேலை செய்யாமல் சுயேச்சையாகப் பணிபுரிகிறவர்கள். அத்தகையோர் அருளுரைகளாற்றியோ தொழுகையில் திருமறைப் பாடங்கள் வாசித்தோ, உதவிக்காரர்களாகவோ வேறு சுயேச்சை ஊழியர்களாகவோ உழைக்கின்றனர்.

3. தங்கள் சூழ்நிலைகளில் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையினாலும், சாட்சியாலும் நற்செய்திப் பணியாலும் பணி புரிகிறவர்கள்.

சபையார், செய்யவேண்டிய திருப்பணியைப்பற்றி ஆய்வு செய்ய பேராயர் நியூபிகினைத் தலைவராய்க் கொண்ட ஒரு விசேஷக்குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் குருப்பட்டம் பெறாத சபையார் பயிற்சி அளிக்கப்பட்டுச் சபைகளில் ஏற்படுத்தப்படுவதற்கு 1954–ஆம் ஆண்டில் நடந்த பேரவையில் நடபடிகள் எடுக்கப்பட்டன. எனவே, வாரக் கடைசியிலோ, வேனிற்கால பயிற்சிசாலைகளிலோ, வேறு சபையார் பயிற்சிக் கூட்டங்களிலோ குருப்பட்டம் பெறாத சபை நபர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்குப் போவை சிபார்சு செய்தது. மேலும், இறையியல் நிறுவனங்களிலும் அத்தகைய பயிற்சி அளிக்க ஆவன செய்வதைப் பற்றி கவனிக்க வேண்டுமென்றும் பேரவை தீர்மானித்தது. கிறிஸ்தவ ஆண்களும் பெண்களும் தங்கள் கடமைகளைப் பற்றிய எண்ணங்களைக் கூட்டுறவில் அறிய அதற்கேற்ற சங்கங்கள் உற்சாகப் படுத்தப்படவேண்டுமென்றும் பேரவை தீர்மானித்தது. இவ்வாறு பயிற்சிபெற்ற சுயேச்சை ஊழியர்களை சபை ஊழியத்தில் பயன்படுத்தும் முறை எல்லா திருமண்டிலங்களிலும் பின்பற்றப்பட்டு வருகிறது என்று 1956இல் நடந்த பேரவையில் அறிக்கை செய்யப்பட்டது.

பெரும்பான்மையான திருமண்டிலங்களில் அதற்கென்று விசேஷக் குழு ஏற்படுத்தித் தேவையான பணத்தையும் ஒதுக்கி வைத்துள்ளார்கள்.

எனவே, போதகர்களுக்கு நகர சபைகளிலும் கிராம சபைகளிலும் உதவியாயிருக்க அநேக சுயேச்சை ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்து பயன்படுத்த வேண்டுமென்றும், ஒவ்வொரு திருமண்டிலமும் இவ்விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்குத் தேவையான பணத்தை ஒதுக்கிவைக்க வேண்டு மென்றும், தங்கள் தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பயிற்சிகளை நடத்தவேண்டுமென்றும், விருதுகள் பெற்று ஆசிரியர்களாகவோ, அரசாங்க அலுவலர்களாகவோ இருக்கிறவர்களுக்குப் பயிற்சி அளிப்பதைப்பற்றி அதிக முயற்சிகள் எடுக்கவேண்டுமென்றும் 1956–ஆம் ஆண்டு பேரவை முடிவு செய்தது.

இதற்கிசைய திருமண்டிலங்களில் குருப்பட்டம் பெறாதவர்கள் சம்பளம் பெற்றோ சம்பளம் பெறாமலோ அநேகர் பணி புரிகின்றனர். நற்கருணை கொடுக்க அவர்களால் கூடாத தால் சுயேச்சையான பிரஸ்பித்தர்மாரின் தேவை அதிகமாய் உணரப்படுகிறது.

தென் இந்திய சபையானது தன் நோக்கத்திற்கிசைய தென் இந்தியாவிலும் அதன் வெளியிலும் நற்செய்திப் பணி செய்வதில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. 1948– இல் ஏற்பட்ட பேரவையின் தூதுப்பணிகளின் மன்றக்குழு, தூதுப் பணிக்கும் நற்செய்திப்பணிக்குமுள்ள பேரவை மன்றக்குழு **(The Synod Board of Mission and Evangelism)** என்று 1964 பேரவையில் அழைக்கப்படலாயிற்று. தென் இந்திய சபை இவ்வாறு தனது மிஷனரி அழைப்பையும் நற்செய்திப்பணிக்குரிய அழைப்பையும் நன்குணர்ந்து முயற்சிக்க ஆவல் கொள்ளுகிறது. தூதுப்பணிக்காகவே தென் இந்திய சபை இயங்குகிறது என்றும், தென் இந்திய சபையே துப்பணி என்றும் கூறுவது மிகையாகாது.

தென் இந்திய சபையின் ஒவ்வொரு திருமண்டிலத்திலும் இவ்விஷயத்தில் வளர்ச்சி காணப்பட்டுள்ளது. கல்வித்துறையிலும், வேளாண்மைத்துறையிலும், தொழில் துறையிலும் நற்செய்தியை அறிவிப்பதின் நோக்கம் அடிப்படையில் இருந்து வருகிறது. விடிவெள்ளி ஆசிரமம், பெத்தெல் ஆசிரமம் ஆகிய ஆசிரம ஊழியங்களிலும், விசேஷித்த தொழில் மிஷன்களிலும் தென் இந்திய சபை அக்கரை காட்டுகிறது. தொழில் தூதுப்பணியிலும் பல முறைகள் கையாளப்படுகின்றன. அதற்கென்று கோயம்புத்தூர், சென்னை முதலான இடங்களில் ஆண்டுதோறும் பயிற்சிக்கூட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

குருப்பட்டம் பெறாத சபையார் பணியைக் கவனிக்க தென் இந்திய சபை ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது (**Committee on Laity work**). இக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் 1970– இல் நடந்த பேரவை திருமண்டிலங்கள் இவ்வூழியத்தை நடத்த ஏற்ற உதவியும் ஆதரவும் அளிக்க ஒரு முழுநேர ஊழியரை நியமிக்கத் தீர்மானித்தது, இத்தகைய சேவையை வளரச்செய்யும் பொறுப்பை எடுக்க விரும்புவோரை ஸ்விட்சர்லாந்திலுள்ள போசேயிலுள்ள அனைத்து நோக்கு நிறுவனத்திற்கோ, பெங்களூரிலுள்ள அனைத்து நோக்கு கிறிஸ்தவ நிலையத்திற்கோ அல்லது. இத்தகைய பயிற்சியை அளிக்கும் இறையியற் கல்லூரிகளுக்கோ அனுப்ப ஒழுங்கு செய்யவும் பேரவை உடன்பட்டுள்ளது. திருமண்டிலங்கள் இவ்வூழியத்திற்குரிய தருணங்களையும் முறைகளையும் பற்றி ஆய்வு செய்யவும் பேரவை வேண்டுதல் தெரிவித்துள்ளது. மேலும் சபையார் செயல்படும் பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிப சங்கம், ஆசிரியர் கூட்டுறவு சங்கம், தொழிலாளிகள் கூட்டுறவு சங்கம் ஆகியவை ஒன்றாக இணைக்க ஒரு குழுவும் ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளது.

சுயேச்சை ஊழியத்தைக் கவனிக்கவும் ஒரு குழு தென் இந்திய சபையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது சுயேச்சை ஊழியர்கள் மேலுள்ள குழுவாகும் (**Committee on Voluntary workers**). இதற்கு ஒரு

பொது கன்வீனரும் 17 திருமண்டில கன்வீனர்களும் இருக்கின்றனர். சுயேச்சை ஊழியர்களின் திட்டமான தொகையை அறிவது சுலபமல்ல. 1971 கணக்கின்படி திருநெல்வேலியில் 900 பயிற்சி பெற்ற சுயேச்சை ஊழியர்களும், திருச்சி, தஞ்சாவூரில் 230 பயிற்சி பெற்ற சுயேச்சை ஊழியர்களும் உளரெனத் தெரியவருகிறது.

கோயம்புத்துரில் கிராமத்தில் வேலை செய்கிறவர்களுக் கென்றும், பிரசங்க ஊழியம் செய்கிறவர்களுக்கென்றும் இருவர் பயிற்சி கொடுக்கின்றனர். அது ஓரிடத்தில் நடத்தப்படாமல் திருமண்டலத்தின் வெவ்வேறான இடங்களில் நடத்தப்படுகின்றன. பயிற்சி பெற்றபின் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருமறையிலும், திருச்சபை வரலாற்றிலும் இறையியலிலும் அவர்கள் தேர்வு எழுத வேண்டும்.

தோர்ணக்கல்லிலுள்ள ஐந்து சபாலோசனை மன்றங்களில் ஒவ்வொன்றும் அதனதன் முறையைக் கையாண்டு சுயேச்சை ஊழியர்களைப் பயிற்றுவிக்கின்றன. போதகர்கள் மூலமாக அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒருவர் ஆளுநராயிருந்து பயிற்சியை மேற்பார்வையிட்டு நடத்துகிறார்.

ஆண்களிலும் பெண்களிலுமிருந்து இத்தகைய தலைவர்களைப் பயிற்றுவிப்பதில் சென்னை திருமண்டிலம் அதிக அக்கரை எடுக்கிறது. சுயேச்சை ஊழியர்களைப் பயிற்றுவிக்க சென்னையில் மூன்று மத்திய இடங்கள் இருக்கின்றன. 15 பேர் பயிற்சி கொடுக்கின்றனர். தலைவர்கள் பயிற்சி வேறு 18 பேரால் நடத்தப்படுகிறது. மாநாடுகளிலும் ஒடுக்கக் கூட்டங்களிலும் அவர்கள் குருக்களோடு பங்கு பெறுகின்றனர். இவ்வாறு பயிற்சி பெற்றவர்களில் அநேகர் கிராமப் பகுதிகளில் சேவை புரிகின்றனர்.

கன்னியாகுமரி திருமண்டிலத்தில் ஒவ்வொரு சபைக்கும் சம்பளம் பெற்று முழு நேரம் உழைக்கிற சபை ஊழியர்கள் உண்டு. ஆகவே, சுயேச்சை ஊழியர்களைப் பயிற்றுவிக்க அங்கு அவசியமில்லை.

எனினும், நற்செய்திப்பணி செய்ய ஆர்வமுள்ளவர்களுக்கு ஒடுக்கக் கூட்டங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கேரளாவிலுள்ள வட, மத்திப, தென் கேரளத் திருமண்டிலங்கள் மூன்றும் சேர்ந்து திருவல்லாவில் தோளச்சேரி என்னுமிடத்திலுள்ள வேதாகமப் பள்ளியில் சுயேச்சை ஊழியர் பயிற்சியை நடத்திவருகிறது. இதைத்தவிர தென் கேரளாவில் வேறு பயிற்சி இல்லாவிட்டாலும் ஆண்டவருக்கு தங்களை அர்ப்பணித்த அநேகர் கிராமப் புறங்களில் உதவி புரிய ஆயத்தமாயிருக்கின்றனர். சிறு சபைகளில் சிலர் பொறுப்பாய் உழைக்கின்றனர். ஆனால் அவர்கள் முற்றிலும் சுயேச்சை ஊழியர்களென்று கூறமுடியாது. ஏனெனில் அவர்களுக்கு அச்சபைகளிலிருந்து ஊதியம் அளிக்கப்படுகிறது.

றாயலசீமா திருமண்டிலம் உட்டி என்னுமிடத்தில் சுயேச்சை ஊழியர்களான ஆண்களுக்கும் பெண்களுக்கும் பயிற்சி அளித்துவருகிறது. நன்கு கல்விகற்ற பெண்களுக்கு ஆறு மாத கால பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திற்கும் 2 அல்லது 3 ஆண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி கொடுக்கப்படுகிறது. பயிற்சி முடிந்தபின் தொடர்ச்சியாக ஆண்டுக்குப் பதிநான்கு நாட்கள் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் திருமண்டிலத்தில் பாஸ்றரேட்டுகளில் நடத்தப்படும் ஒடுக்கக் கூட்டங்கள் மூலம் சுயேச்சை ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கல்வி கற்ற பெண்களுக்கு 9 மாத வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 230 சுயேச்சை ஊழியர்கள் சபை ஊழியத்திலும் ஓய்வுநாட் பாடசாலைகளிலும் உதவுகின்றனர். சுயேச்சையாக உதவி செய்கிற ஊழியர்கள் ஒவ்வொரு சபையிலும் இருக்கின்றனர்.

திருநெல்வேலி திருமண்டிலத்தில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் ஆசிரியர் பயிற்சி பள்ளிகளிலேயே சபையில்

உபதேசிகர்களாக ஊழியஞ்செய்ய விரும்புகிறவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதாகும். அத்தகைய பயிற்சி கலைகள் ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு மூன்றும் உள்ளன. இவ்வாறு பயிற்சி பெற்று உபதேசிகர்களாக சபைகளில் உழைக்கிறவர்களின் தொகை 1,400. பின்பு அவர்களுக்குத் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் சில பிரசுரிக்கப்பட்ட நூல்களில் தேர்வு நடத்தப்படுகிறது.

திருமறையூரிலும் சில ஆண்டுகள் ஆண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

திருநெல்வேலி திருமண்டிலத்தில் ஆசிரியர்கள் சபைகளில் செய்யும் பணி போற்றப்படத்தக்கது. சபையிலும் தங்களுக்கு பொறுப்பு உண்டென்பதை அறிந்து சேவை புரிகின்றனர். ஆசிரியர்களைக்கொண்டு சபை ஊழியத்தை நடத்தும் திட்டம் அங்கு வெற்றிகரமாய் நடக்கின்றது. அவர்களுக்கு. ஒடுக்கக் கூட்டங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தென் இந்திய சபையின் திருமண்டிலங்களில் இத்தகைய சுயேச்சை ஊழியம் ஆதரிக்கப்படுகிறபடியால் சபையாருக்குத் திருப்பணியில் அதிக ஆர்வம் உண்டாகக் காரணமாகிறது. சுயேச்சை ஊழியர்களும் சிறப்புடன் தங்கள் பணியைச் செய்ய ஊக்கடடைகின்றனர்.

வாலிபரிடையில் செய்யப்படும் சேவையை ஊக்குவிப்பதற்கு ஒரு குழு (**Committee for Youth Work**) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கும் ஒரு பொது கன்வீனரும் 17 திருமண்டில கன்வீனர்களும் உள்ளனர்.

திருச்சபையின் வாழ்க்கைக்கும் பணிக்கும் வாலிபர் சேவை மிகச் சிறந்தது. எல்லா திருமண்டிலங்களிலும் வாலிபர் சேவைக்கு மிக வலியுறுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிக்காகத் திருமண்டிலங்களில் செலவிடப்படும் பெரும் தொகையும், வாலிபர்

ஊழியத்திற்கென்று முழு நேர ஊழியரை ஒவ்வொரு திருமண்டிலமும் ஏற்படுத்தயிருப்பதும் இதற்குச் சான்றுகள்.

தென் இந்திய சபையின் ஒவ்வொரு திருமண்டிலத்திலும் வாலிபர் ஊழியத்தை மேற்பார்வையிடவும் திட்டமிடவும் ஒரு குழு உண்டு. பல திருமண்டிலங்களில் இந்த மத்திய குழுவின் கீழ் வட்டாரக் குழுக்களும் இருக்கின்றன.

வாலிப தலைவர்களைப் பயிற்றுவிப்பதிலும் அநேக திருமண்டிலங்கள் அதிக கவனம் எடுக்கின்றன. எல்லா திருமண்டிலங்களிலும் வாலிப சங்கத் தலைவர்களுக்காகவும், ஒய்வு நாட் பாடசாலை ஆசிரியர்களுக்காகவும் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. சில திருமண்டிலங்களில் விடுமுறை வேதாகமப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. சில திருமண்டிலங்கள் குன்னூரில் ஆண்டு தோறும் நடத்தப்படுகிற இந்திய ஓய்வு நாள் பாடசாலை ஐக்கியத்தின் பயிற்சி முகாமுக்கு ஆண்டுக்கு 2 அல்லது 3 ஒய்வு நாட் பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்சிக்காக அனுப்புகின்றன. அவர்கள் பயிற்சிபெற்று வரும்பொழுது ஏனைய ஓய்வு நாட் பாடசாலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றனர். திருமண்டில அளவிலும், வட்டார அளவிலும், பாஸ்ற்றரேட் அளவிலும் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. றாயலசீமா திருமண்டிலத்தில் ஒரு ஆண்டில் 640 வாலிபர் பங்கு பெற்ற 16 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

எல்லா திருமண்டிலங்களிலும் வாலிப மாநாடுகளும், ஒடுக்கக் கூட்டங்களும், உயிர் மீட்சி கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. சில திருமண்டிலங்களில் வாலிபர் வருகை குறைவாயிருப்பினும் வாலிபர் கிறிஸ்துவிடமும் ஒருவரோடொருவரிடமும் நெருங்குவதற்கு இவை பயனுள்ளவைகளாகக் காணப்படுகின்றன.

ஆண்டுக்கு ஒரு ஓய்வுநாள் வாலிப ஞாயிறாக

ஆசரிக்கப்படுகிறது. ஒவ்வொரு திருமண்டிலமும் வித்தியாசமான ஒய்வுநாளைக் குறித்துக்கொள்ளுகின்றன. இந்நாளில் நடக்கும் தொழுகை முதலிய நிகழ்ச்சிகளில் வாலிபர் பங்கு கொள்ளுகின்றனர். மத்திய கேரளம், தென் கேரளம், கன்னியாகுமரி முதலிய திருமண்டிலங்கள் அந்நாளிலேயே இவ்வூழியத்திற்குரிய ஒரு பகுதி பணத்தைச் சேகரித்துக்கொள்ளுகின்றன. அனைத்துலக ஓய்வுநாட் பாடசாலை நாள் நவம்பர் மாதம் முதல் ஞாயிறன்று அநேக திருமண்டிலங்களில் உற்சாகத்துடன் நடத்தப்படுகிறது. றாலி கூட்டங்கள், பவனிகள், போட்டிகள் முதலானவை சிறப்பிடம் பெறுகின்றன,

மத்திய கேரளம், தென் கேரளம், கன்னியாகுமரி , றாயல சீமா, கிருஷ்ணா கோதாவரி, மதுரை–ராமநாதபுரம், திருநெல்வேலி, முதலிய திருமண்டிலங்களில் ஏறக்குறைய எல்லா சபைகளிலும் நன்கு அமைக்கப்பட்ட ஓய்வுநாட் பாடசாலைகள் உள்ளன. இந்திய ஓய்வுநாட் பாடசாலை ஐக்கியம் வகுத்துள்ள பாடத்திட்டத்தை இத்திருமண்டிலங்கள் பயன்படுத்துகின்றன. நம் நாட்டில் இக்காலத்தில் இளைஞர் திருமறையை நன்கு படிப்பதற்கு ஓய்வு நாட் பாடசாலைகள் மிக இன்றியமையாதது.

மத்திய கேரளம், திருநெல்வேலி ஆகிய திருமண்டிலங்களில் தனி வாலிபப் பத்திரிகை வெளியிடப்படுகிறது. சில திருமண்டிலங்களில் வாலிப ஊழியத்திற்கென்று ஒரு பகுதி திருமண்டில பத்திரிகையில் விடப்பட்டிருக்கிறது.

விடுமுறை வேதாகமப்பள்ளி சபைகளில் வேத அறிவைப் புகட்டுவதற்கு ஒரு வல்லமையான கருவி. அநேக திருமண்டிலங்கள் இதை வேனிற்கால விடுமுறை நாட்களில் நடத்தி வருகின்றன. ஓய்வுநாட் பாடசாலைகளை பலப்படுத்துவதற்கும், அநேக ஆசிரியர்கள் இவ்வூழியத்தை எடுத்துச் செய்வதற்கும் தூண்டுவதற்கும் விடுமுறை வேதாகமப்பள்ளி அதிக பயனுள்ளதாய் விளங்குகிறது. பல வாலிப

தலைவர்கள் விடுமுறை வேதாகமப் பள்ளியின் ஆசிரியர்களாகத் தங்கள் ஊழியத்தை ஆரம்பித்தவர்கள். பங்காரப்பேட்டையிலுள்ள தென் ஆசியா வேதாகம நிறுவனம் ஆட்களையும், கருவிகளையும் அனுப்பி இவ்வூழியத்தைச் சிறப்பிக்கின்றது.

கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கமும் பல சபைகளில் வளர்ந்துள்ளது. இதன் மூலம், கிறிஸ்தவ சேவையில் இளைஞரும் வாலிபரும் ஈடுபட பயிற்சி பெறுகின்றனர். பல போதகர்களும் ஊழியர்களும் இச்சங்கத்தின் மூலம் கடவுள் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ளனர்.

1972 மே 20 முதல் 24 வரை கிருஷ்ணா கோதாவரி திருமண்டிலத்திலுள்ள மசூலிப்பட்டணத்தில் தென் இந்திய சபையின் வாலிபப் பொது மன்றம் நடைபெற்றது. உண்மையான பிரச்சினைகளை வாலிபர் அறிவது மட்டுமல்ல தெளிந்த சிந்தையோடும் சரியான அர்ப்பணிப்புடனும் செயல்பட இத்தகைய வாலிப பொது மன்றங்கள் உதவியாயிருக்கு மென்பதற்கு ஐயமில்லை. இப்பொது மன்றத்தின் மூலம் தென் இந்திய சபையிலுள்ள திருமண்டலங்களிலுள்ள வாலிபர் ஜெபத்திலும் கூட்டுறவிலும் ஆராய்ச்சியிலும் ஒன்று படக்கூடியதாயிற்று. கிறிஸ்துவுக்குத் தங்களை அர்ப்பணித்து உலகில் சாட்சிகளாயும் சேவை புரிகிறவர்களாகவும் ஏவக்கூடியதாக இம்மன்றம் பயனுடையதாயிருந்தது. இதற்கிசைய “**கிறிஸ்துவே விடை**” என்பது பொது மன்றத்தின் மையப் பொருளாயிருந்தது.

தென் இந்திய சபையின் கல்விக்குழு கல்வி சம்பந்தமான காரியங்களில் சிரத்தை எடுத்து வருகிறது. இதற்கு ஒரு பொதுக் கன்வீனரும் 17 திருமண்டிலக கன்வீனர்களும் உள்ளனர். பள்ளிகளிலும் கல்லூரிகளிலுமுள்ள ஆசிரியர்கள் சமய அறநெறி போதனை பெற பயிற்சி கொடுப்பதற்கும் ஒரு பொதுவான போதனைத் திட்டம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயன்படுத்தப்படுவதற்கும் தென் இந்திய சபைப் பேரவை சிந்தனை செலுத்தி வருகிறது.

சமூக தன நலக்குழு **(Socio-Economic Board)** தென் இந்திய சபையின் சமூக சேவைகளைக் கவனித்து வருகிறது. முழு நற்செய்தி முழு மனிதனுக்கு' என்னும் குறிக்கோளைக் கடைப்பிடித்து அநேக திருமண்டிலங்களில் கண் தெரியாதோர், வாய் பேசாதோர், காது கேளாதோர் ஆகியவர்களுக்காகவும் தொழு நோயாளிகளின் பிள்ளைகளுக்காகவும், கைவிடப்பட்டவர்களுக்காகவும் இல்லங்கள் ஏற்பட்டுள்ளன.

தென் இந்திய சபை பரந்த ஒருமைப்பாட்டிற்காக முயற்சி எடுக்க ஒருமைப்பாட்டுக் கலந்தாலோசிக்கும் குழு **(Union Negotiations Committee)** ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. தென் இந்தியாவிலுள்ள ஐந்து லுத்தரன் சபைகளோடு ஒருமைப்பாட்டுக் கலந்தாலோசித்தலில் தென் இந்திய சபை ஈடுபட்டது. ஒருமைப்பாட்டில் கலந்துள்ள லுத்தரன் சபைகள்.

1. தமிழ் சுவிசேஷ லுத்தரன் சபை.
2. ஆர்காடு லுத்தரன் சபை.
3. ஆந்திரா சுவிசேஷ லுத்தரன் சபை.
4. தென் ஆந்திரா லுத்தரன் சபை.
5. இந்திய சுவிசேஷ லுத்தரன் சபை.

தென் இந்திய சபையும் லுத்தரன் சபையும் சேர்ந்த கூட்டு இறையியல் குழு 1951 நவம்பரிலிருந்து 1959 ஏப்ரில் வரை ஆறு தடவைகளில் கூடி, **'சட்டமும், சுவிசேஷமும்', 'தெரிந்தெடுத்தலைப்பற்றிய கோட்பாடு', 'ஆண்டவரின் இராவிருந்து', 'திருச்சபையும் திருப்பணியும்'** என்ற பொருட்களில் ஒப்பந்த அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

நெருங்கின நடவடிக்கைகளுக்காக இருசபைகளும்

கலந்தாலோசித்து 21 ஆண்டுகளுக்குப்பின் ஒரு சட்ட அமைப்பின் தொகுப்பை விடுத்துள்ளது. முன் கொணரப்பட்ட இந்த சட்ட அமைப்பின் படி தென் இந்திய சபையும் லுத்தரன் சபையும் சேர்ந்த ஐக்கிய சபை **தென் இந்தியாவில் கிறிஸ்து சபை (The Church of Christ in South India)** என்று அழைக்கப்படும். இந்த சட்ட அமைப்பானது. ஆராய்ச்சிக்காக சபைகளுக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் இந்த ஒருமைப்பாடு அமுலுக்கு வரலாம்.

தென் இந்திய சபைக்கும் லுத்தரன் சபைக்குமிடையே ஒத்திசைவுக்குரியதொரு தீவிர முயற்சியாக மதுரையிலுள்ள அரசரடியில் தமிழ்நாடு இறையியற் கல்லூரி 1969 ஜுலை மாதம் 9–ம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. **தரங்கம்பாடியிலிருந்த குரு சாலை லுத்தரன் இறையியல் செமினரியும் தென் இந்திய சபையைச் சேர்ந்த திருமறையூர் தமிழ்நாடு இறையியற் கல்லூரியும் ஒன்றாக இதில் இணைந்துள்ளன.** பசுமலையில் தென் இந்திய ஐக்கிய சபையும் ஆங்கிலிக்கன் சபையும் சேர்ந்த ஒரு ஐக்கிய கல்லூரி 1934–இல் ஏற்படுமென்று பானிங்கா, எஸ். சி. நீல் முதலியோர் கனவு கண்டனர். ஆனால் அது நிறைவேற முடியாமற்போயிற்று. திருநெல்வேலி ஆங்கிலிக்கன் சபையார் அதை ஆதரிக்க முடியாமற்போயிற்று. ஆனால் அதற்குரிய வேளை இப்பொழுது வந்தது. அதுவும் லுத்தரன் செமினரியும் சேர்ந்த ஒரு ஐக்கிய கல்லூரியானது அதிசயமான செயல். இது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இது ஆண்டவரின் செயலேயன்றி வேறல்ல.

ஒருமைப்பாட்டிற்கு அரசரடி இறையியற் கல்லூரி ஒரு நாற்றடிபோல் விளங்குகிறது. ஒரே கூட்டுறவில் பயிற்சியிலும், தொழுகையிலும் சேவையிலும் இக்கல்லூரி ஈடுபடுவது தென் இந்தியாவில் ஒருமைப்பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பது கண்ணார நாம் காணும் காட்சியாயிருக்கிறது. இக்கல்லூரியிலிருந்து வெளியேறுகிறவர்கள் புதிய தொரு ஒருமைப்பாட்டுத் தரிசனத்துடன் செல்லுவதற்கேற்ற அமைப்பை இங்கு காண்கின்றோம்.

தென் இந்திய சபை உரோமன் கத்தோலிக்கரோடுள்ள நட்பு உறவில் வளருகிறதென்பதற்கு ஐயமில்லை. மாநாடுகளிலும் ஐக்கியக் கூட்டங்களிலும் ஒத்துழைக்கும் எண்ணம் இரு சபைகளிலும் காணப்படுகிறது.

மார்த்தோமா சபையும் தென் இந்திய சபையோடு மிக நெருங்கின உறவிலிருக்கிறது. வருங்காலத்தில் மார்த்தோமா சபையும் தென் இந்திய சபையும் ஒருமைப்படுமென்பதற்கு. அறிகுறிகள் காணப்படுகின்றன.

தென் இந்திய சபையின் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளைப் பின்னிட்டுப் பார்க்கையில் பல மாறுதல்களும் வளர்ச்சிகளும் தவறுதல்களும் காணப்பட்டன என்பதை அறிகிறோம்.

1950 ஜுலை 16–ஆம் நாளில் கடப்பா திருமண்டிலமும் அனந்தப்பூர் கர்னூல் திருமண்டிலமும் இணைந்து ராயலசீமா திருமண்டிலம் என்று அழைக்கப்பட்டது. எய்ச். சுமித்திரா அதன் பேராயராக 1963–இல் ஓய்வு எடுக்குமட்டும் பணியாற்றினார்.

பேராயர் சுமித்திரா 1888 நவம்பர் 13–இல் பெல்லாரியில் பிறந்தவர்; பெங்களூர் ஐக்கிய இறையியற் கல்லூரியில் தம் பயிற்சியை முடித்தபின் கட்டி செமினரியில் 1913–இல் ஆசிரியராகவும் 1915–இல் டும்கூர் கன்னட செமினரியில் ஆசிரியராகவுமிருந்து 1917–இல் பெல்லாரியில் போதகராக நியமிக்கப்பட்டார். இங்கிலாந்திற்கும், லாசேனுக்கும் அவர் விஜயம் செய்தபின் 1934–இல் பெங்க்ளூர் ஐக்கிய இறையியற் கல்லூரியில் ஆசிரியப் பணியை ஏற்று 1947–வரை உழைத்தார். 1947–இல் கடப்பா சத்துார் திருமண்டிலத்திற்குப் பேராயராயிருந்து அதன்பின ராயல சீமா பேராயரானார். 1954–இல் அவர் மாடரேட்டராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். 1962–வரை இப்பதவியில் தென் இந்திய சபைக்குப் பணியாற்றினார். 1970 ஜனுவரி 13–ஆம் நாள் தமது 80–ஆவது வயதில் கிறிஸ்துவுக்குள், நித்திரையடைந்தார்;

பேராயர் சி. எஸ். சுந்தரேசன் அவருக்குப்பின்னுள்ள பேராயராவர்.

1947–இல் தென் திருவிதாங்கூர் சபை தென் திருவிதாங்கூர் திருமண்டிலமானபோது தமிழும் மலையாளமும் பேசும் மக்களைக் கொண்டுள்ளதாயிருந்தது. 1956–இல் நாடுகள் பிரிக்கப்பட்டபோது இரு பிரிவினரும் வித்தியாசமான தமிழ், மலையாளம் திருமண்டிலங்களை விரும்பினர். 1959–இல் தென் திருவிதாங்கூர் திருமண்டிலம் தென் கேரள திருமண்டிலமாகவும், கன்னியாகுமரி திருமண்டிலமாகவும் பிரிந்தது. அச்சமயம் கன்னியாகுமரி திருமண்டிலத்தில் 1,07,095 கிறிஸ்தவர்களடங்கிய 277 சபைகள் இருந்தன. தென் கேரள திருமண்டிலத்தில் 80,000 கிறிஸ்தவர்கள் அடங்கிய 219 சபைகள் இருந்தன.

தென் கேரளாவில் ஏ. எய்ச். லெக் பேராயராக 1947 முதல் பணியாற்றினார். 1962 முதல் 1966 வரை தென் இந்திய சபை மாடரேட்டராகத் தலைமை வகித்தார். 1966–இல் அவர் ஓய்வு பெற்றபின் வி. உல்லியம் பேராயராக ஏற்படுத்தப்பட்டார்.

கன்னியாகுமரி திருமண்டிலத்தில் ஐ. ஆர். எய்ச். ஞானதாசன் 1960–இல் பேராயராக ஏற்படுத்தப்பட்டார். 1972–இல் தென் இந்திய சபை மாடரேட்டராக அவர் தெரிந்தெடுக்கப்பட்டார்.

வடகோள திருமண்டிலம் 1947–இல் சி. ஐ. பி. பி. சி. சபையின் திருவிதாங்கூர் கொச்சி திருமண்டிலத்தையும், தென் இந்திய ஐக்கிய சபையின் மலபார் சபாலோசனைச் சங்கத்தையும், வையனட் சபையையும் சேர்ந்துள்ளது. ற்றி. ஜி. ஸ்டுவட் ஸ்மித் 1947– இலிருந்து 1954– வரை அதன் பேராயராகவும், 1954– இலிருந்து ஆர். லிப் அதன் பேராயராகவும் சேவித்தனர். அவருக்குப்பின் ற்றி. பி. பெஞ்சமின் பேராயராகப் பணியாற்றி வருகிறார்.

மத்திய கேரளத்தில் சி. கே. ஜேக்கப் பேராயருக்குப்பின் எம். எம். ஜான் பேராயர் செயலாற்றி வருகின்றார்.

மைசூர் திருமண்டிலத்தில் பி. குருஷாந்தா 1947இலிருந்து 1950 வரையிலும் என். சி. சார்ஜென்ட் 1951 லிருந்து 1970 வரையிலும் பேராயர்களாயிருந்தனர். தென் இந்திய சபையில் சேராதிருந்த பேசில் மிஷன் கர்னாடக சபை தென் இந்திய சபையில் சேர்ந்தபொழுது மைசூரில் அது ஒரு தனித் திருமண்டிலமாக ஏற்படுத்தப்பட்டது. அதன்பின் மைசூர், வட மத்திப, தென் திருமண்டிலங்களாகப் 1970–இல் பிரிக்கப்பட்டது. வட மைசூரில், டப்ளியூ. வி. கார்ல் பேராயராகவும் தென் மைசூரில் எஸ். ஆர். பர்ட்டாடோ பேராயராகவும் மத்திய மைசூரில் கே இ . கில் பேராயராகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். சார்ஜென்டு பேராயர் ஓய்வு எடுத்துக் கொண்டபடியால் அவருடைய இடத்தில் கில் பேராயர் ஏற்படுத்தப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியில் 1947–இல் ஜி.ற்றி. செல்வின் 1947 முதல் 1953 வரை பேராயராயும் அவருக்குப் பின் எ. ஜி. ஜெபராஜ் 1953–இலிருந்து 1970 வரை பேராயராகவும் பணி புரிந்தனர். பேராயர் ஜெபராஜ் உதவி மாடரேற்றராகவும் பணிபுரிந்தார். இப்பொழுது பேராயர் ற்றி. எஸ். காரட் பேராயராய் பணியாற்றி வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் பேராயர் எஸ். குலேந்திரன் 1947இலிருந்து 1970–இல் ஓய்வு எடுக்குமட்டும் பேராயராய் பணி புரிந்தார். 1971 ஜூன் 30–ஆம் நாளில் டி. ஜெ. அம்பலவாணர் பேராயர் யாழ்ப்பாணத்தின் இரண்டாம் பேராயரானார்.

மேதக் திருமண்டிலத்தில் எப். உயிட்டாக்கர் முதல் பேராயராகவும் அதன்பின் நு. பிரீஸ்ட்லி இரண்டாம் பேராயராகவும் பணியாற்றியபின் 1968 மார்ச் 7–ஆம் நாளில் எய்ச். டி. லூத்தர் ஆபிரகாம் மூன்றாம் பேராயராக அபிஷே கம் பண்ணப்பட்டார்.

திருச்சிராப்பள்ளி – தஞ்சாவூர் திருமண்டிலத்தில் 1947இல் இ. பி. தார்ப் பேராயராய்ப் பணிபுரிந்தார். அவருக்குப் பின் பேராயர் சாலொமோன் துரைசாமி பேராயராக செயலாற்றி வருகின்றார்.

கிருஷ்ணா கோதாவரி திருமண்டிலத்தில் 1947 இலிருந்து 1955 வரை பேராயர் ஒய். முத்தியாலு சேவை புரிந்தார். அதன்பின் ஏ. பி. எலியட் பேராயராயிருந்தபின் பேராயர் ஆனந்தராவ் சாமுவேல் பணியாற்றி வருகின்றார். இவர் 1972–இலிருந்து உதவி பிரதம பேராயராகச் செயலாற்றி வருகிறார்.

சென்னையில் பேராயர் ஏ. எம். ஹாலிஸ் 1947 முதல் 1955 வரை பேராயராகவும் பணியாற்றினார். 1954 வரை அவர் பிரதம பேராயராயிருந்தார். இந்தியர்கள் தலைவராயிருக்க இடம் கொடுக்கவேண்டுமென்ற உயரிய காரணத்தால் பேராயர் பதவியிலிருந்து நீங்கிக்கொண்டார். அதன்பின் பேராயர் டி. செல்லப்பா 1955–இலிருந்து சில ஆண்டுகள் சேவித்தபின் பேராயர் நியூபிகின் அப்பதவியில் தெரிந்தெடுக்கப்பட்டார்.

மதுரை – ராமநாதபுரத்தில் பேராயர் நியூபிகன் 1947இலிருந்து சில ஆண்டுகள் ஊழியம் செய்தபின், சபைகளின் அனைத்துலக ஆலோசனை மன்றத்தில் பொறுப்பு எடுக்க வேண்டியதால் விட்டுப்போக, பேராயர் ஜியார்ஜ் தேவதாஸ் அப்பொறுப்பை எடுக்க அழைக்கப்பட்டார்.

கோயம்புத்தூரில் 1950 இலிருந்து ஓய்வுக்காக விடு மட்டும் ஏ. ஜே. அப்பாசாமி பேராயர் பதவியை வகித்திருந்தார். அதன்பின் 1972 வரை பேராயர் ஏ. ஜே. சாமுவேல் பேராயர் பணிபுரிந்தார். அவர் ஓய்வு பெற்றபின் ஜே. தங்கமுத்து பேராயராக 1972–இல் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தோர்ணக்கல் திருமண்டிலத்தில் ஏ. பி. எலியட் 1947இலிருந்து 1955 வரை பணியாற்றி கிருஷ்ணா கோதாவரி திருமண்டிலத்தில் பதவிமாற்றமடைந்தார். அதன் பின் பி. சாலொமோன் பேராயர் அங்கு பணிபுரிந்தார். இவர் 1960 இலிருந்து 1972 வரை பிரதம பேராயராகத் தொண்டாற்றினார்.

எனவே, தற்சமயம் பதினேழு திருமண்டிலங்கள் தென் இந்திய சபையில்

உள்ளன. இவை அனைத்தும் ஒருடலில் அமைந்த உறுப்புக்கள் போல் இசைந்துள்ளன.



# தென் இந்திய திருச்சபையின் எதிர்நோக்கு

தென் இந்திய திருச்சபை மகத்தான அழைப்பைப்பெற்றுள்ளது. பேராயர் ஆளுகைச் சபைகளும் பேராயர் ஆளுகை இல்லாத சபைகளும் ஒன்றுபட்ட முதல் சபை தென் இந்திய திருச்சபையேயாகும். உலகின் பல பகுதிகளில் பலவாறாகப் பிரிந்திருக்கும் சபைகளுக்குத் தென் இந்திய திருச்சபை ஒரு அறைகூவலாயிருந்து வருகிறது. விரைவாக மாறும் உலகில் இயேசு கிறிஸ்துவின் மீட்பின் செய்திக்கும் ஒப்புரவாக்குதலுக்கும் வல்லமையான சாட்சியாகக் கிறிஸ்தவர்கள் விளங்க வேண்டுமாயின் சபைகள் ஒன்றுபடுதல் வேண்டும். கிறிஸ்து சபையை ஒன்றுபடுத்தும் எல்லா முயற்சிகளிலும் தென் இந்திய திருச்சபையின் ஒருமைப்பாடு வரலாற்றுத் திருப்புக்கட்டமாக அமைகிறது. 1961–இல் புது டில்லியில் நடைபெற்ற சபைகளின் அணைத்துலக ஆலோசனை மன்றம் ஒருமைப்பாட்டைப் பற்றிய ஒரு அறிக்கையை ஒப்புக்கொள்வதற்கு தென் இந்திய திருச்சபை உருவானது, ஒரு துாண்டுகோலாயிருந்தது. தென் இந்திய சபையின் 25 ஆண்டு சாட்சியும் பணியும் அனைத்துலகத் திருச்சபையைக் கவர்ந்துள்ளது.

இந்தியாவிலுள்ள சூழ்நிலையில் சபைகள் ஒருமைப்பாட்டினாலும், ஒத்துழைப்பினாலும் கூட்டுறவினாலும் தான் சுற்றிலுமுள்ள – கிறிஸ்தவர்களல்லாத எண்ணிறந்த

மக்களுக்குக் கடவுள் இயேசு கிறிஸ்துவை உலகில் அனுப்பின அன்பைக் காட்டமுடியும். "**கடவுள் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**" இதுவே கடவுள் இயேசு கிறிஸ்துவை அனுப்பினதில் காட்டிய அன்பு, ஒருமைப்பாட்டின் காரணத்தினால் தென் இந்திய திருச்சபை இவ்வன்பைக் காட்ட கடவுளால் அழைப்பைப் பெற்றுள்ளது. ஒருமைப்பாட்டின் முக்கிய நோக்கமாகிய இதை தென் இந்திய திருச்சபையிலுள்ள ஒவ்வொருவரும் நிறைவேற்ற திட தீர்மானத்தோடு தீவிர முயற்சி செய்ய அழைப்பு கொடுக்கப்பட வேண்டும். இந்தியாவிலுள்ள பிற மதத்தினர் நமது ஒருமைப்பாட்டின் மூலமாகவும், ஆவிக்குரிய அனலின் மூலமாகவும், கிறஸ்தவ வாழ்க்கையின் மூலமாகவும் கடவுள் இயேசு கிறிஸ்துவை அவர்களை மீட்பதற்காக அனுப்பினாரென்பதை விசுவாசிக்கக் கூடுமானால் கடவுளின் சித்தத்தைத் தென் இந்திய திருச்சபை நிறைவேற்றும் பேறைப் பெற்றதாய்க் காணப்படுமல்லவா ?

திருச்சபையின் தூதுப்பணி தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேலரின் பணியோடும் இயேசு கிறிஸ்துவுக்குள்ளான புதிய இஸ்ரவேலரின் பணியோடும் தொடர்ச்சியுள்ளது. ஆபிரகாம் தொடங்கி இப்பணி கடவுளின் வெளிப்படுத்தலை உலகிற்குக் காட்டும் பணியாகும். கடவுளின் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் இந்த அழைப்பைத் தங்களுடைய வாழ்வுக்கென்றும் உயரிய நிலைக்கென்றும்' பயன்படுத்தாமல் கடவுளின் ஆசீர்வாதங்களை உலகிலுள்ள எல்லா இனத்தவருக்கும் கொண்டுவருவதற்காக வாழ்ந்து, பாடுபட்டு உழைக்கவேண்டும். இவ்வாறு, தெரிந்துகொள்ளப்பட்ட கடவுளின் மக்கள் உலகின் எல்லா மக்களும் கடவுளின் மக்களாவதற்குக் கருவிகளாயிருக்க வேண்டும். உலகத்திற்காகவே திருச்சபை இருக்கிறதால் அது தனக்காக வாழ முடியாது. தென் இந்திய திருச்சபை ஏதோ ஒரு புதுசபைப் பிரிவாயிராமல் அது சபையாயிருப்பது சிறப்புக்குரிய

அம்சமாகும். தென் இந்திய திருச்சபை தென் இந்தியாவிலுள்ள மக்கள் அனைவருக்காகவும் இருக்கிறது. தென் இந்திய திருச்சபைக்குப் புறம்பேயுள்ள 100–க்குத் 90 சதவீதத்திற்கு அதிகமான மக்களைப் பற்றி தென் இந்திய திருச்சபை பொறுப்புடையதாயிருக்கிறது.

துாதுப்பணி ஆத்துமாவுக்கு மட்டுமுரியதென்றும், ஆகையால் அது ஆவிக்குரிய தன்மையை மட்டும் கொண்டுள்ளதென்றும் எண்ணலாகாது. கடவுள் படைத்ததும், தமது ஒரே பேறான குமாரனை அனுப்பி அன்பு கூர்ந்ததுமான உலகத்தை மீட்பதுமே கடவுளின் திட்டமாகும். எனவே, மீட்பு முழு மனிதனையும் சம்பந்தித்தது. கடவுளின் வல்லமையாலும் கிருபையாலும் உலகம் மீட்கப்பட முடியும் என்பதே கடவுள் இயேசு கிறிஸ்துவின் மூலம் திருவுளம் பற்றிய செய்தியாகும். அத்தகைய மீட்பு சரீரத்திற்கும் ஆத்துமாவுக்கு முரியது என்பதைத் திருமறை நன்குற வெளிப்படுத்துகிறது. நற்செய்தி ஆத்துமாவுக்கு மட்டும் உரியதென்று கூறுவது கடவுள் முழு உலகத்தையும் ஆட்சி செய்கிறவரென்பதையும், கடவுளின் மீட்பின் அகன்ற தன்மையையும் மறுப்பதாகும். எனவே, சமுகத்தில் மனிதனது வாழ்க்கை முழுவதும் மீட்கப்படுதல் வேண்டும். இதைத் தென் இந்திய திருச்சபை தன் துாதுப்பணியில் நினைக்கவேண்டும்.

நற்செய்தி கடவுளிடமிருந்து வந்துள்ளது. அது மனிதனுக்கும் மனிதனுக்காகவும் உள்ளது. தேவையுள்ள ஒவ்வொருவனும் கிறிஸ்தவனுக்கு அயலானாயிருக்கிறானென்பது ஆண்டவரால் நல்ல சமாரியன் உவமையில் போதிக்கப்பட்ட உண்மையாகும். குற்றுயிராய்க்கிடந்தவன் எந்த இனத்தானென்றோ எந்த நாட்டானென்றோ கூறப்படாதது அயலானைப் பற்றிய சாதாரண எண்ணங்களெல்லாவற்றையும் தகர்க்கிறது. ஒருவன் தேவையுள்ளவனாயிருக்கையில் எந்தவிதமான வேறுபாடும் அவனுக்கு உதவி செய்யாதிருக்க இடையூறாயிருக்க முடியாது. அப்படிப்பட்டவனுக்கு உதவி செய்கிறவன் அவனுக்கு உண்மையான அயலானாகப் பணி புரிகிறான். தென் இந்திய திருச்சபை இக்கருத்தில்

சுற்றிலுமுள்ள தேவையுள்ளவர்களுக்கு அயலனாயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறது.

நற்செய்திப் பணிபுரிகிறவர்கள் ஆவிக்குரிய ஊழியத்தில் மட்டும் கவனம் செலுத்துவது ஒரு சோதனையாகும். அதுபோல சமூக சேவையில் மட்டும் ஈடுபட்டு ஆவிக்குரிய தன்மைகளை அறவே விட்டுவிடுவதும் ஒரு சோதனையாகும். சமூக சேவையை மட்டும் செய்வதில் கிறிஸ்தவத்தைக் காண்பது அரிது. ஒரு கிறிஸ்தவனாயிருப்பதால் கிறிஸ்து தன்னிடம் வைத்த அன்பிற்குப் பதிலாகச் செய்யும் சமூகப் பணிக்கும் சமூகப்பணிக்காகச் சமூகப் பணியைச் செய்வதற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது, நல்லவனாக செயல்படுவதற்கு நல்லவனாகுதல் வேண்டும். கடவுளைத்தவிர நல்லவன் ஒருவனுமில்லை யென்பதை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்கு உணர்த்தியுள்ளார். ஒருவன் நல்லவனாயிருக்க வேண்டுமாயின் அவன் மறுபடியும் பிறக்க வேண்டுமென்ற ஆண்டவரின் கூற்று நன்கு உணரப்படவேண்டும். சமூக நல சேவைகளில் இது அடிப்படையாயிருக்க வேண்டும். மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் ஒன்றுமில்லை யென்ற ஆண்டவரின் போதனை முக்கியமாக கவனிக்கப் படவேண்டும். கிறிஸ்து முழு மனிதனில் அன்பு கூர்ந்தார். கிறிஸ்துவின் அன்பினால் மீட்படைந்தவன் அயலானின் முழு மனிதனிலும் அன்புரை ஏவப்படுகிறான்.

நற்செய்திப்பணிக்கு நாட்டின் சூழ்நிலையையும் கவனிக்க வேண்டும். '**ஒரு சமயமானது சூழ்நிலைக்குப் பொருந்தி அமைய வேண்டும், அல்லது, அது அழிந்துவிடும்**' என்பது அடிக்கடி கையாளப்படும் ஒரு கூற்று. எனினும், கிறிஸ்தவ சமயமானது ஒரு சமூகத்திலும் பூரணமாகப் பொருந்திப் போகவில்லை யென்பதும் உண்மை. சூழ்நிலைக்கு அது கீழ்ப்பட்டு விடாமல் அதற்கு மேலாக வெற்றியடைந்திருக்கிற தென்பதைத் திருச்சபை வரலாறு தெளிவாகக் காட்டுகிறது, இவ்வித முயற்சியில் கிறிஸ்தவம் இந்திய சூழ்நிலையை

ஓரளவில் மாற்றி அமைத்திருக்கிறது என்று கூறுவது தவறாகாது, அதே வேளையில் கிறிஸ்தவமும் சந்தர்ப்பத்திற் கேற்றபடி பொருந்தத்தக்க அளவில் செயலாற்றியிருக்கிகிறது. முதல் நூற்றாண்டில் உரோமை அரசாங்க சூழ்நிலையில் கிறிஸ்தவ சமயம் கிரேக்க சொற்களையும் கருத்துக்களையும் பயன்படுத்தி தன் எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளது. எனினும், கடன் வாங்கப்பட்ட சொற்களும், கருத்துக்களும் கிறிஸ்துவுக்குள் திருமுழுக்காட்டப்பட்டபடியால் அவை கிறிஸ்தவ மயமாகவே விளங்குகின்றன. தென் இந்திய திருச்சபை இதை உணர்ந்து செயலாற்ற வேண்டும். இதைக்கவனியாது சூழ்நிலைக்கு ஒத்துப்போவது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அபாயகரமானது.

சபை அமைப்பிலும், வடிவத்திலும் செயலிலும், இந்திய திருச்சபை இந்திய முறைகளைக் கையாட முற்படுகிறது. இந்தியாவிலுள்ள சபை இந்திய சபையாய் இருக்கவேண்டு மென்பது இந்திய கிறிஸ்தவ தலைவர்கள் தற்காலத்தில் கொள்ளும் எதிர்நோக்கு. 1905–இல் தேசிக மிஷனரி சங்கம் (N. M. S.) நிறுவப்பட்டபொழுது இந்த நோக்கத்தை அடிப்படையாய்க்கொண்டு, இந்திய மனிதராலும், இந்திய பண உதவியாலும், இந்திய முறையாலும் செயலாற்றுவதைக் குறிக்கோளாய்க் கொண்டது. 1938–இல் தாம்பரத்தில் கடின அனைத்துலக மிஷனரி ஆலோசனை மன்றம் நற்செய்தி தன்னாட்டு முறைகளில் வெளியிடப்பட வேண்டுமென்று வற்புறுத்தினது. நம் நாட்டு மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய முறைகளில் நற்செய்தி கூறி அறிவிக்கப்படவேண்டியது இன்றியமையாதது.

தென் இந்திய திருச்சபையின் நகர சபைகளில் பல இன்னும் மேனாட்டு முறைகளையே பின்பற்றுகின்றன, ஆலயங்கள், பாடல்கள் முதலியவற்றில் இன்னும் அயல் நாட்டுத்தன்மைகள் பின்பற்றப்படுகின்றன, நம் நாட்டு முறைகளுக்குச் சிறிதளவே இடமளிக்கப்படுகிறது, தொழுகைகளில் நம் நாட்டு முறைப்படியுள்ள கீர்த்தனைகள் பாடப்படாத சபைகள் தென் இந்திய திருச்சபைக்குள் இருக்கின்றன. '**நாட்டு மதிப்புப்படியினை இழத்தல்**'

**(Devationalization)** என்னும் குற்றச்சாட்டுக்குப் போதிய சான்றுகள் சபைகளுக்குள் காணப்படுகின்றன.

இது நிற்க, இந்திய முறைகளைக் கையாடுகிறவர்களும் மட்டுக்கு மிஞ்சின மாறுதல்களுக்கு இடமளிக்கிறபடியால் கிறிஸ்தவ சாட்சியின் தன்மைக்குக் கேடுண்டாயிருக்கிறதையும் கண்ணாரக்காணலாம். அநேக தென்னாட்டு கிறிஸ்தவர்களை ‘இந்திய கிறிஸ்தவர்கள்’ என்று அழைப்பதற்குப் பதிலாக ‘இந்து கிறிஸ்தவர்கள்’ என்று அழைப்பது: பொருத்தமென்று தோன்றுகிறது. ‘புதுமை’ என்னும் பக்திச் சொல்லை கிறிஸ்தவ சாட்சிக்குத் துரோகம் விளைவிக்குமாறு பயன்படுத்துவதும் கிறிஸ்தவத்திற்குக் கேடு விளைவிக்கும் செயலாகும்.

இந்திய நாகரீகப் பண்பாட்டை நற்செய்திப்பணியில் இந்திய திருச்சபை கவனிக்கவேண்டியதுதான். எனினும், ‘**இந்திய கிறிஸ்தவ நாகரீகம்**’ என்று கூறத்தக்கதான ஒன்று இன்னும் நாம் கண்டுபிடிக்கவில்லை. இதற்கு ஒரு காரணம் இந்திய நாகரீகத்தையே நாம் பன்மையிலேயேதான் பேசக் கூடியதாயிருக்கிறது. பிற மதங்களாகிய இந்து மதத்திலிருந்தோ முஸ்லிம் மதத்திலிருந்தோ மனந்திரும்பிகிறிஸ்தவர்களானவர்கள்தத்தம்மூதாதையநாகரீகத்தின் பண்புகளையே பின்பற்றுகின்றனர். எனவே, திருச்சபைக்குள் பலவித நாகரீகங்கள் ஒன்றோடொன்று கலந்து ‘**அயல் கருவுறுதல்**’ **(cross-fertilization)** தன்மையைத்தான் சபைகளுக்குள் காணகிறோம்.

இந்திய கிறிஸ்துவைச் சித்திரிக்கும் படங்களும் சிற்பங்களும் பயன்படுத்தப்படுவதைக் தற்காலத்தில் காண்கிறோம். கிறிஸ்துவின் மனுடாவதாரத்தின் உண்மையான தன்மையையும், அவரது பணி பின் உண்மையான தன்மையையும், அவருடைய வெளிப்படுத்தலின் உண்மையான கருத்துகளையும் அவை புலப்படுத்துகின்றனவா என்பதில் தான் அதை அளக்கும் அளவுகோலை நாம் காணலாம். இந்தியமயமாகுதல் மீட்பைத் தேடுகிறவனுக்குக் கிறிஸ்துவிலடங்கிய

நற்செய்தியைத் தெளிவாகக் காட்டாவிடில் அதில் பயனில்லை. இந்திய மயமாகுதலின் அடிப்படையில் ஏனைய நாட்டுச்சிறந்த பண்புகளை இழிவாக எண்ணுதலும் கிறிஸ்தவ தன்மையல்ல. இந்திய சபையாய் தென் இந்திய திருச்சபை விளங்கினாலும் அது அனைத்துலக திருச்சபையின் ஒரு அம்சம் என்பதையும் மறந்துவிடலாகாது.

முதன்மையானதை முதன்மையானதாகச் சபைகள் ஒப்புக் கொள்ளவேண்டும். பழைய பாரம்பரியப்படி காரியங்களை நடப்பிப்பதிலிருந்து சபை சீர்திருத்தப்படவேண்டும். சீர்திருத்த செம்மல் மார்ட்டின் லுத்தரும் ஏனைய சீர்திருத்தவாதிகளும் எந்த சடங்காசாரங்களிலிருந்து திருச்சபையை விடுதலை பண்ண முயன்றனரோ அதே போன்ற சடங்காசாரங்கள் மீண்டும் சபைகளில் முதல் இடம் பெற்றுவிடுமோ என்ற ஐயப்பாடு தற்பொழுது எழுகின்றது. தற்சமயத்தில் சில சபைகளில் புகுத்தப்படும் சடங்குகள் இந்திய சடங்குகளா' யிராமல் இந்து சடங்குகளோடு சம்பந்தப்பட்டவைகளாயிருக்கின்றன. புதுமை என்ற பெயருக்காகப் புதிய காரியங்களைச் செய்யப் பலருக்குப் பிரத்தியேக ஆர்வம் இக்காலத்தில் ஏற்படுகிறது, ஆவிக்குரிய நிலையில் சபை வளர்ச்சியடையாமல் இருப்பதை உணராமல் சமூகப்பணியில் மட்டும் ஈடுபட்டுத் தங்கள் காலத்தைப் பலர் செலவளிக்கின்றனர். '**முதலாவது கடவுளுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்**' (மத். 6:33) என்ற இயேசு மீட்பரின் பொன்னான மொழிகளை மறந்து சாட்சியற்ற சேவையில் மட்டும் ஊழியர்கள் செயல்படுகின்றனரா? இப்படிப்பட்ட நிலை வருங்காலத்தில் தென் இந்திய திருச்சபையில் வளருமானால் தென் இந்தியாவில் சபை அதிகமாக வளருவதற்கு. இது ஒரு பெரும் முட்டுக்கட்டையாயிருக்குமென்பதற்கு ஐயமில்லை.

மற்றொரு பெரிய சோதனை பணத்தைப் பற்றியதாகும். ஒவ்வொரு திருமண்டிலத்திலும் நவீன முறையில் பெரிய கட்டடங்கள் கட்டப்படுகின்றன. நிறுவனங்கள் மிகவும் தேவை. ஆனால் கட்டடங்கள் கட்டுவதோடும் ஆலயங்களை விரிவாக்குவதோடும்

பணி முடிவடைகிறதானால் இது பெரும் அபாய நிலையாகும். அனாத சாலைகளில் வாழும் அனாதப் பிள்ளைகள்கூட சகல வசதிகளுமுள்ள கட்டடங்களில் வாழ்ந்து, அங்கிருந்து வேலைகளுக்காகப் பல இடங்களுக்குச் செல்லும் பொழுது தியாக சிந்தையற்றவர்களாகவும் கஷ்டங்களைச் சகிக்க இயலாதவர்களாகவும் காணப்படுகின்றனர். மக்கள் மேனாட்டுமுறை வாழ்க்கைக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றனரா, கிறிஸ்தவ பண்பாட்டில் வளர பயிற்றுவிக்கப் படுகின்றனரா என்ற வினாவுக்கு நாம் என்ன விடை கொடுக்க முடியும்?

திருச்சபையிலும் நிறுவனங்களிலும் பணிபுரிகிறவர்களில் உண்மையான தியாக சிந்தையுடன் பணிபுரிகிறவர்கள் மிகச் சொற்பப் பேர் மட்டுமேயாவர். பெரும்பான்மையோர் சம்பள உயர்வையும், உத்தியோக உயர்வையும், அதிகார உயர்வையுமே எதிர்நோக்கி உழைக்கின்றனர். ஆண்டவருக்கு ஊழியஞ்செய்கிறேன் என்று கூறியும் ஆண்டவருக்காக ஒன்றையும் விட மனமற்றவர்களைத்தான் எங்கும் காண்கிறோம். இயேசு கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றியும், கடவுளின் அன்பைப் பற்றியும் கூறுபவர்களின் வாழ்க்கையில் சிலுவையையும், அன்பையும் காணாவிடில் மக்கள் எப்படி மனந்திரும்புவார்கள்? "சுவிசேஷத்தைப் பிரசங்கியாவிட்டால் எனக்கு ஐயோ" என்ற உணர்ச்சி தென் இந்திய திருச்சபையில் ஏற்படாவிட்டால் தான் அழைக்கப்பட்ட அழைப்பை நிறைவேற்ற முடியாமல் அது ஒரு இயந்திரமாக மட்டும் இயங்கிக் கொண்டிருக்கும்.

மேலும், எந்தந்த நாடுகளிலிருந்து தென் இந்தியாவுக்கு நற்செய்தி கொண்டு வரப்பட்டதோ அந்த நாடுகளிலுள்ள சபைகளுக்குத் தென் இந்திய திருச்சபை ஊழியத்தில் ஒத்துழைப்பைக் காட்ட கடமைப்பட்டுள்ளது. ஆளிலும் பொருளிலும் உதவக்கூடிய நிலைக்கு தென் இந்திய திருச்சபை வளருமானால் அது ஒரு பெரும் பாக்கியமாகும். பிற 'நாட்டினரோடுள்ள நல் எண்ணம் விருத்தியடைவது இன்றியமையாதது. நாம் அயல் நாட்டினரிடமிருந்து பல காரியங்களை அறிந்தது போல தென் இந்திய திருச்சபையிலிருந்தும் அவர்கள்

அறியக்கூடிய அளவுக்குத் தென் இந்திய திருச்சபை வளர வேண்டும். மேநாட்டு சமய தூதுவர்கள் அபூர்வமாகிக் கொண்டு வரும் இக்காலத்தில், பேராயர் நியூபிகின் கூறுவதுபோல தென் இந்திய சபை உண்மையில் கடவுளின் வீடாக அமைதல் முக்கியம் திருச்சபை முழுவதும் ஒரு வீடாக இயங்குவது எவ்வளவு சிறப்பானது. கிறிஸ்தவர்கள் தங்களை இந்தியரென்றோ. ஆங்கிலேயரென்றோ, அமெரிக்கரென்றோ கூறாமல் கிறிஸ்துவுக்குள் சகோதரர் என்று கூறுவதில் மேன்மைபாராட்டும் காலமல்லவா பொற்காலம்.

திருச்சபை ஒருமைப்பாட்டைப் பொறுத்த அளவில் தென் இந்திய திருச்சபை அதிகமாக வளர வேண்டியதாயிருக்கிறது. '**ஒரு புது படைப்பு**' என்று கூறத்தக்கதாகக் கூட்டுறவில் இன்னும் அதிகம் வளர வேண்டியாதாயிருக்கிறது இருபத்தைந்து ஆண்டுகள் சென்ற பின்னரும் லுத்தரன், பாப்திஸ்து, மார்த்தோமா சபைகளோடுள்ள ஒருமைப்பாட்டு விஷயத்தில் இன்னும் முடிவு காணப்படவில்லை. தென் இந்திய சபையும் லுத்தரன் சபையும் இணைந்து "**தென் இந்தியாவில் கிறிஸ்து சபை**" என்றுப் பெயரால் இயங்கும் போது ஒருமைப்பாட்டில் முன்னேற்றம் காணப்படும்.

அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் '**தென் இந்தியாவில் கிறிஸ்து சபை**' என்ற ஒருமைப்பாட்டுச் சபையாக மட்டுமல்ல உரோமன் கத்தோலிக்கரும் புராட்டஸ்தந்தினரும் ஒன்றுபட்டு, '**இந்திய சபையாக**' இயங்குவதையும் எதிர் நோக்கவேண்டும்.

திருச்சபையின் நற்செய்திப்பணி சிறப்புடன் செய்யப்பட பிரிந்திருக்கும் சபைகள் இந்தியாவில் ஒன்றுபடுவது மிகவும் ஆத்திரமானது. அத்துடன் சபைக்குள்ளான போதகப்பணியிலும் ஒரே அமைப்பு ஒருமைப்பாட்டினால் வரும் ஒரு பயனாகும். பேராயர் ஆளுகை முறை சபை அமைப்புக்கு ஒரு அலங்காரமான கிரீடமாக அமைகின்றது. இக்காலத்துத் தேவைக்குத் தக்கபடி ஊதியமின்றி பணி செய்கிற சுயேச்சை குருக்களும் திருச்சபைக்கு அவசியம்

தேவை. நிறுவனங்களில் இத்தகைய சுயேச்சை குருக்களின் சேவை இக்காலத்தில் பல துறைகளில் அதிகமாக பயன்படும். சென்ற நூற்றாண்டில் மருத்துவ சுவிசேஷகர்கள் மருத்துவ நிலையங்களில் சிறப்பான பணியாற்றினார்கள். இறையியல் பயிற்சியும் மருத்துவ பயிற்சியும் பெற்று குருப்பட்டம் பெற்ற மருத்துவர்களைத தென் இந்திய திருச்சபை பிறப்பித்தால் அது மெச்சப்படத்தக்கதாகும். இவ்வாறு எல்லா துறைகளிலும் இறையியற் பயிற்சி பெற்று குருப்பட்டம் பெற்றவர்கள் இருந்தால் கடவுள் ராஜ்யம் பரம்புவதற்கு அது ஏற்ற முறையாகும். உரோமன் கத்தோலிக்க சபை இம். முறையைக் கையாடுவது கவனிக்கத்தக்கது.

பெண்கள் போதகாபிஷேகம் பெறுவதைப்பற்றி இக் காலத்தில் அதிகமாகப் பேசப்படுகிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் தென் இந்திய திருச்சபையின் பெண்கள் பலர் சமையல் அறையை விட்டு வெளிவந்து சபையிலும் சமூகத்தலும் சிறந்த பணிகள் புரிந்தது உண்மை. நம் நாடு பெண்களின் நிலையை உயர்த்த முனைகிறது. ஆனால் கிறிஸ்தவ சமயம் அதற்கு முன்னேயே பண்களின் நிலையை உயாத்தியுள்ளது. “**கிறிஸ்துவுக்குள் ஆணென்றுமில்லை பெண்ணென்றுமில்லை**". ஆணுக்கும் பெண்ணுக்கும் சமநிதி உண்டென்பதை ஒத்துக்கொள்ளுகிறோம். எனினும், ஆண்களுக்குரிய நிலைவேறு; பெண்களுக்குரிய நிலைவேறு. இதை முதலாவது இல்லற வாழ்க்கையில் காண்கிறோம். பெண்களுக்கு குருப்பட்டம் கொடுக்கவேண்டுமென்று கூறுகிறவர்கள் பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்தே பெண் தீர்க்கதரிசினிகள் இருந்தனரென்றும், பெண்கள் ஆண்டவருக்குச் சிறப்பான பணிபுரிந்துள்ளனரென்றும் கூறுகின்றனர். மேலும், பெண்களில் திறமையுள்ளவர்கள் ஆண்களைவிட சிறப்பான குருத்துவப்பணி செய்யக்கூடும் என்கின்றனர். பெண்களுகுக் குருப்பட்டம் கொடுக்கலாகாதென்று கூறுகிறவர்கள் பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்தே பெண்கள் தீர்க்கதரிசினிகளாயிருந்தாலும் ஆசாரியர்களாயிருக்கவில்லை.

பவுல் அப்போஸ்தலனும் ஸ்திரீகள் சபையில் பேசாதிருக்கக் கட்டளையிட்டாரென்று கூறுகின்றனர். நம் நாட்டைப் பொறுத்த அளவிலும் இதர சமய எண்ணங்களையும் இந்திய பழக்க வழக்கங்களைப் பொறுத்த அளவிலும் ஆண்கள் குருத்துவப் பணி செய்வது நன்று. ஆண்டவரின் சேவைக்குத் தங்களை அர்ப்பணித்த பெண்கள் உதவிக்காரிகளாகப் (**Deaconess**) பணி புரியலாம்.

1948–இல் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் ஐக்கிய சங்கத்தில் காரல் கிரஹாம் உதவிக்காரி (**Deaconess**) ஆக்க செயலாளராகப் பணிபுரிந்தனர். 1952–இல் தென் இந்திய சபையில் சகோதரிகள் வரிசையும் ரற்படுத்தப்பட்டது. பல பெண்கள் இதில் சேர்ந்து ஆண்டவரின் சேவையில் ஈடுபடுகின்றனர். பல திருமண்டிலங்களில் குழுக்களில் பெண்கள் பணிபுரிகின்றனர். தென் இந்திய ஐக்கிய சபையின் பேரவையின் செயலாளர்களாகவும் பெண்கள் பணி புரிய ஆரம்பித்துவிட்டனர். இத்தகைய பணிகளில் பெண்கள் பங்கு பெற்று கடவுள் ராஜ்யத்தைப் பரவச் செய்வதில் ஊக்கு விக்கப்படுவது சாலவும் சிறந்தது. பணியே முக்கிய மேயன்றி அதிகாரமும் பதவியுமல்ல.

சபைமக்களில் ஒவ்வொருவம் திருச்சபையின் பணிகளில் ஈடுபட வேண்டியவர்களென்பதை அதிகமாக உற்சாகப்படுத்துதல் மிகத் தேவையாயிருக்கிறது குருத்துவப் பட்டம் பெற்றர்கள் தான் பணிபுரிய முடியும் என்றும் எண்ணம் நீங்கவேண்டும். ’ஒவ்வொரு கிறிஸ்தவனும் சாட்சி, என்பது தென் இந்திய திருச்சபையில் அதிகமாய் வலியுறுத்தப்பட வேண்டும்.

சபை மக்களுக்குள் இத்தகைய ஆர்வம் உண்டாக்குவதற்குத் தொழுகை மிக அவசியமானது, உலகமெங்குமுள்ள சபைகளில் தொழுகை முறைகள் மாறிக்கொண்டு வருகின்றன. தொழுகை அர்த்தமுள்ளதாயும், பங்கு பெறுகிறவர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடுள்ள உறவை பலப் படுத்துவதற்கு ஏதுவாயும் இருக்கும் பொழுதுதான் சபையார் கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்படைத்து

சாட்சியிலும் சேவையிலும் வளரமுடியும்.

தொழுகையில் திருமுழுக்கு தேவையா என்றும் வினா இப்பொழுது கேட்கப்படுகிறது, தென் இந்திய திருச்சபை திருமுழுக்கை முக்கியமானதாய்க கொண்டுள்ளது. திருமுழுக்கு, பரிசுத்த நற்கருணை ஆகிய இரு சாக்கிரமந்துகள் ஒருமைப்பாட்டிற்கு அடிப்படையானவற்றில் ஒன்றாகும், தென் இந்திய திருச்சபை மீண்டும் திருமுழுக்கு பெறுவதை எதிர்த்தாலும் முழுகி திருமுழுக்கு பெறுதலும் அடையலாம் என்று கூறியிருப்பது முழுக்குஸ்நானத்தில் ஏதோ ஒரு விசேஷம் இருப்பதுபோல் தவறாய் நினைக்கத் தூண்டுவதாயிருக்கிறது.

திருமுழுக்கு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் அடிப்படையில் முக்கியமானது. அது நிறைவேறுதலுக்குமுன் ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய ஒன்று, கிறிஸ்து சிலுவை மரணத்தை நிறைவேற்றுமுன் திருமுழுக்கை ஏற்றுக்கொள்ளுவது நல்லதென்று கண்டார். அதுசிலுவை மரணத்தினால் ஏற்படும் மீட்புக்கு அவசியம் என்று எண்ணி இயேசுகிறிஸ்து யோவானால் திருமுழுக்கு பெறவில்லை, குழந்தைகள் திருமுழுக்கு பெறும்போது வருங்காலத்தில் இயேசுகிறிஸ்துவாலுண்டாகும் மீட்பு அவர்களில் நிறைவேறுவதற்குப் பெற்றோர் இப்பொழுது அஸ்திபாரமிடுகின்றனர். இத்தகைய செயல் புதிய சிருஷ்டியாக்குவதற்கு வழிவகுப்பதால் எத்தனை பெரிய செயலாகும் ? தென் இந்திய திருச்சபை இந்த அடிப்படை விசுவாசத்தில் நிநிலைநிற்பது இன்றியமையாதது.


திருமறை மீட்புக்குத்தேவையான யாவற்றையும் அடங்கப்பெற்றுள்ளது என்றும், வாழ்க்கைக்கு மாபெரும் அளவு கோல் என்றும் தென் இந்திய திருச்சபை நம்பி ஒருமைப்பாட்டிற்கு ஒரு ஆதாரமாய்க் கொண்டுள்ளது. சீர்திருத்த தலைவர்கள் வலியுறுத்தின இச்சத்தியம் பாதுகாக்கப்படாதிருந்தால் கிறிஸ்தவ விசுவாசத்திற்குப் பங்கம் ஏற்பட்டு விடும். இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட உண்மையின் அடிப்படையில் திருமறையைக் கடவுளின் வார்த்தையாகப்

போதிப்பதையும் பின்பற்றப்படுவதையும் ஊக்குவிக்க வேண்டியது தென் இந்திய திருச்சபையின் கடமையாகும்.


ஒரு புதிய இந்தியா உருவாக்கப்பட வேண்டியது. இந்தியாவின் பெரும் தேவை. மாற்றி அமைக்கப்பட்டு, மறுரூபமடைந்து, மகிமையடையும் நிலையைக் காட்டுவதற்குத் திருச்சபையையன்றி வேறெந்த சமூகத்திற்குச் சாத்தியமானது ? தென் இந்திய திருச்சபை வருங்காலத்தில் இம்மாபெரும் பொறுப்பை நிறைவேற்றுமா ?

# அனுபந்தம்

## தென் இந்திய திருச்சபையின் திருமண்டிலங்கள்



THE INAUGURATION OF THE CHURCH OF SOUTH INDIA,
ST. GEORGE'S CATHEDRAL, MADRAS, 27th SEPTEMBER, 1947



THE SOLEMN DECLARATION OF UNION



*At the inauguration of Church of South India. Photo by Mark Kauffman (LIFE magazine)*











THE CONSECRATION OF ONE OF THE NEW BISHOPS





*Presiding Bishop Rt. Revd. C. K. Jacob at the Inauguration of Church of South India.*




*Clergymen from 5 Protestant faiths attending the inaguration of the Church of South India.*

உங்களது கருத்துக்களை எங்களுக்கு தெரிவிக்கலாம்

Tinnevelly Christian Historical Society
2-2-3(4), North Street,
Bungalow Surandai – 627859
Tenkasi District
Email : christianhistorical@gmail.com
Call : 04633 290401
+91 9176780001
+91 7538812218
christianhistoricalsociety.in
tchsportal.co.in


# Christian Historical Society


## Focus Series

Enrich, Engage, Empower Christian Knowledge

Free E- books for Christian Readers














If you want these books in free ping us on
+91 9176780001




Comming Soon





**கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, மீட்பரும், உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நம் மத்தியில் ஆண்டவரின் ஊழியத்தினை செய்த உத்தமர்களை அடையாளம் கண்டு, இருளிலே மறைந்துக் கிடந்த அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்ற பெரிய ஆவலோடு கூட இவ்வுழியத்தினை ஆரம்பித்தோம். ஆரம்பித்த நாள் முதற்கொண்டு மிக சிறப்பான ஆதரவையும், உற்சாகத்தையும் கொடுத்துவரும் எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உங்கள் பகுதியில் பணி செய்த மிஷனெரிகள், குருவானவர்கள், சபை ஊழியர்கள் மற்றும் சுதேசி ஊழியர்கள் என வெளி உலகிற்கு தெரியாதவர்களை மற்றவர்களுக்கு ஆய்வு மூலம் அறிமுகப்படுத்த அன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**"வரலாற்றுச் சுவடுகள்''** புத்தகம் தொடர்ந்து வெளிவர ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் நண்பர்களுக்கு இப்புத்தகத்தினை *அறிமுகப்படுத்தி* அவர்களையும் சந்தாதாரர்களாக இணையுங்கள்.

**பதிப்பாசிரியர்**

**மாத இதழுக்கு தொடர்புகொள்ளவும்**

**+91 91767 80001**